
POOVARASU

# பூவரசு

தை 99





http://www.thamizham.net
FREE E-BOOKS (TAMIL)
பொள்ளாச்சி நசன்
913/09

வது ஆண்டு நிறைவு மலர்.

# படியுங்கள்!

# வெற்றிமணி

ஜெர்மனியிருந்து வெளியாகும் தமிழ்மாதப் பத்திரிகை!

தமிழ் எங்கள்
உயிருக்கு மேல்

Vettimaniy

பிரதான ஆசிரியர்
**மு.க.சிவகுமாரன்**



Am Hilgenhaus 38
58511 Lüdenscheid
Germany
Tel&Fax:
02352/45 88 62


**உலகமே நம் இல்லம்**
**உள்ளமெல்லாம் நம்சொந்தம்**


# பூவரசு

**இனிய தமிழ் ஏடு**
**இரு திங்கள் ஒன்று.**

8வது ஆண்டு நிறைவு மலர்


**இதழ்: 55**
**தை-மாசி 1999.**
Jan - Feb. '99
Poovarasu
Tamilische Kultur Magazin


பூவரசின் கலை இலக்கியப் பயணத்தில்
கைகோர்த்து ஆதரவு தரும்
அன்பு நெஞ்சங்களுக்கு
எமது இதயபூர்வமான நன்றிகள்.
நீண்ட பயணம் இது: இன்னும் நடப்போம்.




முகவரி:
**Poovarasu,**
**Sinniah Maheswaran,**
**Otto Brenner Allee 56,**
**28325 Bremen,**
**Germany.**


**-பூவரசு கலை இலக்கியப் பேரவை-ஜெர்மனி.**

# அன்பு வாசக நெஞ்சங்களுக்கு!

வணக்கம்.

பூவரசு தனது கலை இலக்கியப் பணியில் எட்டாவது ஆண்டை நிறைவுசெய்து இந்த இதழிலிருந்து தனது ஒன்பதாவது ஆண்டுக்கான கலை இலக்கியப் பணியில் காலடி பதிக்கிறது.

உங்கள் அன்பும் ஆதரவும் உள்ளவரையில் பூவரசு உயிர்வாழும். தன் பணியைத் தளராது தொடரும் என்று முன்னர் நான் உங்களுக்கு அளித்த வாக்குறுதியை என்னால் இயலக்கூடியவரையில் காப்பாற்றி வருகிறேன்.

எனினும் பரந்துபட்ட அளவில் இது இன்னும் வாசகர்களைத் தேடிச் செல்லவில்லை என்று பல வாசகர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

புலம்பெயர்மண்ணில் ஒரு தமிழ்எழுத்தாளனாய், சஞ்சிகையாளனாய் நான் எதிர்கொள்ளவேண்டிய சவால்களை வென்று பூவரசை என்னால் தொடர்ந்தும் வெளியிடமுடிகிறது என்றால் அதற்கு மூலவேர்கள் வாசகர்களாகிய நீங்களே என்பதுதான் உண்மை.

இதற்கு ஊட்டச்சத்து உங்கள் ஆதரவுதான்.

வந்து குவிந்திருக்கிற உங்கள் வாழ்த்துச்செய்திகள் பூவரசுமீது உங்களுக்குள்ள அக்கறையையும் அன்பையும் வெளிப்படுத்துகின்றன.

வாழ்த்துக்களோடு பூவரசு தொடர்ந்தும் வளர உங்கள் ஒத்துழைப்பை உரிமையோடு கோருகிறேன்.

பூவரசு இன்னும் பரவலாக வாசிக்கப்படுவதற்கு உங்கள் ஒத்துழைப்பைத் தாருங்கள். கலை இலக்கிய ஆர்வமுள்ள உங்கள் நண்பர்களுக்கும் பூவரசை அறிமுகப்படுத்தி அவர்களும் பூவரசில் அக்கறைகொள்ள உதவுங்கள்.

ஆண்டுதோறும் நடாத்தப்படும் கலை இலக்கியப் பெருவிழா இந்த ஆண்டு நடாத்தப்படவில்லை. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகள் தபால்மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன.

இந்த ஆண்டு சில முக்கிய கலை இலக்கியப் பணிகளை உங்கள் ஆதரவோடு பூவரசு தொடரும்!

தொடர்வோம்.

அன்புடன்
உங்கள்
இந்துமகேஷ்.
(ஆசிரியர், பூவரசு)



நினைவுக்கொரு நிலையானது
உன் தோற்றம்.

தாய் மண்ணையும் தாய் மொழியையும்
நினைவூட்ட
உன்பெயரை அமைத்துக்கொண்ட
பூவரசே!
தமிழினத்தின் நெஞ்சங்களில்
நினைவுக்கொரு நிலையானது
உன் தோற்றம்.
முதிர்ந்த எழுத்தாளர்களோடு
வளர்ந்துவரும் கலைஞர்களையும்
இளந்தளிர்களையும் உன்னருகே
ஈர்த்துக்கொண்ட நீ
பல்லாண்டு காலம் வாழ,
வாழ்த்துகிறேன்.
வாழ்க பூவரசே!
வளர்க உனது சேவை.

— க.விக்கி
(பிறேமன்,ஜேர்மனி)



பூவரசே! நீ வாழி!

எட்டாண்டுகளைக் கடந்துவிட்ட பூவரசே நீவாழ்க!
ஐரோப்பா மண்ணில் தமிழ் இலக்கியமணங்கமழும்
பூவரசே நீவாழ்க!
இன்னும் பல்லாண்டுகள் நீ இலக்கியமணம்வீசி
எழிலாக வளர்ந்தோங்கவேண்டுமென்று
என் இதய பூர்வமாக வாழ்த்துகின்றேன்.


திருமதி பத்மா ஞானப்பிரகாசம்
(அவுஸ்திரேலியா)



புலம்பெயர் மண்ணில்
பூத்த அரும்பு- இன்று
இகமெங்கும் மணம்பரப்பி -
எங்கள்
இளந்தளிர்களுக்கும்...
இதழ்விரித்து நிற்கும் பூவரசே...!
ஆண்டுகள்எட்டை நிறைத்து...
அன்னியமண்ணில்- உன்
தொடர் பயணம்- ஓர்
அரிய சாதனையே...!

இலக்கியச் சுவைதேடும் இதயங்களுக்கு
இட்டுவைத்த இனிப்பு நீ...
எழுத்துலகில் கால்பதிக்க
எண்ணுவோர்க்கு
கட்டிவைத்த களம்நீ...
தொட்டுப்பார்ப்போர்க்கு- உன்
சுவை தெரியாது.
தொடர்ந்து பார்ப்போர்க்கே
சொந்தம் அது.
உன்பணி மென்மேலும்
தொடர்ந்து சிறக்க
என் இதயம் நிறைந்த
நல்வாழ்த்துக்கள்...!

அன்புடன்
கொற்றையூர் வாசன்.




பூவரசே!
உன் வயது எட்டா...?
எத்தனை ஆனந்தம் எமக்கு!
அழகுத் தமிழால்
உன்னை வளர்த்த
இந்துமகேஷ் அண்ணாவிற்கும்
எம் வாழ்த்துக்கள்.
பூவரசே! நீ
பற்பல ஆண்டு
இப் பாரினில் விறுநடைபோட
எம் குடும்பத்தாரின் வாழ்த்துக்கள்...!

அன்புடன்
-திரு.திருமதி கிருபாகரன் தேவநம்பி
குடும்பத்தினர்

எட்டு ஆண்டைக்கடந்துவந்து
திக்கெட்டும் புகழ்பரப்பிவரும்
என் இனிய பூவரசுக்கு
என்இனிய வந்தனங்கள்.
நாம்வாழத் தமிழ்வாழும்
தமிழ்வாழ நாம்வாழ்வோம் என்ற
தாராள சிந்தனைகொண்டு
தரணியெங்கும் உலா வருகின்றாய்
படைப்பவர் ஆக்கம் தருக
படிப்பவர் ஊக்கம்தருக என்கின்ற
பண்பான வடிவம்கொண்டு
பார்முழுதும் பவனிவருகின்றாய்....
புலம்பெயர்ந்து நாம்
பல நாடுகளில் அகதிகளாய்
பலமொழிபேசிக்கொண்டதோடு
எம்மொழியைத் தொலைத்துக்கொண்டு
எம் கலாச்சாரங்களையும்
மறைத்துவிட்டு
எம்மினமானது வாழும் மத்தியில்
எம்மொழி கலாச்சாரத்தை
ஞாபகப்படுத்தும்
என் இனிய பூவரசுக்கு
என் கோடானகோடி வாழ்த்துக்கள்.

-ஸ்ரீகலா
(நெதர்லாந்து)





நீ வாழும் அரசே
நீங்கா நிழலே.

நவரத்தினங்கள் சேர்ந்துவரும்மாலையே
அவதரித்து எட்டு ஆண்டுகள்
பூத்திட்ட சோலையே
எவர்கள் எப்படியும் வாழலாம்-ஆனால்
இவர்கள்இப்படித்தான் வாழவேண்டும்
எங்கள் அகதிநிலைத்
தாக்கத்தின் மோதலில்
எங்கோ புரண்டு உருளும்மக்களுள்ளே
வாசனையை நேசிக்கும்
தேசத்து நேயர்கட்காய் உன்
வாசனையை வீசிவந்த
நேசமான பூவரசே
ஒன்றல்ல ஒன்பதாவது ஆண்டில்
இதழ்விரிக்கும் வசந்தமே
ஒய்யார நடைபயிலும்
பைந்தமிழின் சஞ்சிகையே
ஓங்கிய மலைகளில்
முட்டி மோதித் தடுமாறா
ஓயாத அலைகளில்
தள்ளாடி உருக்குலையா
ஓம்சக்திகலையாது அவள்
பொன்னடி பணிந்து
கலையதற்கு விலையேதும்
உண்டோவென
தலையாய நம்தமிழில்
மொழிபகர்ந்தாய் நீ.
கொஞ்சு தமிழை பலரும்
விஞ்சிடும் வண்ணத்தை
தஞ்சமடைந்த நாட்டில்
பிஞ்சுகளின் எண்ணத்தை
துஞ்சவிடாமல் பணிசெய்ய
அழைத்தாய் நீ
அஞ்சாமல் துஞ்சாமல்
தரணியில் பாங்கான-நம்
தமிழவள் கெஞ்சாமல்
அவள் சந்தன மேனிகமழ
பொன்னான காலங்கள்
வீணாகி விரயமாகா
பொங்கிடும் கடலின்
அலைபோல் அவள்
எந்நாளும் ஆர்ப்பரித்து
இசைபாடச் செய்தாய் நீ
முருங்கு பருத்துத்
தூணுக்குதவா-ஆனால்
உருவில் நீ சிறுத்தாலும்
கோடரிகொண்டு தறித்தாலும்
வெட்டவெட்டத் தழைத்து
வச்சாரம் கொண்டாய் நீ
வாழும் அரசே.
வருடாங்கள் எட்டில் உன்
வாழ்வின் நிழலில்
வளரும் குளிர்தென்றலில்
புதிதாய்ப் பூத்திட்டோம்.
வாழ்க! வளர்க!
பூவரசு பெயர்கொண்ட
நித்திலமே.

திரு.திருமதி ஜோர்ஜ்.
(ஹம், ஜெர்மனி)

நாலிரண்டு அகவைதனை
நலமுடனே நீ கடந்து...
நற்தமிழின் உயர்வுக்காய்- நீ
பட்ட துயர் எத்தனையோ...
எத்தனையோ..-இந்த
பனிகொட்டும் ஜெர்மனியில்...
அத்தனையும்.

வெட்டவெட்ட துளிர்க்கின்ற வீரமண்
ஈழமண் இனமென்று
கண்ட துயர் அத்தனையும்
கதிரோன் ஒளிகண்ட பனியாக்கி
கரைத்திட்டாய்
அந்நீரினிலே வளர்ந்திட்டாய்
என்னிதயப் பூவரசே..
நீ வாழ்க!
நின் பணி வாழ்க
நின் புகழ்வாழ்க...

அகவை ஒன்பதிலே நீ
அடிபதித்து தழைத்தோங்க
அன்னை தமிழ்த்தாய்
அரவணைத்து வாழ்த்துரைப்பாள்
அகல வேர்பதித்து
அகிலமெல்லாம்வெற்றிகொள்ள
உன்னாசான்
என்தம்பி இந்துமகேஷ்
என்றும் துணையிருப்பான்
அவன்வாழ்க..அவன் பணிவாழ்க...!

அன்றொருநாள்என்தந்தை
அடிவளவில்நட்ட தடி-இன்று நான்
எழுத்துலகில் கால்பதித்து உயர்வதற்கு
ஏணியாய் வந்ததுவோ?
என்றெண்ணி இருகரம்கொண்டு
மலரள்ளித் தூவி
இதயத்தால் வாழ்த்துகின்றேன்
பூவரசே வாழ்க நீ ஆண்டுகள் ஆயிரம்
வாழ்ந்திடும் தமிழர்கள்
அனைவரும் போற்றவே.

அன்புடன்
வேலணையூர் பொன்னண்ணா
(டென்மார்க்)

---

எங்கள் இனிய பூவரசே!
தை பிறந்தது
தென்றல் எழுந்தது
முல்லை மணக்கின்றது
மாங்குயில் பாடுகின்றது
இயற்கை எல்லாம் களிப்பிலே
துள்ளுகின்றது
மலரட்டும் எங்கள் பூவரசே!
உனது எட்டாவது பிறந்த நாளுக்கு
எங்கள் நல்வாழ்த்துக்கள்!
வாழ்க பல்லாண்டு வாழ்க!

-மாலினி குணராஜன்
(பிறேமன் ஜெர்மனி)

---

எட்டு வயதைக்கடந்த
எம்இனிய பூவரசே!
எட்டுத் திசையாவும்
உன்மணம் வீசட்டும்.
கவிஞர்க்கோர் களமமைத்தாய்.
எழுத்துக்கோர் இடம் கொடுத்தாய்
எழுத்தாளர் சிந்தனையில்
ஏணியாக நீ இருந்தாய்.
புதுமைக் கருவிற்கு
புகலிடமாய் நீ திகழ்ந்தாய்
மூட நம்பிக்கைக்கு
முற்றுப்புள்ளி வைத்து
சமுதாய சிந்தனைக்கு
சூளரம் நீயானாய்
இலைமறை காயாய்
இருக்கின்ற கலைஞர்க்கு
களம்ஒன்று நீகொடுத்து
காவிய மாகிவிட்டாய்
எழுத்தாளர் சிந்தனைக்கு
என்றும் ஊற்றாகி
எட்டாண்டு தவழ்ந்துவந்தாய்
இன்னும் நூறாண்டு நடைபோடு
எட்டுவயதான எம்மினிய பூவரசே
உன்சேவை என்றும்தொடரட்டும்
என்றென்றும்.

உன் இனிய வாசகன்.
அ.கணேசலிங்கம்.
(பிறேமன்,ஜெர்மனி)

---

உந்தன் நாமம் எந்தன் கீதம்- எழில்
பாடிடும் உன்புகழ் வேதம்- அந்த
வேதம் சிந்தையாவும் பற்றி பரந்திட
மகிழ்வுடன் வாழ்த்துகின்றேன்!

என் நெஞ்சில் என்றென்றென்றும் நீங்காத ஆசை
புத்தாண்டில் விழாக்கோலம் நாம்காணவேண்டும்
நித்தம்நீ மலராமல் சற்றே நீ துவண்டாலும்
வாடிடும் என்நெஞ்சம் சேய்போலவே

செந்தமிழ் துணைகொண்டு கவிபாடு அரசே!
கொஞ்சிடுவாள் தமிழ் அன்னையுன்னை-என்றும்
சுமந்திடுவாள் மடிமீதினிலே....

சத்தியம் காத்திடும் தத்துவன்புகழ்கூறும்
வித்தகமாய் நீயும் உன்பணிதொடர்ந்திட
வாழ்த்திடும் நெஞ்சங்கள் நிறைய உண்டு
முத்தான ஒளியோடு சுவையான தமிழுடன்
எப்போதும் உன்பணிதொடர்ந்திடுவாய்-என்றும்
அகிலத்தில் உன் நாதம் ஒலிக்கட்டுமே!

களத்தின் கதைசொல்லி வீர
மறவர்கள் புகழ்கூறும்
எழுச்சி திறன்மிகு பூவரசே!
ஓங்கட்டும் உன் செயல்!
வளரட்டும் உன்கலை!
வாழட்டும் உன்புகழ்!

-சக்திபாலா.
(பிறேமன்,ஜெர்மனி)

---

அந்நியமண்ணில் நாம் அகதிகளாய் இருந்தபோதும்
எம்தாய் மண்ணையும் தாய்மொழியையும் மறவாது
தமிழராம் எமக்கு தரமான ஓர் இலக்கிய சஞ்சிகை
அவசியம் தேவை என உணர்ந்து அதனை பூவரசாக
அழகுற அமைத்துத்தந்த ஆசிரியர் திரு.இந்துமகேஷின்
பணி மேலும் வளர்க!
ஆண்டுகள் எட்டாகியும் அழகுதமிழ்பரப்பும் பூவரசே
என்றும் நீ புதுப்பொலிவுடன் விளங்கவேண்டுமென்று
மனதார வாழ்த்துகின்றோம்.

அன்புடன்
ஜோன்சன் சகோதரர்கள்.
(லெங்கேட,ஜெர்மனி)

## வாழி நலம்...நீடு...

பூப் பூவாய் பூமலரும் பூவரசம் பூவே
வாய்ப்பூவால் மனமுவந்து வாழ்த்துகிறேன்
தாய்மண்ணின் வாசனையை மேனியிலே சுமந்து
சந்தனமாய் எங்கள் நெஞ்சில் நீடு நிலைப்பாயே!

கல்வியுடன்அறிவியல் கட்டுரைகள் தாங்கி இனி
காணும் புது உலகினிலே கருத்துக்களைத்தருக
பல்லறிவு விஞ்ஞானம் இளந்தளிரில் மலர்ந்து இனி
பாலர்களை உன்வசமாய் பற்றிநிற்பாயே
தொல்லுலகின் சுவை ததும்பும் சுவைமிகு இலக்கியங்கள்
இவ்வுலகம் அறிந்துகொள்ள இயம்பிடுவாய் தமிழில்.

உலகமெலாம் நம்வீடு உள்ளமெலாம் நம்சொந்தம்
அகிலமெலாம் தமிழ் வளர்த்து அன்பாக ஒன்றிணைவோம்.
மனிதநேயம் மலரவேண்டும் மனிதர்கள் வாழவேண்டும்.
சம உரிமை மலரவேண்டும் சமநீதி தழைக்கவேண்டும்:
வரும்புயலை எதிர்க்கின்ற மனத்துணிவு எமக்கிருந்தால்
நெருப்பாற்றைக் கடக்கவும் நெஞ்சிலோர் பயம் வராது
இளைஞர் யுகம் மலரவேண்டும
புதுமைப்பொழுது புலர வேண்டும்
வறுமைகொடுமை இல்லாமை இவை
நம்வாழ்விலிருந்து மறைய வேண்டும்.

பெண்மைபெருமை அடையவேண்டும்பல
பேதங்கள் எம்மில் நீங்கவேண்டும்
உண்மைதழைக்கப் புதிய ஆண்டில்
உயர்வு பலவும் செழுமைபேணும்
தன்னையுணர்ந்து பணியில் இறங்கு
தருமம் வெல்லும் உதயம்தோன்றும்

எங்கிருந்தாலும் என் இதயம் உன்னை
பொங்கி நிறைய புகழ்ந்து வாழ்த்தும்
எட்டாவது ஆண்டுதாண்டி எட்டி நடைபோடும்
சிட்டே பூவரசே சிறந்து நீவாழ எம்வாழ்த்துக்கள்!

-அ.வேணுகோபாலன்
(லண்டன்)



எட்டாண்டுகள் நிறைவுசெய்த பூவரசே!
புலம்பெயர் மண்ணில் புதுப்புது அர்த்தங்கள் தந்தாய்!
வலம்வந்து தமிழ்மணம் தந்து மணந்தாய்!
மனங்களில் மதி ஒளிதந்து நிறைந்தாய்!
தாய்மனதோடு தமிழ்க் கரங்களை அணைத்தாய்!
நீ ஒளிர்ந்தாய்! சிறந்தாய்! படைத்தாய் பல...
இனி... புகலிடத் தமிழின்
பெருந்தாய் என என்றும் நிலைப்பாய்!!

அன்புடன்
இராஜன் முருகவேல்.


## வாழ்த்துகிறோம்!

பூவரசு இனிய தமிழ்ஏடு எட்டாவது ஆண்டு நிறைவைக்
கொண்டாடுவதை மனமாரப் பாராட்டுகிறோம்:
புலம்பெயர்ந்த தமிழர் மத்தியில் தாங்கள்
படைத்துவரும் கலை,இலக்கிய சாதனைகள்
பாராட்டுக்குரியவை மட்டுமல்ல வரலாற்றிலும்
இடம்பெறும் என்பது திண்ணம்.
சஞ்சிகை வெளியீடு என்பது எத்தகைய சோதனைகள்
வேதனைகள் நிறைந்தது என்பதை நாம் நன்கு
அறிவோம். இச்சோதனைகளைக் கடந்து கடந்த எட்டு
ஆண்டுகளாக சஞ்சிகையை வெளியிட்டு வருவது
சாதாரண சாதனையல்ல.
புலம்பெயர் நாடுகளில் பல சஞ்சிகைகள்
வெளிவந்துகொண்டிருக்கும் இவ்வேளையில்
பூவரசானது கலை, இலக்கியப் பணியில் தனித்துவமாக
வெளிவந்து இனிய தமிழுக்கும், தமிழ்ச்
சிறார்களுக்கும், ஆக்கதாரர்களுக்கும்,
வாசகர்களுக்கும் சேவைசெய்யவேண்டுமென
வாழ்த்துகிறோம்!

வ.சிவராசா
(ஆசிரியர் மண் சஞ்சிகை)

# அழகியல் வேறுபாடுகள்.

மு.க.சு.சிவகுமாரன்




மனதலின் உணர்வை பலவகைகளாக வகுத்து அழகினால் வரும் ஆபத்தை ஓரளவு தடுத்தபின்னரே அழகினை உருவாக்கினான் இறைவன். இருந்தும் பல இடங்களில் இந்த அழகு பலருக்கு ஒரே கோட்டில் வெளிப்பட்டதால் அழகில் போட்டிகள் ஏற்பட்டதை நாம் காணலாம். ஆகலிகையின் அழகு முற்றும் துறந்த முனிவருக்கு மட்டும் அல்ல அந்த இந்திரனு க்கும் அழகாகத் தெரிந்ததுதான் முனிவரின் சாபத்திற்கு இருவரும் இலக்காகக் காரணம்.

ஏன் அகலிகை! நாம் வாழ்கை யில் இன்று காண்பதை பாருங்கள். தேவதை என்பார்களே அவள் இவள்தானோ என எண்ணும் அளவிற்கு பூத்துக் குலுங்கும் பெண் ஒருத்தி, தான் அழகன் எனத் தேர்ந்தெடுத்து மணமுடிக கும் ஆண் அழகனைப் பாருங்கள். அந்த தேவதைக்கு எந்த வழியிலும் பொருத்தமில்லாத ஒரு ஆண் மகனாக பலருக்கு கண்ணுக்கு தெரி வதைக் காணலாம். அப்படி என்றால் அவளின் தேர்வு எந்த அளவு கோலினால் ஆனது?

இங்கேதான் நாம் அழகியல் வேறுபாடுகளைக் காண்கின்றோம்.

ஒரு அறையில் அழகிய நான்கு கதிரைகள் உண்டு என்று சொல்வோமேயானால் உடனடியாகச்சென்று அந்தக் கதிரை களை ஒன்று இரண்டு மூன்று நான்கு என எண்ணிச் சரி நான்கு கதிரைகள் தான் உண்டு என்று சொல்லவிடலாம். ஆனால் இங்கே வெறும் நான்கு கதிரை என்று சொல்லவில்லையே! நான்கு அழகிய கதிரைகள் என்றல்லவா சொல்லப்படுகிறது. கதிரையை எண்ணிப்பார்தவர்களில் நாலவர் நான்கு கதிரையும் உண்டு அவை அழகாகவும் இருக்கின்றன என்கின்றனர். மற்ற இருவர் நான்கு கதிரைகள் உண்டுதான் ஆனால் அவை அழகாக இருப்பதாகச் சொல்ல முடியவில்லையே என்கின்றனர்.




அழகு என்னும் போது அது கணிதம் போன்று பார்ப்பவர் எல்லோருக்கு ஒத்தவிடையாக வருவதில்லை. எனவே நமது கலை வெளிப்பாடுகளை மக்கள் ஒரே கோணத்தில் பார்த்து ஓகோ! எனப் பாராட்டுவார்கள் என எண்ணுவது தவறாகும்.



அழகியல் வேறுபாடுகள்.

மு.க.சு.சிவகுமாரன்



வளரவேண்டிய கலைஞர்கள் முதலில் தனது தனித்துவத்தில் திடநம்பிக்கை கொள்ள வேண்டும் .அடுத்து அதனை இரசிக்கும் அளவிற்கு மக்களின் கலை இரசனையை வளர்க்கவேண்டு. இந்த வளர்த்தல் என்பது எமது விடாமுற்சியில் உள்ளது. எமது தன்னலம் கருதாத சேவையில் உள்ளது.

ஒரு புதியபாடல் நீங்கள் கேட்ட மாத்திரத்தில் உங்கள் மனதைத் தொட்டுவிடுகிறது என்றால் அதன் இசை உங்கள் மனதோடு ஒன்றியிருக்கிறது என்று பொருள். சில நாட்களாகக் கேட்டபின்னர் அந்தப்பாடல் உங்கள் மனதைத் தொட்டு விடுவதாக உணர்ந்தால் உங்கள் உள்ளத்தில் சிதறிக்கிடந்த அந்த பாடலின் இசைக்கான உணர்வுகள் தற்போதுதான் சீராக ஒழுங்காக்கப்பட்டுஉள்ளது என்று பொருள். பல தடவைகேட்டும் அப்பாடல் உங்கள் மனதுடன் சேரவில்லை என்றால் உங்கள் மனதில் அந்த இசைக்கான சில உணர்வு வலையங்கள் அறவே உங்களிடம் இல்லை என்பதே பொருள். அந்த உணர்வு இல்லை என்பதால் நீங்கள் ஒரு சிறந்த கலாரசிகை அல்ல என்பது பொருள் அல்ல. அந்த இசைக்கும் உங்களுக்கும் ஈடுபாடு வெகுதூரம் என்றுமட்டும் கொள் ளலாம்.

இந்தத் தூரத்தை நாம் எப்படி குறைப்பது இதனை அறிந்து கொண்டால் உங்கள் புதிய வெளிப்பாடுகள் வெற்றி பெறும்.

இதற்கு நாம் கண்கூடாகக் கண்டவற்றைப் பார்ப்போம். தாயகத்தில் இருந்து வெளிவரும் ஓவியங்களைப் பாருங்கள் அவை எவ்வளவு விமர்சனங்களையும் கடந்து இன்று ஈழத்தவர்களின் படைப்புக்கள் என்றால். இப்படித்தான் இருக்கும் என்ற அளவிற்கு தனித்துவமான ஓவியங்களாக, மலர இருக்கும் தாயகத்தின் கலைகலாச்சார முத்திரையாக உயர்ந்து நிற்பதைக்காணலாம்.

எனவே உண்மையாக உங்களிடம் உள்ள எந்த க்கலையையும் நீங்கள் மற்ற வர்கள் விரும்புகிறார்களோ? இல்லையோ என்பதற்கா மாற்றிக்கொள்ளத்தேவை இல்லை. நீங்கள் மற்றவர்கள் உங்கள் தனித்தவத்தை இனம் கண்டு அவர்கள் மனதில் பதியவைக்கும் வண்ணம் உங்கள் உழைப்பை செலவு செய்யலாம். இதனால் எம்மக்களின் கலை இரசனைகள் விரிவடையும்.

**ஒரு கலைஞனுக்கு புதுமைகளை வெளிப் படத்துவதில் எவ்வளவு ஆர்வம் இருக்குமோ அதே அளவு ஆர்வம் நம்மக்களின் கலை இரசனையை உயர்த்துவதிலும் இருக்க வேண்டும்.**

இந்த இதழில் இடம்பெற்றுள்ள
சித்திரங்களை வரைந்தவர்கள்

கண்ணா- அருண்- ஸ்ரீரஞ்சனி- இரத்தினம்- பிரசன்னா.

## தர்மம் வெல்லும் நாளை எண்ணி...

யாழ்நகர அழகெல்லாம் போச்சு
பாழடைந்த பூமியென்றே ஆச்சு- நாம்
வாழ்ந்த பூமி உருக்குலைந்து போச்சு
நாளுமிங்கு பிணவாடை வீச்சு

மனிதநேயம் எப்போதோ பறந்தாச்சு
புனித ஸ்தலமும் சுடகாடாய்ப் போச்சு
தமிழர்களின் வாழ்விடங்கள்
சிறைக்கூடம் தனிலாச்சு

காணாமல்ப் போனவர்கள்
பட்டியல் நீண்டாச்சு
கண்ணிவெடி இங்கு பலர்
கால்களைத் தின்றாச்சு

இன்னுமிங்கு மனிதநேயம்
வாழுவதாய் எங்கோ பேச்சு

ஆவிகளின் கதைகள் கேட்டு
பயந்த காலம் என்றோ போச்சு
பேய்களோடு நாங்களின்று
வாழும்காலம் தினமிங்காச்சு



விதம்விதமாய் எங்கள்மாதர்
புடவைகட்டிய காலம் போச்சு
விதவைக்கோல வெண் உடையில்
நித்தமிங்கு கலங்கலாச்சு

சொந்தவீட்டில் அகதிகளாய்
எங்கள்வாழ்வு தினமிங்காச்சு
சொந்தமொழி பேசுதற்கும்
இங்கு தடை திணிச்சாச்சு

வன்னியிலே எங்கள் மக்கள்
கண்ணீரிலே கலங்கலாச்சு
உண்பதற்கு ஏதுமின்றி
உடல்நலிந்து சாகலாச்சு

மேலைநாட்டில் வாழுகின்ற
நம்தமிழர் ஊர்வலங்கள்
அந்த நாட்டுக் கமராக்கண்ணில்
எட்டிடாத தூரத்திலாச்சு

மனித உரிமை பேசுதற்கு-உலகில்
மன்றங்கள் பல உருவாக்கியாச்சு
தமிழன் உரிமை பேசுதற்கு
எந்த மன்றமும் இல்லாமல் போச்சு

கடந்து வந்த காலங்களில்
தர்மம் மட்டுமே வென்றதாய் பேச்சு
அதர்மம் அழியும் நாளையெண்ணி
காத்திருக்குது எங்களின் மூச்சு

**-வன்னேரியூர் பொன்.சிவா.**
(எபர்கண்ட், நோர்வே)



எத்தனை புயல்களை நீ சமாளித்துக் கடந்தாய் என்பதுபற்றி உலகத்துக்குக் கவலையில்லை. கப்பலைப் பத்திரமாய்க் கரைக்குக்கொண்டுவந்து சேர்த்தாயா என்பது பற்றியே அதற்குக் கவலை.

-வில்லியம் மீக்லி.

எப்பொழுதும் கீழே விழாமல் இருப்பது புகழுக்குரியது அல்ல. விழும்போதெல்லாம் விழித்தெழுவது தான் பெரும் புகழ்பெறும் வழி.

-கன்பூஷியஸ்.

ஒருவனிடம் ஒரு திறமை இல்லையென்று நாம் முன்னதாகவே தீர்மானம்செய்தால் அப்படியே இல்லாமற்போகும். அவன் திறமை நம்முடைய கண்ணுக்குத்தெரியாமலே போகும். நம்மவரை நாமேஇகழ்ந்து, அவர்களை உலகம் இகழ வைத்தால் அதைவிடப்பெரிய குற்றம் வேறொன்றுமில்லை.

-இரவீந்திரநாத் தாகூர்.

# தத்துவமுத்துக்கள்.

# நிஜ தரிசனம்



மண்விட்டு மறுமலர்ச்சிதேடி
விண்ணேறும் என்னினமே
உங்கள் மரணங்களின் பின்னாக
மர்மங்களை வைத்துவிட்டுப் போகிறீர்கள்
ஒன்றா இரண்டா வரிசை வரிசையாக
காவலர்களைக் காத்துவிட்டுப் போகிறீர்கள்
அந்தக் கருசனை வளர வளர
காலம் காலமாய் நடந்து கொண்டுதானே
இருக்கும் இது.

—கோசல்யா சொர்ணலிங்கம்.

"அலைகடல் வற்றினாலும் அன்புக்கடல் வற்றாத பிராணநாதர் அறியவேண்டியது. நானும் நான்கு பிள்ளைகளும் உங்கள் தவப்பயனால் நலமுடையோம்..!"

இடைமறித்து நான் —

"அன்புக்கடல் என்றால் அதுவும் நீலநிறமா?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. ஆனா இப்பிடித்தான் எழுத வேணும்!"

— கடிதமெழுத வந்த புவனேஸ் அக்கா என்வாய்க்குப் பூட்டிட்டு தொடருமுன் நான் 'பிராணவாயுபற்றி இப்ப எட்டாம் வகுப்பில் விஞ்ஞான ரீச்சர் சொல்லித்தந்தவா. அது கொஞ்சமாய் விளங்குது. ஆனா இலக்கிய மாஸ்ரர் இன்னும் அலை கடலை அன்புக்கு ஒப்பீடு செய்வது பற்றிச்



சொல்லித் தரவில்லையே...'

— எனக்குள் எண்ணியவளாய் என் பதின்மூன்று வயதுக்கேற்ப புவனேஸ் அக்கா சொல்லச் சொல்ல கடிதத்தை எழுதிக் கொண்டிருந்தேன்.

"உங்கள் சுகத்திற்காக நாளும்பொழுதுமாய் நடுக்குறிச்சிப் பிள்ளையாரை வேண்டியபடிதான். நான் இப்ப முழுகாமலிருக்கிறன்..."

புவனேஸ் அக்கா இப்ப பொய்யும் சொல்ல ஆரம்பித்துவிட்டா. நேற்று நான்கண்டனான். பொதுக்கிணற்றில் வெடிச்சான்கிணற்றில் நாலு பிள்ளைகளும் அவாவும் குளித்துவிட்டுப் போனதைக் கண்டனான்.

'பொய் சொல்லக்கூடாது பாப்பா!' என்ற பாரதிபாடல் இவவுக்குத் தெரிந்திருக்காது. புவனேஸ் அக்கா பள்ளிக்கூடம் போனதில்லையே.

புவனேஸ் அக்கா சொன்னா —

"எழுது ராசாத்தி. எனக்கு வேலை கிடக்கு.!"

"சொல்லக்கா!"

"எனக்கு முந்திமாதிரி இல்லை. உடம்பு முடியுதுமில்லை. கொஞ்சம் வித்தியாசம் இம்முறை பெட்டைதான் பிறக்கும். நாலு பெடியனுக்குப் பிறகு ஐந்தாவது பெட்டை என்றால் நல்லதாம் ஐயா."

— சொல்லிக்கொண்டு போன புவனேஸ் அக்கா ஏதோவொன்றை நினைத்து நிறுத்தி,

"பிள்ளை!எனக்கு முந்திமாதிரி உடம்புமுடியுதில்லை என்றதை அழித்துவிடு பிள்ளை!" என்றா.

"ஏனக்கா...?" சிணுங்கினேன்.

"எனக்கு வருத்தமென்றால் என்ர மனுசன் கவலைப்படுவார். அதுதான்!"

எனக்குத் தெரியும் புவனேஸ் அக்கா வாடிப்போயிருந்தது.

நான் அவ சொன்னதை அழிக்கவேயில்லை.

"அழித்துவிட்டேனக்கா!" என்று பொய் சொன்னேன். நன்மைக்கும் பொய் சொல்லலாமென என்ர அண்ணா சொன்னவன்.

புவனேஸ் அக்காவுக்கு நான்கு ஆண்பிள்ளைகள்.

இது 'பெட்டை'யென அவா சொன்னது எனக்குப் பிடிக்கவே இல்லை. பெட்டை என்று சொல்லுறது எனக்குப் பிடிக்காது.

நேற்றுக்கூட என்ர வகுப்பில பீற்றர் என்னைப் பெட்டை என்று சொன்னான். உடனே நான் மாஸ்ரரிடம் சொல்ல அந்த மக்கு ஆங்கிலவாத்தி "நீ பெட்டைதானே!" என்று சொன்னதும் அந்த வாத்தியை எனக்குப் பிடிக்காது போய்விட்டது. இது இவவுக்குத் தெரியாது.

"புவனேஸ் அக்கா... பெட்டை என்று எழுதாம பெண்பிள்ளை என்று எழுதட்டா...?" என்றதும்,

"என்ர ராசாத்தி தெற்காட்டு ஆலமரம்போல விழுதுவிடுவா. அப்படியே எழுதம்மா என்ர குஞ்சம்மா...!"

— மெழுகாய் உருக்கி நின்றா தன்னை.

இப்படித்தான் என்மேல நிறையவே அன்பு அவவுக்கு.
என்ர அப்பா அந்த ஊரில் ஒரு பாடசாலையில் படிப்பிக்க மாற்றலாகிப் போனபோது எங்கள் குடும்பமும் இடம்பெயர்ந்தது.
புவனேஸ் அக்கா அக் கிராமத்தாள்.
புவனேஸ் அக்கா வாத்தியார் குடும்பத்தோடு ஒட்டி வந்தா.
அவா அறிமுகமானதிலிருந்து நான்தான் அவவுக்குக் கடிதம் எழுதுவது.
அவவின் கொழும்பிலிருக்கும் கணவனுக்கும்கூட.
நான் சின்னப்பிள்ளைதானே. கவனமாகச் சொல்வா கடிதத்தை.
மிக நேர்த்தியான துடிப்பான உழைப்பாளிப் பெண்ணவா. அவ்வூரில் பல பெண்கள் குழந்தைகளோடு தனித்துவாழ்ந்தார்கள். ஆண்கள் வெளியூர்களில் உழைப்பிலிருக்கிறார்களாம். ஆனால் அங்குள்ள பெண்கள் தம்மையும், தம் பிள்ளைகளையும் தமது கைத்தொழில் மூலமாக வளர்த்துப் படிப்பித்துக் கொண்டிருந்தார்கள்.
புவனேஸ் அக்காவும் அப்படியே. என்னைக்கொண்டு எழுதும் கடிதங்களில் ஒருபோதும் பணம் அனுப்பு என எழுதிக்கேட்டதில்லை.
வருடத்தில் எப்பவாவது ஊருக்கு வந்துபோகும் புவனேஸ் அக்காவின் சுந்தரம் வெள்ளை சேட்டுடன் கொழும்புக்குரிய காற்சட்டையுடன் வாயில் சிகரட் புகைக்க வலம்வரும் நாட்களைக் கண்டிருக்கிறேன்.
எனக்கு என்னவோ சுந்தரத்தைப் பிடிக்காது. பார்க்க எரிச்சல் வரும்.
அவன் வந்துபோகமுன் புவனேஸ் அக்கா வீட்ட வருவா. அப்போது அவா கை. முதுகு எல்லாம் தடித்த காயமிருக்கும். நல்லெண்ணை கேட்பா.
"போட்டுவிடவா?" என போட்டும் விடுவேன்.
நான் பயந்து 'ஏன் இது வந்தது?' எனக் கேட்பேன்.
'ஆட்டுக்குக் குழைவெட்டினபோது முள் முருங்கு காயப்படுத்தினது.' என்று ஏதாவது சாட்டுச்சொல்வா. ஆனா வீட்டில் கதைக்கிறவை சுந்தரம் வந்தா சண்டை அடி போடுவதாக. எங்கட வீட்டுக் காரியங்களின் போதெல்லாம் புவனேஸ் அக்கா தன்ர காரியம்மாதிரி இழுத்துப்போட்டு மாய்ந்து. மாய்ந்து செய்வா. பெரிய மனசு இல்லையா.

தன்ரபிள்ளைகளுக்கு வெள்ளைமாவிலை ரொட்டியும், மிளகாய்ச் சம்பலும் கொடுப்பா. நல்ல ருசி. எனக்கும் தருவா. தயங்கித்தயங்கி நான் கள்ளமாக வாங்கிச்சாப்பிடுவேன். கனநாள் வீட்டில் பேச்சும் வாங்கினதுண்டு.
பிறகு ஒருநாள் அந்தக் கொழும்புக்கடை ஆடிக்கலவரத்தாலை அடிபட்டுப் போனதாக தன்ர மனுசன் சுந்தரம் வேலையற்றுத் திரும்பி வாறதாகவும் அம்மாவுக்குச் சொன்னது எனக்கும் கேட்டது.
எனக்கு அது ஒன்றும் பெரிதாகப்படவில்லை.
ஆனால் ஒன்றுமட்டும் கலக்கமாகவிருந்தது.
இனி புவனேஸ் அக்கா நல்லெண்ணை போட அடிக்கடி வருவாவோவென.
புவனேஸ் அக்காவின் பெரிய மருந்து நல்லெண்ணைதானே.



சுந்தரம்வந்து புவனேஸ் அக்காவையும் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு கமம்செய்யப்போவதாக வன்னிப்பக்கம் போய்விட்டான். எனக்கு அப்ப சரியான துக்கம். இனி அவவுக்கு யாரு கடிதம் எழுதிறது என்ற கவலையும்கூட. நல்லெண்ணை போடுவது...கனநாளாய் நித்திரையும் வரவுமில்லை.
குடும்பத்தோடு ஐந்துபிள்ளைகளோடு வந்தா.
புவனேஸ்அக்கா சொன்னமாதிரியே அது பெண்பிள்ளையாகவிருந்தது.
"ஐந்தாவதுபெண் கெஞ்சினாலும்கிடையாதாம். நான்இப்ப நல்லா இருக்கிறன். கத்தரி,மிளகாய்,மரவள்ளித் தோட்டம் செய்யிறம்!" என்றா.
இப்ப இன்னும் வடிவா இருந்தா.நான் கேட்டேன்.
"ஆடு வளர்க்கவில்லையா? குழை வெட்டுறதில்லையா? நல்லெண்ணை தாறது போடுவது யாரக்கா?"என்றேன். புவனேஸ்அக்கா ஒருமாதிரிச் சிரித்தா.
"என்ர குஞ்சம்மா மறக்கவில்லை!" என்றா.
கோயில் திருவிழா முடிய புவனேஸ் அக்கா தன்னூருக்குப் போய்விட்டா.
ஊரில வெள்ளம்வந்தா இரவில் அந்நியர் வந்து அரவம் கேட்டால் அர்த்த ராத்திரியில் கைலாம்புடன் புவனேஸ் அக்கா எங்கவீட்டை வாறது. அடைக்கலம் கேட்கிறது எனக்கு அற்ப சந்தோசம்தான். புவனேஸ் அக்காவை எல்லோருக்கும் பிடிக்கும் நினைப்பு வந்தது.
ஊர்த்திருவிழாவுக்கு வந்தவா போய்விட்டா.
போய் ஒருமாதத்தால் அவ தற்கொலைபண்ணிவிட்டதாக உறவினர் ஒருவர் தந்தி கொடுத்திருந்தார்.
அம்மா அதிர்ந்து போனா.
"நல்லா இருக்கிறன் என்றாளே. இறுதியாய்ப் பார்த்துவிட்டுப் போகவே வந்தாள்?" அம்மா அழுதா. அண்ணா என்னை இழுத்துக்கொண்டுபோய் விளாங்காய் பிடுங்கித் தந்தான்.
கதையெல்லாம் சொன்னான்.
அம்மா அவசரமாய் வெளிக்கிட்டு போய்விட்டா. கழற்றிப்போட்ட உடுப்பைக் கூட நான்தான் மடித்துப்போட்டன். செத்தவீட்டைபோறாவாம். அம்மா அங்க போய் நல்லா அழுவா. முகமெல்லாம் சிவக்கும்.
அண்ணா சொன்னான் —
"இது சாகிறதில்லை. வானத்தில கடவுள் ஆகிறது."
"அப்ப பிள்ளைகள் வானத்தின் கீழையா..." என்றதும் அவனும் பயந்தது தெரிந்தது எனக்கு.
அம்மா வந்துவிட்டா. ஆனா விடுத்து விடுத்து கேட்கவேண்டிய கேள்விகளெல்லாம் எனக்குள். அம்மா என்னை நெருங்கவே விடவில்லை.
"வருத்தம் வந்து கடவுள் கூப்பிட்டுவிட்டான்." என்றா.
"நீ வடிவாய் சாப்பிடு. உனக்கும் வருத்தம்வராது!" என்றா.
வளரவளர எனக்கும் விளங்கியது.
புவனேஸ் அக்கா மருந்து குடித்துச் செத்துப்போனது. தானே தனித்து நின்று எதிர்கொண்ட அனைத்தையுமே வென்ற புவனேஸ் அக்கா

சுந்தரத்தின் வன்முறைக்கு ஈடுகொடுக்க இயலாதது ஏன்? பயமா? பக்தியா?
சுந்தரம் இன்னொரு துணையைத் தேடிக்கொண்டான்.
குழந்தைகள் நாலாபக்கமும் சிதறின.
பிறகு எனக்கு புவனேஸ் அக்காமேல் கோபமும் வந்து போகும்.
புவனேஸ் அக்காவுக்கு பிரச்சினைகளை எதிர்கொள்ளும் தன்மை சமூகத்தில் மட்டும்தானா இருந்தது.
கடிதமெழுதிய என்கை அன்று பெண்ணிலையில் கரிசனைகொண்டது.
கருவான சேதிகளில் உருவான உருக்கமிவையே.

□□□

# காலங்கள்.

ஆடையைக் குறைத்து
அங்கங்கள் காட்டி
ஆடிப்பாடி மகிழ்ந்த காலம்
போயாச்சு...

எண்ணற்ற ஆடைக்குள்
எதுவுமே தெரியாமல்
ஒளிந்துகொண்டு
உயிரை உடல்போல்
ஊர்வலம் வரும்காலம்
வந்தாச்சு...

சோலையாய் நின்ற மரங்கள்
சொருசொருத்த சருகாகி...
சோமாலியா மனிதரைப்போல்
சோகம் படர்ந்து நின்றாச்சு...

வாலிபரும் வயதானவரும்
கூனிக்குறுகி நின்று...
கூதல் காயும் காலம்
இதுவாச்சு...

-கொற்றையூர் வாசன்.



# அன்பு தரும் தெம்பு.

அன்பு என்ற சொல் மிகவும் மென்மையானது. எனவே இதனைப் பூவிற்கு ஒப்பிட்டுக் கூறலாம்.
பூவானது மணத்தைக் கொடுப்பதோடு மென்மையானதாகவும் எல்லோரையும் கவர்ந்திழுக்கக் கூடியதாகவும் இருக்கின்றது.
இவ்வன்பு உள்ளம் கொண்டவர்கள் எல்லோரையும் தமது உறவினராகவும் உற்றவராகவும் நண்பர்களாகவும் சகோதரனாகவும் எண்ணி மகிழ்வதோடு பிறரையும் மகிழ்வித்து பெரும்பேறு எய்துவர்.
உண்மையான அன்புகொண்டவர்கள் ஒருவனின் வாழ்விலும் தாழ்விலும் பங்கெடுத்துக்கொண்டு என்றும் அவனைவிட்டு நீங்காது இருப்பார்கள்.
அன்பிற்கு அடைக்கும் தாழ்ப்பாள் கிடையாது.
அவர்கள்அன்பின் ஆழத்தை அவர்கள் வெளிப்படுத்தும் கண்ணீரிலிருந்தே அறிந்து கொள்ளமுடியும்.
இதைக் கூறும்போது மனுநீதி சோழன் கதை ஞாபகம் வருகிறது.
மனுநீதிச்சோழன் மகன் ஒரு கன்றின்மேல் தன் தேர்ச்சக்கரத்தை ஏற்றிக் கொன்று விடுகின்றான்.
அதன் தாய்ப்பசு மனுநீதியின் சபையில் முறையீடு செய்கின்றது.
இதனைக்கேட்டு மன்னன் அத்தாய்ப்பசு எவ்வாறு தன் கன்றினைப் பிரிந்த பசு துன்பப் படுகின்றதோ அவ்வண்ணமே தாமும் துன்பம் அடைய வேண்டுமென்று கருதி தன்மகனையும் தேர்ச்சங்கம் ஏற்றிக்கொன்று விடுகின்றான். இக்கதையில் நாம் அறிவது என்னவென்றால் நீதி என்பதும் அன்பு என்பதும் எல்லோருக்கும் பொதுவானது என்பதுதான்.

'அன்பிலார் எல்லார் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு!'

தன் குழந்தைக்கு ஏதேனும் ஆபத்து வந்தால் ஒரு தாயானவள் தன் உயிரையும் பொருட்படுத்தாமல் எவ்வாறு தன் குழந்தையைக் காக்கிறாள்.
அப்போது எங்கிருந்து வந்தது அந்தத் துணிச்சல்.
அது அன்பின் முதிர்ச்சியால் அவளுக்குக் கிடைத்த தெம்புதான்.
ஆகவே அன்பானது சினமடையாது, தீங்கு நினையாது, தன்உயிரையும் பொருட்படுத்தாது எல்லாவற்றையும் பிறர்க்கு ஈந்து மகிழும் பேறுபெற்றது என்பதனை முழுமையாக அறிந்துகொள்ள முடிகின்றது

**படித்ததில் கிடைத்தது-**

-திருமதி மாலினி குணராஜன்.

## *புலம்பெயர் மண்ணில் பெற்றோர் முன் பிள்ளைகள் ஒரு கேள்விக்குறியா?*

*"வெளிநாட்டு வாழ்க்கை போதும். இந்தச் சீரழிவுகள் இனியும் தேவையில்லை. எமது நாடு எமக்குத் தேவை. கஞ்சியோ கூழோ குடித்துக்கொண்டு அங்கு நாம் நிம்தியாக வாழவேண்டும். எமது பிள்ளைகள் அங்குதான் நாட்டிற்குப் பயன்படும் பிள்ளைகளாக வளர்க்கப்படுவார்கள்!" எனப் பல பெற்றோரும் வெளிப்படையாகவே கூறிவருகின்றனர்.*

**- வீஆர்வரதராஜா.**

புலம் பெயர் மண்ணில் புதுமைகளுக்குப் பதிலாக மனம் வெதும்பும் சம்பவங்கள் நடைபெறுகின்றன. சொந்த மண்ணில் இருந்தால் இந்த நிலை ஏற்படுமாவென பல நல்ல உள்ளங்கள் இன்று ஏங்குகின்றன.

பதினாறு வயது பருவ மகளை இரவு பன்னிரண்டு மணியாகியும் காணவில்லையென ஒரு தகப்பன் தேடிக்கொண்டு திரிகின்றார்.

மகளைக்காணவில்லையென தாய். வீட்டில் வழிமேல் விழிவைத்து ஒவ்வொரு இரவும் காத்திருக்கிறார்.

புலம்பெயர் மண்ணில் பெற்றோர் மிகுந்த மனக்குறையுடன் வாழ்கின்றனர்.

பதின்மூன்றுவயது மகள் பாடத்தில் கவனம்செலுத்தவில்லையென தகப்பனார் கண்டித்தார். கோபத்தில் மகளை அடித்தார். அடுத்தநாள் பாடசாலைக்குச்



சென்றமகள் வீடு திரும்பவில்லை.

தகப்பனார் இதுகுறித்து பாடசாலையில் விசாரித்தும் மகளைப்பற்றி எவ்வித தகவலும் கிடைக்கவில்லை. இரவுவரை மகளைக் காணவில்லையே எனக் கவலைப்பட்டு பெற்றோர் பொலிஸ்நிலையம் சென்று புகாரிட்டனர். ஆனால் பொலிஸில் அவருக்கு அதிர்ச்சித்தகவல் காத்திருந்தது.

'உங்கள் மகள் உங்களுடன் இருக்க விரும்பவில்லை. அதனால் அவளை சிறுவர் நன்னடத்தைவிடுதியில் ஒப்படைத்துள்ளோம்!' எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பெற்றோர் சிறுவர்விடுதிக்குச் சென்று மகளைப் பார்க்க அனுமதி கேட்டனர். ஆனால் அனுமதி கிடைக்கவில்லை.

மகளை ஒப்படைக்குமாறு கோரி நீதிமன்றத்தில் அவர்கள் மனுத்தாக்கல் செய்தனர்.

நீதிமன்றத்தில் மகள் ஆஜர் செய்யப்பட்டாள்.

சிறுவர் நன்னடத்தை அதிகாரி நீதிமன்றத்தில் மிகத் தெளிவாகச் சொன்னார். 'பெற்றோர்களுடன் செல்ல இவள் விரும்பினால் போகலாம். ஆனால் அனாதரவாக வீதியில் இவள் நிற்பதை நாம் அனுமதிக்க முடியாது!' என்றார் அவர்.

மகளுடன் கதைக்க நீதிமன்றத்தில் பெற்றோருக்கு அனுமதிவழங்கப்பட்டது. பெற்றோர் கண்ணீருடன் கதைத்ததைக் கேட்டு மகளும் அழுதுவிட்டாள்.

பின்பு நீதிபதி மகளுடன் கதைத்தார்.

'உனது பெற்றோருடன் போக நீ விரும்புகிறாயா?' எனக் கேட்டபோது 'முடியாது!' என ஒரே வார்த்தையில் பதில் சொல்லிவிட்டாள்.

இப்போதும் அவள் சிறுவர் விடுதியில் இருந்தே பாடசாலைக்குச் சென்று வருகின்றாள்.

பெற்றோர் பாடசாலை நேரங்களில் மகளை தூரத்தில் இருந்தே பார்க்க முடிகின்றது.

'இவ்வாறானதொருநிலை எங்கள் தாயகத்தில் இருந்தால் ஏற்பட்டிருக்குமா?' என அந்தப்பெற்றோர் கேட்கின்றனர்.

மற்றொரு குடும்பத்தில் ஒரே ஒரு பெண்பிள்ளை.

அவள் தாயகத்தில் பிறந்தவள். இங்கு அவளை மிகவும் செல்லமாக வளர்த்தார்கள். தமிழ்வாடையே வீசக்கூடாது என்று ஜேர்மன்பழக்கங்களுடன் ஒன்றி வாழ்ந்தார்கள்.

நாளடைவில் அப்பிள்ளை வளர்ந்து பருவப்பெண்ணாக மாறியதன் பின் டிஸ்கோ என்ற இரவுநடன விடுதிகளுக்குப் போகத் தொடங்கினாள்.

பெற்றோர் தடுத்துப் பார்த்தனர். கேட்கவில்லை. அவள் பெற்றோரைவிட்டு விலகத் துவங்கினாள். தூரம் அதிகரித்தது. மற்றொருநகரில் தனியாக வீடொன்றை எடுத்து தற்போது வசித்து வருகின்றாள்.

ஜேர்மன்பெண்களைப்போல காதலனுடன் வாழ்ந்து வருகிறாள்.

இங்கே மகளின் அன்புக்காக ஏங்கும் பெற்றோர் கவலையுடன் இருந்தனர்.
தாயார் அந்தக் கவலையினால் நோய்வாய்ப்பட்டார்.
தகப்பன் கவலையை மறக்க குடிகாரனானார்.
சிறப்பாக வாழ்ந்த குடும்பம் இன்று சீரழிந்துவிட்டது.
"தமிழீழம் கிடைக்காதா? நாம் அங்கு சென்றாவது நிம்மதியாக இருக்கலாமே!" என இந்தப் பெற்றோர் வாய்விட்டே கதறி அழுகின்றார்கள்.
பெற்றோரின் நிலை மகளுக்குப் புரியவில்லை.
"நான் தனியாக இருந்தால் இவர்கள் ஏன் கவலைப்படவேண்டும்?" என்று மகள் எந்த உணர்வுமின்றிக் கூறுகின்றாள்.
புலம்பெயர் வாழ்வில் பணமுண்டு. பாசம் இல்லை.
செல்வத்திற்குக் குறைவில்லை. ஆனால் அன்புக்கு இடமில்லை.

மூன்று பெண்பிள்ளைகளைக் கொண்டகுடும்பம் அது.
பருவக்குமரிகளானதும் பெற்றோரையும் கவலை பற்றிக்கொண்டது.
மூவருக்கும் சீதனம் கொடுக்கவேண்டுமே என நினைத்த பெற்றோர் இருவரும் இரவு பகலாக உழைத்தனர்.
பிள்ளைகளை சரிவரக் கவனிக்கத் தவறிவிட்டனர்.
மூத்தமகள் இரவில் பெற்றோருக்குத்தெரியாமல் டிஸ்கோ நடனவிடுதிக்குச் சென்று வரும்போது தகப்பனார் அவதானித்துவிட்டார்.
மகளை அவர் எச்சரித்து அடித்தும்விட்டார்.
அடுத்தநாள்காலை காயங்களுடன் மகள் பொலிஸ்நிலையம் சென்றுவிட்டாள்.
மகளைத் தாக்கியதாக தகப்பனாருக்கு எதிராக வழக்கு!
விசாரணையின்போது தகப்பனார் குற்றவாளியாகக் காணப்பட்டதையடுத்து மூன்றுமாத சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.
மூன்றுமாதச் சிறைத்தண்டனை முடிந்து தகப்பனாரும் வந்து சேர்ந்து விட்டார். மூன்று மகள்மாரும் தங்கள் விருப்பம்போல் வெளியில் நடமாடுகின்றனர்.
பல காதலர்களுடன் திரிவதும் இரவு நடன விடுதிகளுக்குச் செல்வதும் இவர்களின் முக்கிய கடமையாக உள்ளது.
பெற்றோர்கள் இருவரும் தற்போது மௌனிகளாக உள்ளனர்.
மகள்மார் எந்தநேரம் வந்துபோனாலும் எதுவுமே கேட்பதில்லை. பெற்றோர் இப்போது வேலைக்குச்செல்லாமல் வீட்டில் இருக்கின்றனர். இதை முதலில் இவர்கள் செய்திருக்கவேண்டும்.
காலம்கடந்த நடவடிக்கை.
கலாச்சாரத்தின் சீரழிவுகளிலிருந்து புலம்பெயர் வாழ் தமிழர்களை எப்படிக் காப்பாற்றுவது?
சுதந்திரம் அதிகமானதினால் ஏற்படும் தடுமாற்றங்கள் இவை.
வெளிநாட்டுக் கலாச்சாரங்களில் உள்ள அழிவை நோக்கிப் பயணமாகும் தமிழர்களின் எதிர்காலம் இங்கே கேள்விக் குறியாகின்றது.



பிள்ளைகளை இங்கே ஒழுங்கான மனிதர்களாக வளர்க்க முடியவில்லையே என்ற கவலை புலம்பெயர்ந்த சகல நாடுகளிலுமுள்ள தமிழர்களின் ஒட்டுமொத்த கவலையாக உள்ளது.
நவீன நாகரீகம் எனக்கூறிக்கொண்டு மகன்மார்புரியும் அட்டகாசம் சொல்லும் தரமன்று! தலையை மொட்டையடித்துக்கொண்டு தோடுடையசெவியர்களாக நடமாடுகின்றனர்.
எவ்வளவுதான் வெளிநாட்டவராக வாழ முற்பட்டாலும் தோலின் நிறம் அவர்களைக் காட்டிக்கொடுத்துவிடும் என்பதை ஏனோ சிலர் மறந்து விடுகின்றார்கள்.
இரவு நடன விடுதிகள் என்றாலும் சரி அந்தந்த நாடுகளின் கலாச்சார விழாவானாலும் சரி அவர்களுக்குத் தெரியாமலேயே ஒதுக்கப்படுகின்றார்கள். அப்போது ஏற்படும் விரக்தியினால் பல தவறுகள் நடைபெற்று விடுகின்றன.
பலர் குற்றவியல் இரகசியப் பொலிஸாரின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுகின்றார்கள்.
மகனை நீங்கள் திருத்தாவிடில் உங்கள் நாட்டுக்கே திருப்பி அனுப்பப் படுவார் என பொலிஸார் பெற்றோருக்குக் கூறிய சந்தர்ப்பங்களும் உண்டு.
ஒரு குடும்பத்தில் தமிழ்க் கலாச்சாரத்துடன் வாழ்ந்த தமிழ்ப்பெண்ணை நாகரிகம்என்று சொல்லப்படுகின்ற நவீன தமிழ்வாலிபர் ஒருவர் விரும்பினார். ஆனால் அவரின் மொட்டைத்தலையையும் மூக்குத்தியும் தோடும் கனிந்த முகத்தையும் பார்த்து எந்த ஒரு தமிழ்ப்பெண்ணும் அவரை விரும்பமாட்டாள்.
அவள்விரும்பவில்லை என்பதற்காக அந்தப் பெண் ஒருநாள் பலவந்தமாகக் கடத்தப்பட்டாள்.
இரண்டு நாட்களின்பின் அந்தப்பெண் நிர்வாணமாக அவளின் வீட்டுவாசலில் கொண்டு வந்துவிடப்பட்டாள்.
இதுதான் நீங்கள்விரும்பும் நாகரிக கலாச்சாரமா என்று கேட்கத் தோன்றுகின்றது. புலம்பெயர் மண்ணில் தமிழர்களின் சீரற்ற வாழ்வுக்கு இதைவிடவும் உதாரணம் தேவைதானா?
'வெளிநாட்டுவாழ்க்கைபோதும். இந்தச் சீரழிவுகள் இனியும் தேவையில்லை. எமது நாடு எமக்குத் தேவை. கஞ்சியோ கூழோ குடித்துக்கொண்டு அங்கு நாம் நிம்மதியாக வாழவேண்டும். எமது பிள்ளைகள் அங்குதான் நாட்டிற்குப் பயன்படும் பிள்ளைகளாக வளர்க்கப்படுவார்கள்!' எனப் பல பெற்றோர்கள் வெளிப்படையாகவே கூறியுள்ளனர்.
எமது நாட்டை மீளப்பெறும் விடுதலைப்பணியில் நாம் வெகுதூரம் முன்னேறிவிட்டோம். தமிழீழ தனியரசு உதயமாகும்வரை வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தங்கள் பிள்ளைகளை நாட்டிற்குப் பயன்படும் விதத்தில் வளர்க்கவேண்டும்.
பிள்ளைகளுடன் மிகவும் அன்பாகப் பழகுவதில் பெற்றோர்கள் முன்னனிக் கவனம் செலுத்தவேண்டும்.

அன்பாக அறிவுரைகூறியே சரியான பாதைக்கு அவர்களை இட்டுச்செல்ல வேண்டும்.
பிள்ளைகளுடன் மிகவும் அன்பாகப் பழகும் சில குடும்பங்களில் கூட பிள்ளைகள் தவறான வழியில் சென்றுள்ளார்கள்.
அதிலும் ஒரு குறை உண்டு.
பெற்றோர்கள் பிள்ளைகளுடன் சேர்ந்திருந்த நேரங்கள் குறைவு.
அவர்கள் வேலைக்குச் செல்லும் நேரங்கள் கூடுதலாக இருப்பதால் இந்நிலை பல குடும்பங்களில் ஏற்பட்டுள்ளது.
பிள்ளைகள் வீட்டில் தனியாக இருப்பதை பெற்றோர்கள் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.
பிள்ளைகளுடன் பெற்றோர்கள் இருக்கின்றபோது அவர்களுடன் உரையாடவேண்டும்.
படிப்பைப்பற்றியும் ஆசிரியர் எப்படி பிள்ளைகள் எப்படி என்பதெல்லாம் விசாரிக்கவேண்டும்.
ஒவ்வொருநாளும் பாடசாலையில் என்ன நடந்தது என்பதை பிள்ளைகளிடம் கேட்டறிந்துகொள்ளவேுண்டும்.
அவசியம் ஏற்படின் பாடசாலை ஆசிரியரிடம் தொடர்பு கொள்ளலாம்.
ஆசிரியருடன் தொலைபேசிமூலமும் தொடர்பு கொள்ளலாம்.
**தினசரி பெற்றோர் பிள்ளைகளில் இந்தளவு ஆர்வமாக இருந்தால் பிள்ளைகள் தவறான பாதைக்குச் செல்வது மிகக்குறைவாகவே இருக்கும்.**
பிள்ளைகளுக்கு விளையாட்டுத்துறையில் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும்.
தாய் மொழியான தமிழில் கல்விகற்கும் விருப்பத்திற்கும் வித்திடவேண்டும்.
அவர்களை தமிழ்க் கலாச்சார நிகழ்ச்சிகளுக்கு அடிக்கடி அழைத்துச் செல்லவேண்டும்.
இவ்வாறு அவர்கள் விரும்பாவிடில் அவர்கள் விரும்பும் பொருட்களை வாங்கித் தருவதாகக் கூறி அழைத்துச் செல்லுங்கள்.
இந்நடவடிக்கைகள் பிள்ளைகளை வழிதவறவிடாமல் பார்த்துக் கொள்கின்றன.
பிள்ளைகளைப்பற்றிக் கூறுகின்றீர்கள் பெற்றோர்களில் சிலரின்நிலையைப்பற்றி ஏன் குறிப்பிடவில்லை. பிள்ளைகளைவிட்டு வேறு துணை தேடி ஓடும் பெற்றோரைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று சிலர் கேட்கக்கூடும்.
எண்ணிக்கையில் மிகக்குறைவான அந்தச் சிலரைப்பற்றி பிறிதொரு சந்தர்ப்பத்தில் குறிப்பிடலாம் என் நினைக்கிறேன்.
□□□



# ஓ...இளைஞனே...!

காலில் அணிய செருப்பில்லை என்று கவலைப்படாதே.
காலே இல்லாமல் பலர் இருக்கிறார்கள் அவர்களைப்பாரத்து உன் மனதைத் தேற்றிக்கொள். அதேசமயம் உன் கால்களுக்குத் தேவையான செருப்பைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சியில் உன்னை ஈடுபடுத்திக் கொள்.
அதைவிடுத்து கால் இல்லாதவர்களைப் பார்த்தபின் அவர்களிலும் பார்க்க காலுள்ள நான் மேலானவன் என்று இருந்து விடுவாயானால் நீ காலிருந்தும் முடவன்தான்.
எனவே நீ இருந்தும் இல்லாதவன் ஆகிவிடுவாய்.
முயற்சித்துப்பார். உன்னால் முடியாதது என்று சொல்ல ஒன்றுமே இல்லை. உன்னால் எதையும் செய்ய முடியும்.
முயற்சி செய்து செய்து அது தோல்வியில் முடிந்தால் அந்தத் தோல்வியும் உனக்கு ஒரு வெற்றிப்படிக்கல்தான்.
சிலந்தியைப்பார். அது எப்படி வலைபின்னுகின்றது.
குருவியைப் பார் அது எப்படிக் கூடு கட்டுகின்றது என்று சிந்தித்துப்பார்.
ஐந்தறிவு படைத்த அந்த ஜீவராசிகள் முயற்சிசெய்து எப்படி வாழ்கின்றன. ஆறறிவு படைத்த நீ ஏன் அயர்ந்து விடுகின்றாய்?
எனவே சிந்தி சிந்தி சிந்தனையை செயலில் காட்டு முடிவில் வெற்றி நிச்சயம்.
வெற்றி நிச்சயம் வெற்றி நிச்சயம் என்று வாயால் சொல்லிக் கொண்டிருப்பார்கள் பலர். அவ்வாக்கியத்தை உன்மனதில் கொண்டு செயற்பட்டால் நிச்சயம். அந்த வார்த்தைக்கு உரியவனாக மாறி விடுவாய்.
எனவே முயற்சியின் முடிவில்தான் வெற்றி நிச்சயிக்கப் படுகின்றது.
சிந்தித்து செயற்படுவாயாக.

-ரவி செல்லத்துரை.
(பாசல், சுவிஸ்)

# தமிழா உன் சிந்தனைக்கு...

-கிருபா நந்தினி.

சொந்த நாட்டைவிட்டு
சொந்த பந்தங்களைப் பிரிந்து
அகதியாகி உலகமெங்கும்
அலையும் தமிழா
உன் சிந்தனைக்கு!

எம் மண்ணையும்
எம்மையும்
எம்மொழியையும்
பிட்டெடுக்க
தம் உயிர்களைப்
பணயம் வைத்து
தம் உடல்களைச்
சிதறச் செய்து
குருதி சிந்தி
வேர்வை சிந்தி
ஈழத்தில் ஒரு தலை முறை
வாழும்போது...
வெளிநாட்டு சுகபோகங்களுடன்
வெளிநாட்டு விசாக்களுடனும்
அந்நிய மண்ணில் வாழும்
தமிழா
உன் சிந்தனைக்கு!

அந்நிய மண்-எம்
அன்னைமண்ணாகி விடுமா
அந்நிய மண்ணில்
எத்தனைநாள் வாழ்வாய்-அல்லது
அந்நியன் வாழத்தான் விடுவானா?

எங்கே நீ வாழ்ந்தாலும்
எங்கே நீ திரிந்தாலும்
ஒருநாள்
அந்நியன் விரட்டத்தான் போகிறான்.
தமிழா
உன் சிந்தனைக்கு!

எம் தாயக பூமி
எம்மோடு சுதந்திரமாக
உறவாட வேண்டுமென்றால்
உயிரைத் துச்சம் என
நினைத்து
சாவைக் கழுத்தில்கொண்டு
சமராடும் அந்த மறவர்களுக்கு
உன் பங்கைச்செய்!

உன் சிந்தனை
ஈழம் நோக்கி இருக்கட்டும்.
உன் உதவி
ஈழம்நோக்கி இருக்கட்டும்.

தமிழா
உன் சிந்தனைக்கு!

இலட்சியப் பற்றும்
தீர்க்க தரிசனமும்
கொண்ட
அணிக்குப் பின்னால்
ஒன்றுசேர்!
பொறுத்தது போதும்
பொங்கி எழு!
தமிழினம் தலைநிமிர
தரணியெங்கும் குரல் எழுப்பி
தாயகத்தை வென்றெடுக்க
வீறுடன் எழு தமிழா!

தமிழா
உன் சிந்தனைக்கு!




# உறவுகளைப் பார்க்கப் போனேன்...

இங்கே
ஆதவனும் அனுமதி பெற்றே
உதயமாகி மறையலாம்.

ஆடுகின்ற மயிலும்
பாடுகின்ற குயிலும்
ஆடுவதையும்
பாடுவதையும்
நிறுத்தி நீண்ட காலமாம்

முன்றலில் தோன்றும்
தென்றலும் முடிச்சுக்களை
அவிழ்த் தவிழ்த்தே
முடியாமையினால்
மூச்சுத் திணறிப்
போவதுண்டு.
சில வேளைகளில்
பேச்சும் தொலைந்து
போவதுண்டு!

தாயகத்தை நோக்கி
தாய் தந்தையரை
தரிசனம் செய்துவிட
கரிசனம் கொண்டே
கடல் தாண்டிச் சென்றது
இந்தப் பறவை!



ஈரேழாண்டின்பின்
காடேகிய ராமன்போலவே
இந்த ராமன்
இனிய உறவுகளைக்
காண விரைந்தான்
ராமனென்று எண்ணிவிடாதீர்கள்
ஆயினும்
ராவணன் நானல்ல.

பாதுகையில்லாத
பாதங்களில்
புழுதிமண் பட்டதும்
கழுவிட மனமில்லை
தழுவிட ஆசைகள்
நிறைவேறுமா நிராசைகள்?

கிணற்று நீரில்
குளித்தபோது
உடலோடு சேர்ந்து
உள்ளமும் குளிர்ந்தது
உவகை நீராடியது!

புயலடித்த பூமியல்லவா
வடுக்களை தன் மார்பிலும்
மடியிலும் சுமந்தபடி
கொடுக்குகளை விரித்தபடி
தேள்கள் கூடாரமடித்தபடி!

சின்னமுத்து நோய்
கண்டவர்போல்
செல்லடிபட்ட வீடுகள்!
இடுப்போடு சேர்த்தே
அறுத்து விட்டாற்போல்
இடிபாடு கொண்ட
மனைகள் கடைகள்
சிரமறுந்த-
தென்னை, பனைகள்
கரமறுந்த
மா, பலாக்கள்!
பூக்காடாய் அன்று
சாக்காடாய் இன்று

மொட்டாகப் பார்த்தவர்கள்
முழுமலராய்....
சிட்டாகப் பார்த்தவர்கள்
சிற்றாடையில்
கட்டாகப் பார்த்தவர்கள்
கனிவா யிதழ்களில்-
காணவில்லை முத்துக்களை!

வசந்தகால மரங்கள்
இலையுதிர்கால மரங்களாய்
உறவுகளைப் பார்க்கப்போனேன்
உறங்காத சோகம்
சுமந்து வந்தேன்!

கார்மேகக் கூந்தலில்
யாரள்ளித் தெளித்தது
வெள்ளை மை?
வெள்ளை நிலவு

கொள்ளையழகு
கொள்ளைபோனதோ?
கொள்ளையடித்தவன்
காலதேவனா- இல்லை
கட்டவிழ்ந்து பாய்ந்த
அராஜகமோ?

ஒவ்வோர் விழிகளும்
சொல்லி லடங்காச்
சோகங்களைச் சுமந்தபடி!
சோகச் சுமையின்
பாரம் தாங்காமல்
விழிமடல்களில் வழிந்தோடும்
கண்ணீர்த் துளிகள்
கவலைகளின் திவலைகள்

தேடிவந்த உறவுகளில்
சிலர்மட்டும்
நாடிவந்த என்னிடத்தில்
நலம் விசாரித்தார்களா?
எடையை மட்டுமே
தராசிலிடுவார்
என்னையுமா?
தராசிலிடுவார்?

இ. சம்பந்தன்



# இனி எழும் நம் தமிழினம்.

இனி எழும் எம் இனம்
கனிதரும் நம்மரம்
தனிஇனம் எம் இனம்
இனி எழும் நம் தமிழினம்

புலி எழும் எம் நிலம்
பகை எதிர் சமர்தரும்
பசி பிணி உயிர் வதை
பனி என விலகிட
இனவெறி சிங்களம்
இடர்படும் நிலை வரும்

கொடியது செய்தவர்
கொலைவெறி கொண்டவர்
தலைவிழும் நிலையிது
புலியது குறியிது!
தமிழ் எழும் வரையிது!

தமிழீழம் மலருது
தமிழ் இனம் எழுகுது
உலகினில் தமிழினம்
தலையென நிமிருது

அடிபடும் நிலையில்லை
அகதியாய் அலைவில்லை
பழம்பெரும் ஒரு இனம்
மலையென எழும் நிலை!

இது ஒரு புது யுகம் புலியுகம்
புதுமைகள் பலசெயும்
புலியினம் தமிழினம்
இனி எழும் நம்மினம்
கனிதரும் நம்மரம்

-செட்டியூர் வரதன்.
(பிரேமன்,ஜேர்மனி)

**மகாகவியின்**
**சில கொள்கைகள்**

இயன்றவரை தமிழிலே பேசுவேன். தமிழே எழுதுவேன். சிந்தனை செய்வது தமிழிலே செய்வேன்.
எப்போதும் பராசக்தி- முழு உலகின் முதற்பொருள்- அதனையே தியானம் செய்துகொண்டிருக்க முயல்வேன்.
அதனைக்குறித்தே ஓயாமல் எழுதிக்கொண்டிருக்க முயல்வேன்..

பொழுது வீணேகழிய இடங் கொடேன்.
லௌகிக காரியங்களை ஊக்கத்துடனும் மகிழ்ச்சியுடனும் அவை தோன்றும்பொழுதே பிழையறச் செய்து முடிக்கப் பழகுவேன்.

மறைத்தும் தற்புகழ்ச்சிபாராட்டுதல் விரும்பேன்

மூடரின் உள்ளத்தில் என்னைப்பற்றிய பொய்மதிப்புண்டாக இடங்கொடேன்.

பொய்மை, இரட்டுற மொழிதல், நயவஞ்சனை, நடிப்பு, இவற்றால் பொருளீட்டிப் பிழைத்தல் நாய்ப் பிழைப்பென்று கொள்வேன்.

இடையறாது தொழில்புரிந்து இவ்வுலகப் பெருமைகள் பெற முயல்வேன். இயலாவிடின் விதி வசமென்று மகிழ்ச்சியோடிருப்பேன்

எப்போதும் மலர்ந்த முகம் -இனிய சொல்- தெளிந்த சித்தம் இவற்றோடிருப்பேன்-
ஓம்!

-மகாகவி பாரதி



## தமிழீழத் தனியரசே
## தமிழரின் இறுதித் தீர்வு!

நாம் சமாதானத்திற்குக் கதவடைக்கவில்லை.

சமாதான வழியில் பேச்சுக்களைநடத்தி பிரச்சினையைத் தீர்க்கும் நாகரீகமான நடைமுறையையும் நாம் கைவிடவில்லை.

சிங்களத் தலைமையின் நேர்மையில் எமக்கு நம்பிக்கையில்லை என்பதால் சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் மூன்றாம்தரப்பு மத்தியஸ்தத்துடன் நாம் சமாதானப் பேச்சுக்களில் பங்குகொள்ளத் தயாராக இருக்கிறோம்.

ஆனால் சமாதானப் பேச்சுக்கு அரசு விதிக்கும் முன் நிபந்தனைகள் எதையும் ஏற்பதற்கு நாம் தயாராக இல்லை.

அத்தோடு போர் ஓய்ந்தநிலையில், இராணுவஆக்கிரமிப்பும் பொருளாதாரநெருக்குவாரங்களும் நீங்கிய இயல்பான சூழ்நிலையில் அரசியற் பேச்சுக்கள் நடைபெறுவதையே நாம் விரும்புகிறோம்.

நாம் பேச்சுக்கு முன் நிபந்தனைகளை விதிக்கவில்லை.

சமாதானப் பேச்சுக்கள் அமைதியான புறநிலையில், நல்லெண்ண சூழ்நிலையில் எமது மக்கள்மீது சுமத்தப்பட்டிருக்கும் துன்பப்பளுக்கள் அகன்ற நிலையில் நிகழ்வதையே நாம் விரும்புகின்றோம்.

எமது மண்ணில் இராணுவ ஆக்கிரமிப்பும் எமது மக்களின் பொருளாதார வாழ்வுமீது தடைகளும் அரசியல் அழுத்தங்களாகப் பிரயோகிக்கப்படும்பொழுது சுதந்திரமாக, சமத்துவமாக பேச்சுக்களை நடாத்துவது சாத்தியமில்லை என்பதே எமது நிலைப்பாடு.

எனவே, இந்த அழுங்குகளை நீக்குவதுபற்றியும், அரசியற்பேச்சுக்கான அடிப்படைகளை வகுப்பது பற்றியும் ஆராய்ந்து பார்க்கவும் நாம் தயாராக இருக்கிறோம்.

எமது மக்கள் இன்று துன்பத்தின்பளுவை சுமக்கமுடியாது திணறுகிறார்கள். சாவும், அழிவும், பசியும், பட்டினியும், இடம்பெயர்ந்த வாழ்வும், இராணுவ அட்டூழியங்களும், சொந்தமண்ணில் சிறைப்பட்ட வாழ்வும் என்ற ரீதியில் நாளாந்தம் அவர்கள் அனுபவிக்கும் துயரம் மிகக் கொடியது.

பேச்சுக்கள் தொடங்கி, அது வெற்றிகரமாக நடைபெற்று, இறுதியில் அரசியற் தீர்வு ஏற்பட்டு,



பின்னர் அது நடைமுறைப்படுத்தப்பட்டு, அதன்பின்னர் தமது நாளாந்த பிரச்சினைகளுக் கெல்லாம் முடிவுகட்டப்படும் என எமது மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கத் தயாராக இல்லை.

போர் நிறுத்தப்பட்டு, தமது மண்ணில் நிலைகொண்டு நின்று தம்மைத் துன்புறுத்திவரும் ஆக்கிரமிப்புப் படைகள் விலக்கப்பட்டு, தமது நாளாந்த பிரச்சினைகளுக்கு உடன் தீர்வு காணப்படவேண்டும் என்பதையே எமது மக்கள் விரும்புகிறார்கள்.

ஒடுக்கப்பட்டு, துன்பப்படும் எமது மக்களின் உடனடியான தேவைகளையும் பிரச்சினைகளையும் தீர்த்து ஒரு சமாதான நல்லெண்ண சூழ்நிலையில் பேச்சுக்களை நடத்த சந்திரிகா அரசு தயாராக இருக்கிறதா? இல்லாதுபோனால் சமாதானமும் அமைதிவழியிலான அரசியற் தீர்வும் ஏற்படுவது சாத்தியமில்லை.

சிங்களப் பேரினவாதத்தின் கடும்போக்கிலும் தமிழர் விரோதக் கொள்கையிலும் அடிப்படையிலான மாற்றங்கள் எதுவும் நிகழும் என நாம் எதிர்பார்க்கவில்லை.

எதிர்காலத்தில் இந்த மாற்றம் நிகழாதுபோனால் தமிழீழத் தனியரசு உதயமாகும் புறநிலையை உருவாக்கித் தந்த வரலாற்றுப் பெருமை சிங்களப் பேரினவாதத்திற்கே சாருமென்பதை நான் திடமாகக் கூறுவேன்.

தமிழீழத் தனியரசே தமிழ் மக்களின் இறுதியான தீர்வாக அமையுமென உறுதியாக நம்பி நாம் எமது இலட்சியப் போரைத் தொடருவோம்.

விடுதலைக்காக எத்தகைய துன்பங்களையும் சுமக்கத் தயாராகும் தேசமே இறுதியில் விடுதலையை வென்றெடுக்கும் என்ற அசையாத நம்பிக்கையுடன் தொடர்ந்து போராடுவோம்.

விடுதலைக்காக தமது இன்னுயிர்களை ஈகம்செய்து, எமது தேசத்தின் ஆன்ம பலமாக நிற்கும் எமது மாவீரர்களை நினைவு கூர்ந்து இலட்சிய உறுதியுடன் நாம் எமது போராட்டத்தைத் தொடருவோம்.

(தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின்
1998ம் ஆண்டு மாவீரர்நாள் உரையிலிருந்து)

# ஏற்றுமதி நகல்கள்

ப.இராஜகாந்தன்.

பாரிசில், குறிப்பிட்ட அந்த அபாட்மன்ற் வாசலிலும் முன்வீதியிலும் இலங்கைத்தமிழர் நாண்கைந்துபேர் சேர்ந்து கூட்டங்கூட்டமாக ஏதோ பேசிக்கொண்டு நின்றனர்.
எல்லோர் முகத்திலும் ஒரு இறுக்கம், இனந்தெரியாத கவலை தெரிந்தது.
அவ் வீதியைத் தாண்டும் வாகனங்கள் குறிப்பிட்ட அவ்விடத்தில் வேகத்தைக் குறைத்து ஊர்ந்து கொண்டிருந்தன.
வாசல், வீதி என்றுமட்டுமல்லாது சந்திரனின் குடும்பம் குடியிருக்கும் வீடுவரை இச் சனச்செறிவு நீண்டது. வீட்டினுள் பெண்கள் கூட்டமே அதிகமாகக் காணப்பட்டது. ஆண்கள் உள்ளேவருவதும், வெளியேறுவதுமாக அவ்விடத்தைப் பரபரப்பாக்கிக் கொண்டிருந்தார்கள்.
உள்ளே வீட்டின் சுவரில் சந்திரனின் படத்தைத் தவிர மற்றவை மறுபக்கமாகத் திருப்பி வைக்கப்பட்டிருந்தன. சந்திரனின் படத்தின்முன் ஊதுபத்தி சுருள் சுருளாகப் புகைந்து கொண்டிருந்தது.

சந்திரனின் மனைவி ரூபிணி பேசவும் திராணியற்று கண்களைமூடியபடி ஓர் அறையின் மூலையில் சாய்ந்து, கைபோன இடம் கால்போன இடம் தெரியாமல் அரைமயக்கத்தில் தலைவிரிகோலமாகக் காட்சியளித்தாள்.
அக்கம்பக்கம் இருபெண்கள் இருந்து ரூபிணியின் கையை ஆதரவாகப் பிடித்தவண்ணம் "இனி எழும்பி முகத்தைக் கழுவி ஆயத்தப்படுத்துமன்... அண்ணாவர்ர நேரமாச்செல்லே...!" என்று மாறிமாறிக் கேட்டுக்கொண்டிருந்தனர்.



இவைகள் ஒன்றும் ரூபிணியின் காதில் விழுவதாகத் தெரியவில்லை.
துக்கம் விசாரிக்க வந்துகொண்டிருந்தவர்களுக்கு எதிர்வீட்டுக் கணேசண்ணை சுருக்கமாக விஷயத்தை விளக்கிக்கொண்டிருந்தார்.
மூண்டு நாளைக்கு முதல் சிங்கப்பூரிலையிருந்து சந்திரன்ரை ரெலிபோன் வந்துதாம். வெள்ளிக்கிழமை புறப்பட்டு அடுத்தநாள் ஜேர்மனிக்குவந்து பிறகு காரிலை இஞ்சைவந்து சேருகிறன் எண்டு. ஜேர்மனியிலை இருந்து வரேக்குள்ளைதான் இப்பிடி அக்சிடெண்ட் நடந்திட்டுது."
"என்னமாதிரி நடந்துது அக்சிடென்ற்...?"
"இவையள் அங்கை இருந்து வரேக்குள்ளை ஒரு லொறியோடை மோதுப்பட்டுதாம். சரிபிழை இன்னும் தெரியாது.இனிப் போய்த்தான் அறியவேணும்."
தூரநின்ற ஆட்களை அங்குமிங்கும் பார்த்துவிட்டுத் தணிந்தகுரலில் சொன்னார் —
"சந்திரன் அந்தஇடத்திலையே முடிஞ்சுதாம்.இன்னும் ஆரோ பாக்கிஸ்தானியனாம். அவனும் சரியாம். ஒரு ஆள் தப்பிட்டுதாம். ஆனால் அவரிட்டை பேப்பர் ஒண்டும் இல்லாததாலை ஆரெண்டு தெரியேல்லை.!"
விசயம் தெரிந்திருந்தவர்களும் துக்கம் விசாரிக்க வந்ததற்காக சம்பிரதாயமாக இவற்றைத் திரும்பத்திரும்பக் கேட்டுக்கொண்டிருந்தாலும் கணேசண்ணரும் சலிக்கவில்லை.
ரூபிணியின் தாயாரால் வந்திருக்கும் பெண்களோடு கவலையைச்சொல்லி அழவும் முடியவில்லை.
இடுப்பில் ஒரு குழந்தை. சேலையைப் பிடித்தபடி மூத்தபிள்ளை. "ஏன் அம்மம்மா ஆக்கள் வரியீனம்...யாருக்கு பேத்தே?"என்று கேட்டு தொல்லை கொடுத்துக்கொண்டிருந்தது. மற்றது பாலுக்கு அழுதது.
மகளிடம் போய் 'பால்மா எங்கை? போச்சி எங்கை?' என்று கேட்க முடியாத நிலைமை.
'ஐயோ கடவுளே. பால்மாவையும் காணேல்லை. ஆரிட்டைக் கேட்பன்? அவளொருத்தி நேற்று மத்தியானத்திலையிருந்து பச்சைத் தண்ணியும் இல்லாமல் கிடக்கிறாள்' என்று தனக்குத்தானே வித்தியாசமான அழுகைக்குரலில் சொல்லிக்கொண்டு பால்மாவைத்தொடவும், இந்தக் குரலைக் கேட்ட அழுத பிள்ளை தனக்காகத்தான் அம்மம்மா ஏதோ பாட்டுப்படித்து விளையாட்டுக் காட்டுகின்றார் என்று நினைத்து அழுகையை நிறுத்திப் பேத்தியாரின் முகத்தில் இரு கைகளாலும் அடித்துப் பலமாகச் சிரித்தது.
பிரேதத்தை உடன் கொடுக்கமாட்டார்கள். இரண்டுமூன்றுநாள் செல்லும். அப்படி கொடுத்தாலும் நேரே சுடலைக்குத்தான் கொண்டு செல்ல வேணும் என்றும்
இல்லைக்கொடுப்பார்கள் ஆனால் சர்ச்சுக்குத்தான் கொண்டு போகலாம் என்றும் தத்தம் அனுபவத்திற்கு எட்டியவரை வாக்குவாதம் பண்ணிக்கொண்டு நேரத்தைப் போக்கினார்கள்.
அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் கொண்டுவந்த பட்டினிப்பண்டம் எல்லாம்
ஓர் அறையில் நிறைந்து கிடந்தது.



கணேசண்ணை எல்லாருக்கும் பொதுவாகச் சொன்னார்.
"லண்டனிலையிருந்து இன்னும் ஒரு மணித்தியாலத்திலை ரூபிணியின்ரை தமையன் வந்திருவார். வந்த உடனை புறப்படவேணும். போனால் எப்ப திரும்ப முடியுமோ தெரியாது.இந்தச் சாப்பாடுகளைச் சாப்பிட்டு இருந்தால் வந்ததும் போகலாமெல்லே!"
இருந்தவர்கள் ஏதும் சொல்வதாக இல்லை. ஒருவரையொருவர் பார்த்துவிட்டு மௌனமாக வேறு திசையைப் பார்த்துக்கொண்டார்கள்.
வீதியில் ஆயத்தமாகக் காரோடு நின்றவர்களுக்கு சலிப்புத்தொட்டுவிட்டது.
"என்ன லண்டன் காரைக் காணேல்லை. வெய்யில் ஏறினா ஓடுறது கஸ்ரம்!" என்று ஆளுக்காள் அலுத்துக்கொண்டார்கள்.
இன்னும் சிலர் அக்கம்பக்கத்து 'பார்'களை நிரப்பினர்.
சும்மா பொறுமையாக காத்திருந்து பழக்கமில்லாத ஒரு கோஷ்டி ஏற்கனவே காருக்குள் வைத்தே தங்களுக்குத் துணையாகக் கொண்டுவந்த போத்தலைப் பதம்பார்த்துவிட்டு சந்திரனோடு விஸ்கிகுடித்த காலங்களை நினைவுகூர்ந்து பெருமைப்பட்டுக்கொண்டது. அதில் தர்மலிங்கம் என்பவருக்கு கொஞ்சம் கூடிவிடவும் விக்கி விக்கி அழத்தொடங்கிவிட்டார்.
அவரை ஆற்றுவது பெரும்பாடாகிவிட்டது.உள்ளேசென்ற விஸ்கி,வியர்வையாக வெளியேவரவும் காருக்குள் இருக்கமுடியாது வெளியே இறங்கியவர் தெருவில் போகும் பிரஞ்சுக்காரருக்கு காரணமில்லாமல் 'மொஞ்சு' (காலைவணக்கம்) சொல்லிக் கைகொடுக்கவும் கூட இருந்தவர்கள் பலாத்காரமாக பிடித்துவந்து காருக்குள் அவரைச் சுருட்டித் திணித்துக்கொண்டார்கள்.
இவ்வேளை எல்லோரும் பரபரப்பானார்கள்.
"லண்டன்கார் வந்திட்டுது.லண்டன்கார் வந்திட்டுது!"என்று ஓர் குரலையடுத்து அவ்விடம் பரபரப்பானது.
ரூபிணியின் அண்ணர் லண்டனிலிருந்து வந்திருக்கிறார் என்ற செய்தி வீட்டுக்குள் இருப்பவர்களுக்கும் எட்டியது.
ரூபிணியும் தன்னை சுதாரித்துக்கொண்டு எழுந்து நின்றாள்.
வாசலில் வந்த மகனைக்கண்ட தாயார் —
"இப்பதானே ராசா உனக்கு வழிதெரிஞ்சுது. அவளைத் தனிக்கப் பிரிச்சிட்டியளே' என்று அழவும், அதையொன்றும் கவனிக்காத லண்டன்காரர் அங்குமிங்கும் திரும்பி, ரூபிணிஎங்கை என்பது போலப்பார்ப்பதற்கிடையில் "ஐயோ அண்ணா" என்று ரூபிணி கூக்குரலிடவும் அந்த உணர்ச்சிமயமான காட்சியைத் தாங்காத மனங்கள் சிலவும் விசும்பின.
சிலர் கண்களைத் துடைத்துக்கொண்டு வெளிவந்தனர்.
சிறிதுநேரம் அவர்களைக் கவலைதீர அழவிட்ட கணேசண்ணர் மெல்ல லண்டன்காரரை அணுகி தாழ்ந்தகுரலில் —
"ஆஸ்பத்திரியிலை இருந்து ரெலிபோன்வந்தது. போஸ்ட்மோட்டம் முடிஞ்சுதாம். வந்து பிரேதத்தை எடுக்கலாமாம். அதுதான் உங்களைப் பார்த்துக்
கொண்டிருந்தனாங்கள். வேளைக்குப் போய்வரவேணும்!" என்றுசொல்லி

இழுத்தார்.

"ஓகே நான் ரெடி!" அவர் என்று சொன்னதும் எல்லோரும் ஆயத்தமானார்கள். கொண்டுவந்திருந்த பட்டினிப்பண்டங்கள் வழியிலை 'பார்க்கிங்'கிலை சாப்பிடலாம் என்று காரில் ஏற்றப்பட்டன.

வெய்யிலுக்கு முதல் புறப்பட இருந்த பிரயாணம், மணி பன்னிரெண்டுக்கு ஒருபடியாக வாகனங்கள் ஊரத்தொடங்கின. ஒருகாரை இன்னொன்று தவற விட்டாலும் என்று முன்னெச்சரிக்கையாக ஆஸ்பத்திரி விலாசம் புறப்படும் ஐந்து கார்களுக்கும் கொடுக்கப்பட்டது. ரூபிணியின் அம்மா குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளவும் மற்றவர்கள் புறப்பட்டார்கள்.

அம்மாவுக்குத் துணையாக பக்கத்துவீட்டுப் புனிதமக்காவும் இருப்பது என்று முடிவாயிற்று. புறப்படும்வேளை —

"எல்லோரும் போட்டால் நாங்கள் பாஷைதெரியாதனாங்கள். ரெலிபோன் அடிக்கடி வருகுது. என்ன செய்கிறது?"என்று அவர்கள் கேள்வி எழுப்பவும் "நாங்கள்தானே நேரே போறம் ரெலிபோன் எதுக்கு கழட்டிவிடு.. கழட்டிவிடு!" என்று இரண்டுமூன்று குரல்கள் ஏகோபித்து ஒரே முறையில் சொல்லவும் ரெலிபோன் கழற்றப்பட்டுத் தலை கீழாகத் தொங்கியது.

ஐம்பது கிலோமீற்றர்வரை ஒன்றன்பின் ஒன்றாகச் சென்ற கார்கள் பின்னர் ஒன்றையொன்று காணாமல் போனது.

தர்மலிங்கஅண்ணர் சென்ற கார் ஒரு பெற்றோல் செற்றைப் பார்த்து நின்று விட்டது. விஸ்கி குடிச்ச வாய்க்கு சப்பென்று இருந்ததால் டிக்கியைத் திறந்து பப்படம் பொரியல்வகையை ஒருகை பார்த்துக்கொண்டு மீண்டும் புறப்பட்டது. கொஞ்சம் பசியாறிய உற்சாகத்தோடு மீண்டும் பெற்றோல்செற்றில் வாங்கிய போத்தல் உடைக்கப்பட்டது.

அதில் ஒருவர் தனது தம்பியை ஊரிலிருந்து வருவிக்க சந்திரனிடம் சொல்லி வைத்திருந்தார். அவருக்கு அந்தக் கவலை.

"தெரிஞ்ச ஆள் பிச்சினை இல்லை எண்டு பார்த்தனான் பார். அதற்கிடையிலை இப்பிடியாப் போச்சுது!" என்று வருத்தப்பட்டுக்கொண்டார்.

"சந்திரன் எப்ப ஏஜன்சிவேலை துவங்கினவன்... எனக்குத்தெரியாது?" இது ஒருவரது கேள்வி.

"முந்தி ஜேர்மனியிலை இருந்து சுவிஸ் பிரான்ஸ் எண்டு போடர் செய்தவன். பிறகு ஒரு பாகிஸ்தானியனோடை சேர்ந்து நேரடியா சிங்கப்பூர், பிரான்ஸ் இப்படியாய் ஆக்களை அனுப்பத்தொடங்கினான்."

"அதை விடுங்கோ... இப்ப அட பாரன் இந்த இளம்வயசிலை அந்தப் பிள்ளைக்கு இப்பிடியாப் போச்சுது!"

"அதுக்கென்ன செய்யிறது.அந்தப் பிள்ளைக்கு ஒருத்தனைக் கட்டி வைக்காமல் விடப்போறானே தமையன்?!"

'தமையன் லண்டனுக்குக் கூட்டிச்செல்வாரா அல்லது பாரிசிலை தாயாரோடை ரூபிணி இருப்பாளா?' என்ற வாதம் சூடுபிடித்தது.

"லண்டனுக்கு அனுப்புவதற்குக் கூட்டிக்கொண்டுவந்த ரூபிணியை பாரிசிலை



தங்கவச்சு தன்ர மனைவியாக்கிக்கொண்டான் சந்திரன்.இதுதான் லண்டனிலுள்ள ரூபிணியின்ர தமையனுக்குக் கோபம்!"என்று விளக்கினார் விசயமறிந்த ஒருவர். இதைக்கேட்டு தர்மலிங்கண்ணரும் தன் பங்குக்கு, "இருந்து பாருங்கோ முப்பத்தொண்டு முடியட்டுக்கும்.நான் ஒரு நல்லசம்பந்தம் ஒண்டிருக்கு செய்து வைக்காட்டி...!" என்று சபதம் எடுத்துக்கொண்டார்.

இப்படியானசம்பாஷணைகளோடு இவர்களது வாகனம் சென்றுகொண்டிருந்தது.

எல்லோரும் போனபின் பாக்கியஅம்மா பிள்ளைகளையும் தந்திரமாக நித்திரை யாக்கிவிட்டு கவலையைச்சொல்லி ஆறலாம் என்று புனிதம்அக்காவிடம் வந்தார். புனிதமக்காவும் இப்படியான கட்டங்களில் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டுத் தானும் உணர்ச்சிவசப்பட்டு ஆறுதலடையும் பேர்வழி.

அவரும் முகத்தை சோகமாக வைத்துக்கொண்டு ஆயத்தமாக இருந்தார்.

பாக்கியம்அம்மா வரும்போதே —

"போகேக்குள்ளை மாமிக்கு என்ன வாங்கிக்கொண்டு வாறதெண்டு திரும்பத் திரும்பக் கேட்டியளே.. இப்பிடிப் போறதுக்குத்தானே!" என்று சொல்லி அடக்கி வைத்திருந்த கவலையை திடீரெனக் கொட்டி அழவும் இதுகேட்டு நித்திரையான குழந்தை எழும்பி அழத் தொடங்கிவிட்டது.

"என்னவோ தெரியேல்லை. இந்தச் சின்னது ஒருகண் நித்திரையில்லை. திடுக்கிட்டுத் திடுக்கிட்டு ஒரே அழுகைதான். குழந்தையும் தெய்வமும் ஒண்டெண்டு எல்லவோ சொல்லுறவையள்... பாத்தியளே... அதுக்கு விளங்கிட்டுதுதானே!" என்று ஆமோதிப்பதுபோல் வாயில் கையைவைத்து தலையசைத்தார் புனிதமக்கா.

"இப்ப மூன்றுநாளாக ஒரே கெட்டகனவுதான் எனக்கு.அந்த நல்லூரானே முதலே காட்டிப்போட்டான்!" என்று தன் கடவுள் நம்பிக்கையை உறுதிப்படுத்தினார் சந்திரனின் மாமியார்.

மாலை ஆறுமணியளவில் ஐந்துபத்து நிமிட இடைவெளியில் எல்லாக்கார்களும் ஆஸ்பத்திரியைச்சென்றடைந்தன.

அவசர அவசரமாக வாகனத்தை விட்டு இறங்கிய ரூபிணியும் அவளது அண்ணன் சிறீதரனும் நேராக வரவேற்புக் கவுண்டரில் தம்மை அறிமுகப் படுத்தியதும் அதன் பொறுப்பாளர் ஓரிரு நிமிடங்களில் உள்ளேயிருந்து வந்து ரூபிணியையும் அவளுக்கு உதவியாக ஒரு பெண்துணையையும் அழைத்துக்கொண்டுபோய் சவச்சாலையில் பிரேதத்தை அடையாளம் காட்டவும் மற்றவர்கள் வரவேற்பறையில் காத்திருந்தனர்.

உள்ளேசென்ற ரூபிணி அடுத்த சிலநிமிடங்களில் அவசரமாக ஓடி வருவதைக் கண்ட எல்லாரும் திகைப்புடன் எழுந்து நின்றனர்.

"ஐயோ அண்ணா...அது அவரில்லை. வேறையாற்றையோ பொடி!" என்று ஒரு குண்டைத் தூக்கிப்போட்டாள் ரூபிணி.

கூடத் துணைக்குச்சென்ற தேவியை 'நீங்கள் பார்த்தீங்களோ?' என்பதுபோல் நோக்கியது எல்லோர் பார்வையும்.

அவளும் அதிர்ச்சியிலிருந்து மீளாது,'இல்லை!' என்பதுபோல் தலையசைத்தாள். இவ்வேளை கணேசண்ணருக்கு பொறிதட்டியதுபோல் ஏதோ நினைவுக்கு வரவும்,

"214ம் நம்பரிலை இந்தக் காரில வந்த ஒரு ஆள் இருக்காம்.பேர் தமிழ்ப் பேராயிருக்கு. விசாரிச்சிட்டு வாறன்!" என்று கூறிவிட்டு ஓட்டமும் நடையுமாகச் செல்லவும், இன்னும் இரண்டொருவர் அவரைத் தொடர்ந்தனர்.

சிலநிமிடங்களில் அதேவேகத்தில் திரும்பிவந்த கணேசண்ணர் என்ன தகவலை அறிந்தாரோ ஒரு ரெலிபோன் நம்பரை ரூபிணியிடம்கொடுத்து, "இதுதான் கடைசியாக சந்திரன் இருந்த ஹோட்டல் நம்பராம். எதற்கும் ஒருக்கால் விசாரிச்சுப் பாருங்கோ!" எனவும், என்ன நடந்தது என்ற கேள்வி எழவில்லை.

உடனடியாக ஆஸ்பத்திரியில் ஒரு ஒதுக்குப்புறமாக இருந்த ரெலிபோன்பூத்தில் ரூபிணி பேசினார்.

எல்லோரும் அக்கறையுடன் எதிர்பார்க்கும் விசயமாகையால் மிக அருகாமையில் எல்லோரும் கூடி நின்றனர். ரெலிபோனில் வார்த்தைகள் கேட்கும்அளவுக்கு, "ஹலோ..ஹலோ" என்ற சத்தம்கேட்டதுமே குரலில் அறிந்த ரூபிணியின் முகத்தில் பெரிய மாற்றம் தோன்றியது.

அதிர்ச்சியில் சிலவினாடிகள் மௌனமாக நின்ற ரூபிணி,

"என்ன வேலை செய்தனீங்கள்?"

"ஆர்...ரூபிணியே...! நான் வாறதெண்டு சொல்லிப்போட்டு வரேல்லை என்று கோபிக்கிறீர்போல. அதுசரி ரெலிபோனை ஆர் கழட்டினது? எத்தினைதரம் இண்டைக்கு றை பண்ணிட்டன்... சரி....அதுபோகட்டுக்கும்......" என்று கூறித் தொடர்ந்தான்.

"அது என்ன நடந்துதெண்டால் நான் ஒரு ஆளை அனுப்புறதுக்கு ஒரு பார்ட்டியை ஒழுங்குசெய்து வைத்திருந்தனான். கடைசிநேரத்திலை அந்தப் பகுதி கைவிரிச்சுப்போட்டுது. உடனை அனுப்ப வேண்டியிருந்ததாலை என்ரை புத்தகத்திலை தலையை மாத்திப்போட்டு அனுப்பிவிட்டன்.!" என்று சொல்லித் தானே பெருமைப்பட்டு எக்காளமாகச் சிரித்தான்.

"அதுக்கேன் பதறுனீர். நான் என்ன குழந்தைப் பிள்ளையே? எப்பிடியும் வந்து சேருவன்தானை? என்னுடைய ரெலிபோன்நம்பர் அந்த ஆளிட்டை இருந்திருக்கும். ஏன் சொல்லேல்லையே...?"

சுந்திரன் தொடர்ந்து பேசிக்கொண்டேயிருந்தார்.

ரூபிணியால் எதுவும் பேசத் தோன்றவில்லை.

சிலையாக அதிர்ச்சியுடன் கேட்டுக் கொண்டிருந்தார். வில்லாய்விரிந்தன எல்லோர் புருவங்களும். ஏககாலத்தில் பல சோடி கண்கள் அகலவிரிந்தன.

அவமானம், ஏமாற்றம், வெட்கம் எல்லா உணர்வுகளும் அனைவரையும் வாட்ட நிசப்தத்துடன் அவ்விடத்தைவிட்டு மெல்ல நகர்ந்து வெளியேறியது கூட்டம். அப்பொழுதுதான் காரின் வெக்கை தாங்காது வியர்த்தது. நித்திரைசெய்ய



முடியாது விழித்துக்கொண்ட மணியண்ணர் காரைவிட்டு இறங்கி, ஆஸ்பத்திரி வாசலில் நட்டகல்லுப்போல அசையாது விரக்தியுடன் நின்றவர்களைப்பார்த்து கடுப்பாகிவிடார்.

"உப்பிடி பேசாமல் நிண்டால் எப்ப பாரிசுக்குப் போய்ச் சேருறது? பிரேதத்தை தூக்கிக்கொண்டு சட்டெண்டு போறதுக்கு உப்பிடி நிண்டால்...?" என்று அதட்டவும் அவர்களால் சிரிப்பை அடக்க முடியாது போய்விட்டது.

□□□

## ஜீன்ஸ்.

மரபணுக்கள்!

நாற்பது லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது மனிதவர்க்கம்.

ஒவ்வொரு மனிதனும் பிறக்கும்போது அவனின் உடலில் இந்த நாற்பது லட்சம் ஆண்டுகளின் அனுபவங்கள் வம்சா வழியாக அவனின் மரபணுக்களில் தொடர்கிறது.

மேலும் அவன் வாழும் காலங்களில் ஏற்படும் அனைத்து அனுபவங்களும் இந்த மரபணுக்களில் பதிவாகி பிறகு அவனின் வாரிசுகளில் தொடர்கிறது.

இவ்வாறு ஒவ்வொரு மனிதனின் மரபணுக்களில் ஒரு மனிதனின் குணம், மொழி, கலாச்சாரம், பண்புகள், பழக்க வழக்கங்கள், தொழில், நோய், திறமை ஆகிய அனைத்தும் பதிவாகின்றன.

இந்த மரபணுக்கள் ஒரு மனிதன் இறந்தாலும் இவை அழிவதில்லை. இந்த மரபணுக்கள் மனிதனின் ஒவ்வொரு அணுவிலும் இருக்கின்றது. இவ்வாறு உடல் முழுவதும் இருக்கின்ற இந்த மரபணுக்களின் நீளத்தைக்கணக்கிட்டால் பல லட்சம் மைல்களாகும். உதாரணமாக உங்களின் இந்தமரபணுக்களின் நீளத்தில் எட்டாயிரம் தடவை சந்திரனுக்குச் சென்று வந்துவிடலாம்.

(–ஆழ்மன ஆற்றலும் பிரபஞ்சசக்திகளும்– நூலிலிருந்து)

# கவலை தீர வேண்டுமே!

பள்ளித்தோழர் இல்லையே
பாலன்வேலன் இல்லையே
எள்ளுப்பாகு இடித்துத்தர
எனது பாட்டி இல்லையே

உள்ளம் பாரம் கேட்குதே
ஊரிற் சுற்ற வேண்டுமாம்
காரிற் சுற்றும் காலம் யாவும்
கரைந்துபோக வேண்டுமாம்.
துள்ளி ஓட வேண்டுமே
துயரம்மாற வேண்டுமே


இருபது மீற்றர் வர்க்கமாம்
இது இரவிற் சொர்க்கமாம்
சின்னத்திரைப் பெட்டியாம்
சிந்தை கொள்ளை கொள்ளுமாம்

சின்ன மாமா சொல்லுறார்
சின்ன மனசை கொல்லுறார்
பனைதென்னை உள்ளதோ-இங்கு
பாலும் பழமும் நல்லதோ?

மலையைப் பார்த்த கண்களும்
அலையைப் பார்த்ததில்லையே
கடலைப் பார்த்ததில்லையே- எந்தன்
கவலை தீர வேண்டுமே

காலம் மாறவேண்டுமே
கவலை தீர வேண்டுமே
தமிழன் வாழவேண்டுமே- எங்கள்
தலைவன் ஆளவேண்டுமே.

-என்.சிறீதர் (பிரான்ஸ்)






எங்கள்

# இளந்தளிர்கள்!

வண்ண வண்ணப் பூவரசே
வாசம் தரும் பூவரசே
எங்கள் இதயச் சோலையிலே
சிரித்து மலரும் பூவரசே
பூந்தமிழ் பரப்பும் நம் பூவரசே
புத்தாண்டு வாழ்த்துக்கள் பூவரசே!

—குப்பிளான் யோகேஸ் குடும்பத்தினர்.



பூவரசு ஆசிரியர் அவர்களுக்கு!

அன்புடன் நீங்கள் எங்கள் இளந்தளிர்கள் குறுக்கெழுத்துப் போட்டியில் நான் பரிசுபெற்றமைக்காக அனுப்பிவைத்த பரிசுத்தொகை 10 டி.எம். கிடைத்தது, நன்றி. மேலும் பூவரசு பல கிளைகள்விட்டு மேலோங்கி வளரவேண்டும் எங்களைப்போல பல ஆயிரம் இளந்தளிர்கள் பலன்பெறவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

அன்புடன்
சி.ரோகிணி.
(பிறேமன்)

இளையோர்க்கான பிரத்தியேக இணைப்பு.

நாம் வாழத் தமிழ்வாழும்
தமிழ் வாழ நாம்வாழ்வோம்.

பூவரசு

# இருந்தும் இல்லாதவர்கள்.

இன்று உலகெங்கும் பரந்து வாழும் தமிழினம் ஏதோ ஒரு நிகழ்வின்மூலம் தங்களை தமிழர்கள் என்று இனம் காட்டிக்கொண்டு, பண்பாடு கலாச்சாரங்களைப் போற்றி வளர்த்துக்கொண்டு வாழ்கின்றனர்.

இன்னும் சிலரோ தங்களை தமிழர்கள் என்று கூறுவதற்கே வெட்கப்படுகின்றனர்.

இந்த இரு துருவத்தினாலும் வெட்கப்படுவோரை எடுத்து நோக்குவோமெனில் இவர்களில் வரட்டுக் கௌரவத்திற்கு இலக்காகி அழிந்து போவது இளம் சமுதாயத்தினரே.

இதற்கு இவர்கள்கூறும் காரணம் தாங்கள் இந்நாடட்வரைப்போல் வாழ்கின்றோம் என்பதே. இந்நாட்டவரைப்போல வாழுங்கள். நான் வேண்டாம் என்று கூறவில்லை. ஏன் அவர்களிடம் உள்ள நல்ல பழக்க வழக்கங்களை விட்டுவிட்டு கெட்டதைமட்டும் எடுத்துக் கொள்கின்றீர்கள்?

'கானமயில் ஆட கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்து — தானும்தன்
பொல்லாச் சிறகை விரித்து ஆடினால் போலுமே
கல்லாதான் கற்ற கவி.'

என்று ஔவையார் மூதுரையில் கூறியதுபோல்தான் இவர்களின் செயலும்.

இறுதியில் இவர்கள் தங்களது கலை கலாச்சாரத்தையும் மறந்து, இந்நாட்டவரின் பழக்க வழக்கங்களையும் மறந்து உறவுகள் இருந்தும் இல்லாத அனாதைகள்போல் வாழப்போகின்றார்கள்.

இப்படி உறவுகள் இருந்தும் இல்லாத நிலைக்கு இன்றைய இளைஞர்கள் தள்ளப்படுவதற்கு பெற்றோர்களே பெரிதும் காரணமாகிறார்கள்.

உதாரணத்திற்கு பெண்பிள்ளைகளை நாட்டியம் மற்றும் பிற கலைகளைப் பயிலவைப்பதுபோல், ஆண் பிள்ளைகளையும் ஏதாவதொரு கலையில் ஈடுபடுத்தலாம்.



இப்படி ஈடுபடுத்துவதன்மூலம் எமது கலைகளையும் வளர்க்கலாம். பிள்ளைகளும் திருந்தலாம்.

வெளிநாட்டவரைப் போலத்தான் வாழ்வோம் எமது கலைகள்எதற்கு? என்பவர்களுக்கு கணனி கற்பிக்கலாம்.

கணனி பயிற்றுவிப்பதன் மூலம் இதோ மலர்ந்து கொண்டிருக்கும் 21ம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைப்பதற்கு மிகவும் பலனுள்ளதாக இருக்கும். அதைவிடுத்து பிள்ளைகள் கெட்டுப் போகின்றார்கள் கெட்டுப்போகின்றார்கள் என்று புலம்பினால் என்ன அர்த்தம்?

இளைஞர்களே! நாங்கள் இந்த நாட்டில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தவர்கள்.

இந்தநாடு ஒருபோதும் எமக்குச் சொந்தம் இல்லை. நாம் என்றோ ஒருநாள் இந்த நாட்டைவிட்டுத் திருப்பி அனுப்பபட வேண்டியவர்கள். எனவே நாம் இங்கு ஏதாவது ஒரு துறையில் சிறந்து விளங்கினால்தான் நமக்குப் பெருமை. நம் பெற்றோருக்கும் பெருமை. நாம் பிறந்த தாய்நாட்டிற்கும் பெருமை.

பரிமளநாதன் மயூரன் —
(பழையமாணவன் பாசல் தமிழ்ப்பாடசாலை. சுவிஸ்)

**பூவரசு 8வது ஆண்டு நிறைவையொட்டி**
**எங்கள்இளந்தளிர்களுக்கிடையே நடாத்தப்பட்ட**
**உறுப்பெழுத்து, சித்திரம்வரைதல், கட்டுரை**
**எழுதுதல் ஆகிய போட்டிகளில்**
**வெற்றியீட்டியவர்களின் பெயர் விபரங்கள் அடுத்த**
**இதழில் வெளியாகும்.**
**அதற்கு முன்னர்**
**பரிசுபெற்றவர்களுக்கு**
**கடிதம் மூலம் தனித்தனியாக**
**அறிவிக்கப்படும்.**

யானை.

காட்டில் வாழும் விலங்குகளில் யானை மிகவும் பெரிய உருவமாகும்.
இது கூட்டம்கூட்டமாக வாழும் இனத்தைச் சேர்ந்தது.
அதன் கண்கள் மிகச்சிறியவை. யானையின் மூக்கு நீண்டுவளர்ந்திருக்கும்.அது தும்பிக்கை எனப்படும். இந்த தும்பிக்கையினால் பொருட்களை மணந்து உணரவும், பொருட்களைத் தூக்கவும் பயன்படுத்துகின்றது.
அது தன் தும்பிக்கையினால் கிட்டத்தட்ட 5 லீற்ரர் வரை நீரை உறிஞ்சும். இது சிறிய ஊசியையும் எடுக்கும்.பெரிய பாரமான மரங்களையும் விழுத்தக் கூடியது. அதனால் அதன் தும்பிக்கை அதற்கு மிகவும் உதவியாக இருக்கின்றது.
யானை மிகவும் ஆழமான ஆறுகளைக்கூட நீந்திக் கடக்கக்கூடியது. யானையின் செவிகள் கேட்பதற்கு மாத்திரம் பயன்படுவதில்லை. அதன் உடம்பு மிகவும் மொத்த தோலினால் இருப்பதனால் தனது வெப்பத்தைத் தணிப்பதற்காக தனது சுளகுபோன்ற காதினால் விசிறிக் குளிர்மைப்படுத்தும். ஒருயானை 12 அல்லது 13 வருடத்தில் குட்டிபோடும். அப்படி குட்டிபோடும்போது 21 மாதங்கள் வரை தேவைப் படுகின்றது.பிறந்த ஒரு யானைக்குட்டி கிட்டத்தட்ட 90 – 100 கிலோ நிறையைக் கொண்டது. ஒரு யானைக்குட்டி பிறந்து இரண்டுவருடம்வரை தாய்ப் பாலையே உணவாகக்கொள்ளும். அது தனது உடம்பிலிருக்கும் பூச்சிகளை அழிப்பதற்காக மண். சேறு. நீர் ஆகியவற்றில் ஒழுங்காக நீராடும். இதன் உடம்பில் எப்போதும் சேறு ஒட்டுப்பட்டிருக்கும். அது யானையின்வெப்பத்தைத் தணிக்கும்.
யானை இலை தழை பழங்கள் கரட் கிழங்கு போன்றவற்றை உணவாகக் கொள்ளும். இது ஒரு நாளில் கிட்டத்தட்ட 70 – 90 லீற்ரர்வரை நீரைக் குடிக்கும்.
யானையின் கடைவாய்ப் பற்கள் இரண்டும் கொம்புகள் போல இருக்கும். அவை தந்தம்




எனப்படும். இன்று பெரும்பாலான யானைகளை அழித்து அதன் தந்தங்களில் சிலைகள் போன்ற பொருட்கள் தயாரிப்பதனால் பெருந்தொகையான யானைகள் குறைந்துகொண்டே போகின்றன.

— ஆனந்த் குலதாசன்

பொங்கல்.

தைமாதம் என்றாலே பொங்கல் தினம்தான் அனைவருக்கும் ஞாபகத்தில் வரும்.
பொங்கலை உழவர் திருநாள் எனவும் அழைப்பதுண்டு.
மனிதன் உயிர்வாழ்வதற்கு உணவு முக்கியமானது. அத்தகைய உணவினை அளிப்பவைகள் பயிர்களே.
பயிர்கள் வளர்வதற்கு சீரான கால நிலை அவசியம்.
அப்போதுதான் பயிர்ச்செய்கையின் பலன்களைப் பெறலாம்.
பண்டைய காலங்களில் ஒவ்வொரு போகத்தின் போதும் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கும்போதும் ஏர் பூட்டுகின்ற நாளாக பொங்கலிட்டுப் பூசை செய்தனர்.
அவ்வாறே நாளடைவில் நெல்வயலில் நெற் கதிர்களைக் கண்டதும் தமது மகிழ்ச்சியினை வெளிப்படுத்தவும் பொங்கலிட்டார்கள். நெல் அறுவடையின்போது எவ்வித இடையூறுகளோ இயற்கை ரீதியிலான பாதிப்புக்களோ நேரக் கூடாது என இறைவனை வேண்டும்நோக்கிலும் பொங்கலிட்டனர்.
ஏனவே இயற்கையின் சக்தி எந்தளவிற்கு அத்தியாவசியமானது என்பதை இது உணர்த்துகின்றதல்லவா?
இதில் சூரியனே முக்கிய பங்கை வகிக்கின்றது. எனவே இயற்கையில் எவ்வித மாற்றங்களும் நேர்ந்திடக்கூடாதென சூரியனிடம் உழவர்கள் வேண்டிக்கொண்டனர். சூரியனை வணங்கும்போது சூரியனுக்குப்பொங்கலிட்டனர். இவ்வாறு சூரிய பகவானுக்கு பொங்கலிடும் வழக்கம் அன்று தொட்டு இன்று வரை




தொடர்கின்றது. உழவர் மட்டுமின்றி உலகம்
பூராவும்உள்ள தமிழ்மக்கள் இந்தப் பொங்கல்
தினத்தை தமிழர் திருநாளாகவே
கொண்டாடுகின்றனர்.
சூரியனுக்கு பொங்கலிடுவது மட்டுமன்றி
எமக்காகப் பாடுபடுகின்ற உழவர்களை
நினைவூட்டி நன்றி செலுத்தும் விழாவாகவும்
பொங்கல் திருநாளை தமிழ்மக்கள் மிக
விருப்பத்துடன் கொண்டாடி மகிழ்கின்றனர்.
வீட்டு முற்றத்தில் சூரிய பகவானுக்கு
பொங்கல் படைக்கும்போது பொங்கல் பால்
பொங்கிவழியும்.
பின்னர் பொங்கலை தாமும் உண்டு உறவினர்
சுற்றத்தார் அனைவருக்கும் பகிர்ந்து
அனுப்புவார்கள். இது அன்றுதொட்டு தமிழர்
சம்பிரதாயமாக இருந்துவருகின்றது.
சிறுவர்களாகிய எமக்கு இந்தநாள் மகிழ்ச்சியான
நாள்தான்.
சூரியனுக்கும் உழவர்களுக்கும் நன்றியை
செலுத்தும் இனிய நாளாக பொங்கல்
நாளினைக் கொண்டாடுவதால் நன்றியின்
முக்கியத்துவத்தை உணர்த்தும் நாளாக
பொங்கல் தினம் கருதப் படுகின்றது.
எனவே, நன்றிமறத்தல் நல்லதன்று. பெற்ற
நன்மைக்கு நன்றி செலுத்துதல் மனிதப்
பண்பாக இருக்கவேண்டும்.
நாமும் எல்லோரிடமும் நன்றி உணர்வுள்ளோராய்
நடந்துகொள்வோம். அப்போதே நமது
வாழ்விலும் என்றும் மகிழ்ச்சிப் பொங்கல்
பொங்கும்.
பொங்குவோம்.நாமும்.
பொங்கலோ பொங்கல்!

—சுட்டி.

(நன்றி — வீரகேசரி வாரமலர்.)






நரியே நரியே ஓடாதே
திருடித் தின்ன எண்ணாதே!

ஆழக் குளத்ததினில் தலை ஆழ்த்தி
நீள வாலை வெளிக்காட்டி
ஒன்றாய்க் கூடி நீந்தும்
வாத்துக் குஞ்சைத் திருடாதே.
பண்ணைக்குள் புகுந்து செல்லாதே
வண்ணக் கோழிகள் திருடாதே
கொலைகள் செய்வது கொடும் பாவம்
திருடித் தின்பது பெரும் பாவம்
பச்சைக் காட்டினில் பழங்களுண்டு
பறித்தே உண்டு பசி தீர்ப்பாய்
நரியே நரியே ஓடாதே
திருடித் தின்ன எண்ணாதே.

— குப்பிளான் வை.யோகேஸ்


## கண்டுபிடியுங்கள்.

**இங்கே உள்ள 6 நத்தைகளும்
ஒரேமாதிரியாகத் தெரிகின்றன அல்லவா.
ஆனால் இவைகளில் இரண்டுமட்டுமே ஒரே
மாதிரியானவை. அவை எவை?**







## கணக்குப் புதிர்கள்




**இந்தச் சதுரத்தினுள் உள்ள இலக்கங்களை
3 கோடுகளால் 4 கட்டங்களாக நீங்கள்
பிரிக்கவேண்டும். ஒவ்வொரு
கட்டத்தினுள்ளும் உள்ள எண்களின்
கூட்டுத் தொகை 25 ஆக இருக்கவேண்டும்.**

# நல்ல நல்ல நாய்க்குட்டி



-மதுரகவி வி.கந்தவனம்

நல்ல நல்ல நாய்க்குட்டி
நான் வளர்க்கும் நாய்க்குட்டி
செல்லமான நாய்க்குட்டி
'செல்வன்' என்னும் பெயர்க்குட்டி.


கறுப்பு வெள்ளைச் சட்டையன்
கழுத்தில் சிவப்புப் பட்டையன்
சுறு சுறுப்புச் சுட்டியன்
சொல்லுக் கேட்கும் குட்டியன்.

பாசம் வைத்துக் காலையில்
பள்ளி செல்லும் வேளையில்
வாசல் வந்து வால் ஆட்டி
வழி அனுப்பும் நாய்க் குட்டி.



வழக்கமாக மாலையில்
வெளியில் செல்ல விரும்புமாம்
பழக்கம் இல்லா ஆட்களை
பார்த்துப் பார்த்துக் குரைக்குமாம்.







எடுத்துப் பந்தை உயரமாய்
எறியின் ஓடி வாயினால்
பிடித்து வந்து கொடுத்திடும்
பெரிய கெட்டிக் காரனாம்.

என்றும் வீட்டைச் சுற்றியே
நன்று காவல் செய்திடும்
நன்றியுள்ள நாய்க்குட்டி
நான் வளர்க்கும் நாய்க்குட்டி.



வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!





இந்த இரண்டு படங்களுக்கும் இடையில் 8 வித்தியாசங்கள் இருக்கின்றன. அவைகள் என்னென்ன?



# மண்ணில் பூத்த மலர்களின் ஏக்கம்

பாசமலர்கள் ஆயிரமாய்ப் பூத்துக் குலுங்குது~ அதைப்
பறித்துக்கொள்ள மனங்கள் இல்லையே!
நேசத்துக்காய் மனங்கள் இங்கே காத்திருக்குது~அதை
நினைத்துக் கொள்ள நேரம் இல்லையே!

வாடிவிடப் பூத்ததுவோ இந்த மலர்கள்~அன்பு
மாலையிலே சேர்த்துக் கொள்வீரா?
தேடிவரும் பகைவருக்கா பலியிங்கு நாங்கள்
தெரிந்து கொண்டும் தூங்குகிறீரா?

சோலையாக இருந்த தேசம் பாலையாகுதே~இன்னும்
தொலைவில்தானே இருந்து பார்ப்பீரா?
நாளைநாளை என்றிருந்தால் இன்று என்னாகும்
நாங்கள்வாழ வழிகள் சொல்வீரா?


கன்றைப்பிரிந்த போதும் அதன் தாய்ப்பசு கதறும்~கோழி
குஞ்சைக் கொல்லப் பருந்துவந்தால் விரட்டியடிக்கும்
ஒன்றுமறியா ஜீவனெல்லாம் உள்ளம் துடிக்கும்~நீங்கள்
உள்ளம் படைத்த மனிதர் என்னும் உணர்வே இல்லையா!

-இந்துமகேஷ்.





## ஈழத்தவர் மத்தியில் எழுத்தாளர்கள் உருவாகாமல் போவதற்குக் காரணம் என்ன?



*—ரவி செல்லத்துரை.*

ஈழத்தில் வசித்த நம்மவர்கள் மத்தியிலும்சரி, புலம்பெயர்ந்து வாழும் எம்மவர்களிலும் சரி எதிர்பார்த்த அளவு எழுத்தாளர்கள் உருவாகாமல் போவதற்குக் காரணம் என்ன?

ஈழத்திலும் சரி புலம்பெயர்ந்த மண்ணிலும்சரி விரல்விட்டு எண்ணும் அளவே எழுத்தாளர்கள் உள்ளனர் என்றே சொல்லாம்.

ஈழத்து எழுத்தாளர்களின் பெயர்களைச்சொல்லும்படி கேட்டால் எம்மவர்கள் விழிப்பார்கள்.அதே நேரம் இந்தியாவில் தமிழ்நாட்டில் உள்ள எழுத்தாளர்களைக் கேட்டால் யோசிக்காமலேயே பல பெயர்களைச் சொல்லுவார்கள்.

இதுதான் இன்று நாம் காணும் நிலைமை.

இதற்குக் காரணம் என்ன என்றுதான் இன்னமும் புரியாத புதிராக இருக்கின்றது.

வருடாவருடம் வைத்தியர்கள் பலர் உருவாகின்றனர். அதேபோல் பட்டதாரிகள் பொறியியலாளர்கள் சட்டத்தரணிகள் என்று ஒவ்வொரு துறையிலும் பல நூற்றுக்கணக்கானவர்கள் எம்மத்தியில் உருவாகி பணமும் புகழும் சம்பாதித்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள்.

இப்படி இருக்கும்போது ஏன் எம்மினத்தில் எழுத்தாளர்கள்



உருவாகவில்லை என்பது ஒரு புதிர்தானே?

எம்மவர்கள் மத்தியில் வாசிக்கும் பழக்கம் குறைந்துவிட்டது என்பதால் எம்மினத்தில் எழுத்தாளர்கள்தொகை குறைந்து விட்டது என்று சொல்லமுடியாது. ஏனெனில் இந்திய சஞ்சிகைகளை வாங்கி வாசிக்கும் எம்மவர்கள் ஏராளம். ஏராளம். அப்படி இருக்கும் நிலையில் இந்தக் கேள்விக்கு விடை புரியாத புதிர்தானே?

எம்மில் உள்ள சில எழுத்தாளர்களிடம் இந்த புரியாத புதிரைக் கேட்டபோது பலவிதமான பதில்கள் கிடைத்தன.

எழுதுகின்ற எழுத்துக்கு ஏற்ற ஊதியம் வழங்கப்படுவதில்லை. எழுதுகின்ற எழுத்தாளர்களைப் பாராட்டி வாழ்த்துக்கள் கருத்துக்கள் வழங்கப்படுவதில்லை. அத்துடன் எம்மவர்கள் ஈழத்து எழுத்தாளர்களின் எழுத்துக்களை வாசிக்க நாட்டம் கொள்வதில்லை போன்ற கருத்துக்களுடன் வேறு சில கருத்துக்களும் வெளியாகின.

அதாவது இந்திய நடைமுறை பேச்சுத்தமிழில் வெளியான கதை கட்டுரை போன்றவற்றை வாசித்து பழகிய எம்மவர்கள் ஈழத்து பேச்சுநடையில் வெளிவரும் கதை கட்டுரைகள் போன்றவற்றை வாசிக்கத் தயங்குகின்றனர் என்பதேயாகும்.

ஈழத்திலும் ஐரோப்பாவிலும் ஓரளவு பிரபல்யம் வாய்ந்த ஓர் எழுத்தாளரிடம் இதே கேள்வியைக் கேட்டபோது அந்த எழுத்தாளர் ஓர் ஏளனப்புன்னகையை உதிர்த்தார்.

அவர் ஓர் எழுத்தாளர் என்பதால் அந்தப் புன்னகையில் எத்தனையோ அர்த்தங்கள் இருப்பதை உணர்ந்துகொள்ளக் கூடியதாக இருந்தது.

அதைத் தொடர்ந்து அவரின் பதிலிலிருந்து ஏன் எம்மவர்கள் எழுத்துத் துறைக்கு வரத் தயங்குகிறார்கள் என்ற புரியாத புதிருக்கு ஓரளவு பதில் கிடைத்தது எனலாம்.

அவர் கூறியது-

'நான் ஒரு எழுத்தாளன். இதை நான் கூறவில்லை. எம்தமிழ் வாசகர்கள் என்னை ஒரு எழுத்தாளனாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இலங்கையிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பவற்றிற்கு கதைகள் கட்டுரைகள் கவிதைகள் என்பவற்றுடன் பல ஆங்கிலப் பத்திரிகைகளில்வரும் முக்கிய நிகழ்ச்சிகளையும் எமது வாசகர்களின் மனோநிலைக்கு ஏற்ப மொழிமாற்றம் செய்து எழுதி வருகின்றேன். இவை அனைத்தும் எனது முழு நேரத்தொழில் அல்ல. பகுதிநேரப் பொழுது போக்காகும். தொழில் என்றால் ஊதியம் உண்டு. ஆனால் எனது எழுத்துத்

துறைக்கு ஊதியம் இல்லை என்றபடியால் அது பொழுது போக்குத்தானே. நான் செய்யும் தொழில் எனது எழுத்து வேலைக்காக நான்செலவிடும் பணத்தைத் தருகின்றது.
நான் ஒரு எழுத்தாளன். எனது ஆக்கங்கள் தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றில் வெளிவருகின்றன. என்று வெளியில் சொல்லக் கூச்சப்படுகின்றேன். காரணம் எம்மவர்கள் கேட்கும் கேள்விகள்தான். அப்படி என்ன கேட்டார்கள் என்று கேட்கிறீர்களா?
எழுதுவதால் உங்களுக்கு எவ்வளவு பணம் கிடைக்கின்றது?
உங்கள் ஆக்கங்களை யார் வாசிக்கின்றார்கள்?
உங்கள் ஆக்கங்களுக்கு ஏற்ற பாராட்டுக்கள் வருகின்றனவா?
எதுவும் இல்லை என்றால் ஏன் உங்கள் நேரத்தை இதற்காகச் செலவிடுகின்றீர்கள்? இப்படியான பல பல கேள்விகளை ஐரோப்பிய நாட்டவர்களே என்னிடம் கேட்டுள்ளார்கள்.
உங்களைப் போல எம்மவர் எழுதினால் அவர்கள் பணம் படைத்தவர்களாக இருந்திருப்பார்கள். அத்துடன் அவர்களுக்கு எமது சமூகத்தில் ஒரு தனி அந்தஸ்த்து உண்டு என்றார்கள்.
ஐரோப்பியர்களின் வார்த்தைகளைக் கேட்டு பெருமூச்சுவிட்டு அசட்டு புன்னகை செய்யமட்டும்தான் என்னால் முடிந்தது.' என்றார்.
அவரின் அனுபவ பூர்வமான இந்தப் பதில் எமக்கு உண்மை நிலைமையை விளங்க வைத்துவிட்டது எனலாம். அவரைப் போன்று எம்மவர்களில் எத்தனை ஆயிரம் எழுத்தாளர்கள் இருப்பார்கள். இவர்கள் எல்லாம் ஏன் இன்று எழுத முன் வரவில்லை என்ற புரியாத புதிருக்கு விடைகிடைத்துவிட்டது எனலாம்.
எழுத்தாளன் பிறப்பதில்லை.அவன் உருவாக்கப்படுகின்றான். நம் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்துவது எம்மவர் கடமையாகும்.



# நிழல் நிஜமாகாதே.

-திருமதி விஜயா அமலேந்திரன்.


திமிங்கிலத்தின் உடலது பெரிதுதான் என்பதற்காய்
திமிர்கொண்டு திமிங்கிலமும் தரைதனிலே நடந்திடுமேல்
நிமிர்ந்திடவும் முடியாமல் சிறுஎறும்பின் பலம்தானும்
நமக்கினிமேல் இலையென்று நாவடக்கி மாண்டிடுமே!

கடல்கடந்தே வந்ததனால் கற்பனையாய்ப் பெரியவராய்
உடல்தனிலே நகைதனிலும் பணமதிலும் தோன்றுவரேல்
உடல்திரும்பி ஊருக்கே விடுதலையின் போகவரின்
எடுத்திடவே அவரிருப்பார் அவர் செல்வம் பகிர்ந்திடவே!

முன்நடந்த சம்பவங்கள் இன்றைக்குத் திரும்பவரும்
இன்றெங்கும் நடப்பதுவோ நாளைக்கும் திரும்பவரும்
உன்னப்பன் தாய்நாட்டை விட்டுதறிசந்ததற்காய்
உன்முதுகில் அறைந்தங்கே அனுப்பிடலும் நடந்துவிடும்.

சிறுதுளியாய் விழுந்தவதை பெருமரமாய் விடுதலைக்காய்
சிறுவரையும் பெரியரையும் பெருமளவில் இழுக்குதயார்!
ஒருவழியாய் உன் உழைப்பில் சில துளிகள் கொடுத்தெனும்
ஒருபாவுன் பணிசெய்தேன்: என நீயும்சொல்லியும்பார்!

கண்முன்னே காண்கின்ற காட்சியினை நம்பிடல் வீண்
இந்நாளின் நல்வாழ்வை நிரந்தரமாய்க்கொள்தலும் வீண்
எந்நாளும் நீ நீயாயர் வாழ்ந்திடலின் வழியெது கேள்
சுயசிந்தனை வளர்த்தலினால் தனித்துவத்தைக் காப்பதுவே!



# காட்டாற்று வெள்ளமா? கடமைச் செயலா?

தமிழுணர்வு என்பது தற்பொழுது மேலோங்கியெழுகிறது.
ஆட்சிமொழி தமிழ். பயிற்றுமொழி தமிழ். எங்கும் தமிழ். எதிலும் தமிழ் என்ற துடிப்பும் வேகமும் பெருகிக்கொண்டே வருகிறது. பெருகுகிற உணர்வு காட்டாற்று வெள்ளமென அடித்துச் செல்லப்பட்டு
பிறகு மீண்டும் அடிமைவாழ்வு வாழுகிற நிலைக்குத் தள்ளப்பட்டு விடக்கூடாது. தமிழுணர்வாளர்களும் அமைப்புக்களும் இதனை ஒழுங்குபடுத்த வேண்டும்.
தமிழுணர்வு என்பது மேடைகளில்மட்டுமே நிகழ்ந்து, தனிமனிதத் துதிபாடுவதாக அமைந்துவிடக்கூடாது. அல்லது ஒருசில குழுவினருக்கிடையில்மட்டுமே நிகழ்ந்து,
நன்கு புரிந்தவர்களுக்கே மீண்டும் மீண்டும் புகுத்தி மகிழுகிற நட்புப் பகிர்வாக அமைந்துவிடவும் கூடாது. இவ்வுணர்வு மக்களைச் சென்றடைய வேண்டும். மக்கள்தான் அடித்தளம். மக்களைச் சென்றடையாத, மக்களின் செயற்பாடாக மாற்றப்படாத எதுவுமே பெரும் மாற்றத்தைக் ஏற்படுத்தாது. தமிழ் பேசுகிற இந்த மக்களுக்காகத்தான் சொல்லுகிறோம். இவர்களது குழந்தைகளின் சரியான புரிதலுக்காகத்தான் சொல்லுகிறோம். பேசுகிறோம். எழுதுகிறோம். தமிழில் அர்ச்சனை, தமிழில் விளம்பரப் பலகை, தமிழில் ஊர்திஎண் என்கின்ற அனைத்துமே மக்களோடு தொடர்புடையதுதான். இந்த மக்கள் ஏற்கவேண்டும். மக்கள் பேசவேண்டும். மக்களைச் சென்றடைய நாம் என்ன செய்ய வேண்டும்? யோசிப்போம்.
இன்றைய நிலையில் மக்களுக்குச் செய்தியைச் சொல்லுகிற தொடர்புச் சாதனங்களான பத்திரிகைகள்,சினிமா,தொலைக்காட்சி, ஏன் அனைத்துமே — மக்களது பாலியல் உணர்வுகளைச் சுண்டிவிட்டுச் சுயமாகச் சிந்திக்க விடாது மழுங்கடித்து வருகின்றன. விளம்பரத்தால் தூக்கிநிறுத்தப்பட்ட சுயநலமிகளாலும்,போலிகளாலும் காயடிக்கப்பட்டு நீர்த்துப்போய் சலிப்போடு வாழுகிறார்கள். ஆனாலும் அவர்களது ஆழ்மனதில் இன்னும் அந்த நீரோட்டம் இருக்கத்தான் செய்கிறது. 35வயதுக்கு மேற்பட்டவர்களிடம் புதைந்து கிடக்கிற இவ்வுணர்வைத் தட்டியெழுப்பவேண்டும் .
மாணவர்களிடம் இவ்வுணர்வை விதைக்கவேண்டும். இளைஞர்களுக்கு விளக்கவேண்டும். அவர்களுக்குப் புரிகிறவகையிலெல்லாம் முயற்சிசெய்து அவர்களை ஆக்கவேண்டும்.
இன்றையசூழலில் பெரும்பாலோர் படிப்பதில்லை. கேட்பதில்லை. பார்க்க மட்டுமே செய்கிறார்கள். எப்படி அவர்களை யோசிக்கவைப்பது? அதுவும் மிகக்குறைந்த நேரத்தில்.




இதன் சோதனை முயற்சிதான் தமிழ்வழிக் கல்வி ஓவியங்கள்.
ஓவியங்களைப் பார்த்தவர்கள் பேசுகின்றார்கள். விளக்குகிறார்கள். பங்கெடுக்கிறார்கள். ஓவியங்கள்மட்டுமல்ல, பாடல்கள், நாடகங்கள் என எளிமையான ஆழமான எல்லா வகைகளிலும் மக்களைச் சென்றடைந்து, மக்களைப் பங்கெடுக்கச்செய்து கருத்தேற்றம் செய்யவேண்டும். இதன் வழியிலான பொங்குதலே இயல்பானதாக, புரிந்த உணர்வாக அவர்களுக்காக எழுகிற செயலாக உணர்ந்து செயல்படுகிற உறுதியான உணர்வாக இருக்கும்.
இதுவே இன்றையத் தேவையும் நம்கடமையும் ஆகும்.

-பொள்ளாச்சி நசன்
(சிற்றிதழ்ச் செய்தி. ஆய்வு இதழில்.)

# கல்வி.

கல்வி என்பது அறிவு சார்ந்தது.
ஒருவன் தன்னைப் பற்றியும் தனது சமூகவாழ்வு பற்றியும் தான்வாழும் உலகம் பற்றியும் அறிந்துகொள்வதற்கு கல்வி அத்தியாவசியமாகிறது.
கல்வியறிவு ஒருவனது ஆளுமையை சிறப்பிக்கிறது. அவனது வாழ்க்கைக்கு அர்த்தத்தைக் கொடுக்கிறது.
இன்றைய அறிவியல் உலகம் விரைந்து பரந்து வளர்ந்து வருகிறது.
இந்த அறிவியல் அசைவியக்கத்தால் உலகத்தில் பிரமிக்கத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்துவருகின்றன. மனிதவாழ்வும் புரட்சிகரமாக மாறி வருகிறது. இது அறிவுசார் நவீன உலகத்தில் வரையறுக்கப்பட்ட. துறைசார்ந்த படிப்புக்கள் பரந்த உலகப் பார்வையையும் விரிந்த அனுபவத்தையும் கொடுக்கப் போவதில்லை.
எனவே துறைசார்ந்த பள்ளி கல்லூரிப் படிப்புக்களோடு பொது அறிவுத் திறனையும் எமது இளம் சமுதாயத்தினர் வளர்த்துக் கொள்வது இன்றியமையாதது.
இது இன்றைய காலத்தின் தேவையும்கூட.
அன்றாட வாழ்விற்கும் தேவைக்கும் பயன்படும் உலகத்தின் போக்குகளையும் நாம் தெரிந்துகொள்வது அவசியம். அதுவே நம்மை சமூகத்திற்கு பலனுள்ள மனிர்களாக ஆக்கிவிடுகிறது.

-செம்பருத்தி
(மலேசிய இதழ்)



**நாடாய்வாளர் வீரப்பனார், பாவலர் அருணாசலம் கம்போடியா-வியட்நாம் பயணம்.**

எங்கள் 9நாள் செலவில், நம்பெண் நகரம், ஆங்கூர்வாட் என்னும் பழங்கால வியப்புக்குரிய கோயில்கள், அதன் கோட்டம், மன்னர் அரண்மனை,ஏரிகள்,மக்கள்சூழல் — இடங்கள் முதலியவற்றைக்கண்டோம். ஏழாம்நாள், தென்வியட்நாம், ஓச்மின் சிட்டிக்கும் பலநகர் பகுதிக்கும் சென்று சூழல்களையும் சைகோனில் தண்டாயுதபாணி, மாரியம்மன், முருகன் ஆலயங்களையும் கண்டு வந்தோம்.
இந்த அரிய பயணம் சிறப்பானது.
தாய்லாந்து,பர்மா,லாவோசு மூன்று நாடுகளையும் முன்பே காணப்பட்டன. இவைபற்றிய குறிப்புக்கள் உலகத் தமிழர் நூல்களில் உள்ளன. பல ஏடுகளிலும் படங்களுடன் எழுதப்பட்டன. ஆவணங்கள் திரட்டப்பட்டும் காட்சிப்படங்கள் திரட்டப்பட்டும் பாதுகாக்கிறோம்.
பழந்தமிழர் தென்னாசியா — கிழக்கிந்தியப் பகுதிகளில் இந்தோனேசியா, இந்தோசைனா கடாரப் பகுதிகளுக்குச் சென்ற வரலாறு, கலாசாரப் பண்பாடு, சைவம், வைணவம் சிற்பக்கலை நுட்பங்களால் விளைந்த சான்றுகளும், ஆவண அடையாளங்களும் மிகுதி.
ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும் — பட்டினப்பாலை(அரிசியும், வைரமும் பொன்னும்) சங்ககாலச் சான்றுள்ளன.
பல்லவர் முதல் சோழமன்னர்கள்வரை இங்கு சென்று வென்று வந்தனர். முதல் நூற்றாண்டு இறுதியில் கிள்ளிவளவன்(கிமர்)சோழனும், பீலிவளை சாவானியப் பெண்ணும் மணமுடித்துக்கொண்டு கம்போடியாவில் அரச பரம்பரையை உருவாக்கிய பாரம்பரிய மரபு இன்றும் உண்டு.
சிலப்பதிகாரம், மணிமேகலை, நந்திவர்மன்வரலாறுகள் இக்கதைகூறும்.




பத்தாம் நூற்றாண்டிலும் தமிழர் பரவியது இந்நாடுகளில் உண்டு.
18ம் நூற்றாண்டில் பிரஞ்சுத் தமிழர் சைகோனில் உள்ளபோது 6000 செட்டியார்கள் இங்குவந்து கடன்தந்து பொருள்வளம் சேர்த்தனர். இங்கு இந்தியாவும் யூனெசுகோவும் ஆங்கூர் கோயில்களைக் காத்தன.

கம்பொடியத் தலைநகர் நம்பெண்ணில் சில ஈழத்தமிழர்களைக் கண்டதில், அவர்கள் ஏதிலிகளாகவும், சிலர் பணிகளில் ஈடுபட்டுள்ளதும், திரேனே என்பவர் வாழையிலை உணவகம் வைத்தும், பண்ணை நடாத்தியும் சிலர் பாதுகாக்கப்படுவதையும், காணமுடியாத சில தமிழரும் இருக்கிறார்கள்.
சைகோன் என்ற ஓச்மின் சிட்டியில் (வியட்நாம்) சில ஈழத்தமிழரும், புதுச்சேரி தமிழர்மரபினரும், இந்தியத் தமிழரையும் கண்டு கதைத்தோம். 10ம் நூற்றாண்டில் (0967ல்) காஞ்சிபுரப் பிராமணர்களுடன் வந்த பல்லவ வர்மன் என்னும் மன்னர்கள் ஆங்கூர்வாட்டில் 13ம் நூற்றாண்டுவரை, நானூறு கி.மீ. சதுரக் காட்டுப்பகுதியில் நூற்றுக் கணக்கில் சைவ வைணவ புத்தக்கோயில்களைக் கட்டினர்.
இராமாயண — பாரதக்கதைகள்புடை யோவியங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. மர்மமும் புதிரும் மிகுந்த இவை உலகப்பேரதிசயமாகக் கிடக்கின்றன.
ஒருநாள் முழுதும் இவற்றைக் கண்டோம்.
கிமர் இனத்துடன், சாவானியக் கலப்புடன், தமிழகமரபும் பண்பாடும் திரிந்து உருமாறிவிட்டாலும், தமிழக ஓவியமும், சிற்பம், கைவினை, மரவேலை ஆகிய கலைநுட்பச் சிறப்புக்களைக் கண்டு வியந்தோம். பழைய நம் பண்பாடு முழுதும் அழியவில்லை. இந்திய அரசு வழங்கிய கொடைகள் மறக்கப்பட்டுள்ளன.
பெரும்பெரும் பாறை அடுக்குகள் தமிழகத் திறனாகும்.
பழந்தமிழரின் ஊடுருவல் கலைஞானம் பளிச்சிடுகின்றது. பல அடுக்கு மாடி ஆலயத்திலும் நாட்டியம் பரதக்கலை வடிவமே.
சைகோனியில் மூன்று தமிழர் கோயில்கள் முடக்கப்பட்டு சிறப்புவிழா நடத்தமுடியாமல் 1975முதல் சிறப்பிழந்தன.
உ.த.ப.இ. அமைப்பாளர்களை நியமித்தோம். தமிழர் பரவாத நாடில்லை.

— தகவல், பேராசிரியர் இர.ந.வீரப்பனார்.

# பொசுங்குக போலிகள்!

- இராஜன் முருகவேல்



பிராங்பேர்ட் விமானநிலையம். விமானங்களின் போக்குவரத்து விபரங்களை விளம்பும் அறிவிப்புப் பலகையை நோட்டமிட்டவாறு அமர்ந்திருந்தாள் சுதா.

பல்வேறு நாட்டவர்கள் புரியாத மொழிகளில் உரையாடியவாறு, சக்கரங்கள் பூட்டிய 'சூட்கேஸ்'களை இழுத்தவாறு அவளைக் கடந்து சென்று கொண்டிருந்தார்கள்.

தோளில் ஒரேயொரு 'வாய்க்'. இலங்கையில் இருந்து கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் இதே பிராங்பேர்ட் விமானநிலையத்தை மிதித்தபோது கொண்டு வந்திருந்த அதே 'வாய்க்'.

அப்போது கனத்திருந்தது. பெறுமதியான பொருட்களுடன் இருந்தது. ஆனால் இப்போது இரண்டொரு உடுபிடவைகளுடன் பாரமில்லாமல் இலேசாக அவள் தோளே தஞ்சமெனத் தொங்கியது.

சுதாவின் மனம் இந்த மண்ணை மிதித்தபோது எவ்வளவு இன்ப மதர்ப்புடன் காற்றாடியாகக் கற்பனையென்ற வானத்தில் பறந்துகொண்டிருந்தது. ஆனால் தற்போது பலவித உணர்வுகளின் கொந்தளிப்புக் கலவைகளின் குழையல் கணத்துக்குக் கணம் கனங்களாய் இதயத்தை இடித்து மனதை அழுத்திக் கொண்டிருந்தது.

"இருப்பதைவிட்டுப் பறப்பதற்கு ஆசைப்பட்டதற்குத் தகுந்த தண்டனை கிடைத்துவிட்டது. சுட்டால்தானே தெரிகிறது. சுட்டால் சுடுவது நெருப்பென்று...!"

இழந்துபோன எதிர்பார்ப்புகளுக்கு விடையாக தனக்குத்தானே பதில்களைக் கண்டவளாய் சமாதானம் கூறிக் கொண்டாள்.

எல்லாமே முடிந்துபோய்விட்டது. முடிச்சுக்களுக்காக முழு வியளம் பார்த்து உற்றம் சுற்றம் வாழ்த்த, பெற்றவள் பாசமழையெனக் கண்ணீர் சிந்தி விழி சிறுத்து உச்சிமோர்ந்து வழியனுப்ப வந்தவள், முடிச்சுகளுக்குப் பதில் சுருக்குகள் தந்த அதிர்ச்சிகளுடன் எல்லாமே முடிந்துவிட்டதாக... அந்த முடிவில் புதிய வழி திறந்துவிட்டதான தீர்மானத்துடன் மூன்று மாதங்களில் மீண்டும் பிராங்பேர்ட் விமான நிலையத்தில் சுதா!

எதற்காகவோ புறப்பட்டு, எதற்காகவோ பாடுபட்டு, ஈற்றில் திசைமாறிய பாதையில் தடம்



பதித்ததால்— இருக்கைகளுக்காகப் பொதுநலச் சாயம்பூசும் வேசதாரிகளின் முன்னால் சேற்றை வாரிப் பூசவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட வேதனையை ஜீரணிக்க இந்தப் பயணம் ஆதாரமாகி விட்டது.

மீண்டும் தாயகத்தை நோக்கி... மீண்டும் குண்டும் குழியுமாய் சிவப்பேறிப் போயிருக்கும் மண்ணை நோக்கி... இனவெறி அரக்கர்களின் கோரத்தாண்டவத்தின் குறியீடாக கற்குவியல்களாய்... மண்மேடுகளாய் உருக்குலைந்த கட்டிடங்களுடன் அலங்கோலமாயிருந்தாலும்... கொண்ட கொள்கைக்காக... இலக்கான இலட்சியத்துக்காக எவ்வளவு இழப்புகள் ஏற்பட்டாலும் இறுதியில் விடியல் ஒளிரும் என்ற நம்பிக்கைகளே வாழ்க்கையாய் இறுமாந்திருக்கும் மக்களைத் தாங்கி, விடுதலை வேள்வித் தீயில் புடம்போட்ட தங்கமாய் ஜொலிக்கும் மண்ணை நோக்கிய பயணத்துக்காக... இன்னும் சில நிமிட நேரத்தில் புறப்படத் தயாராக பிராங்பேர்ட் விமானநிலையத்தில் சுதா...!

எவ்வளவு நம்பிக்கையுடன் வந்தாள்... வித்தியாசமான சூழலிலிருந்து புறப்பட்டு, சாதாரண மானிட வாழ்வில் ஒரு தாரமாக, ஒரு தாயாக... ஒரு சராசரி தமிழ்ப்பெண்ணாக... அன்பு பாசம்... கண்ணுக்குத் தெரியாத நேசக் கயிறுகளுள் சிக்கிப் பிணைந்து, குடும்பமென்ற வீணையில் பந்தமென்ற நாதத்தை மீட்கலாமென்று எவ்வளவு ஆசையாக இந்த அந்நிய மண்ணை அன்று மிதித்தாள்?!

சுதா!

பால்மணம் மாறாத மழலைப் பருவத்தில் தந்தையை இழந்தவள்.

"அப்பா எங்கையம்மா?"

"அப்பாவோடா...?! அப்பா சாமிட்டைப் போவிட்டாரம்மா..." என்று கலங்கியவாறு கூறும் அம்மா கமலாம்பிகையின் விடைகளைச் சின்ன வயதில் நம்பியவாறு, கறுப்பு வெள்ளையாக, சந்தணப்பொட்டும் காகிதப்பூ மாலையுமாக மரச்சட்டங்களுள் அடக்கமாகி மண்சுவரைத் தாங்கிய கப்பிலுள்ள ஆணியில் தொங்கிய தந்தையின் படத்தைப் பார்த்தே வளர்ந்தவள்.

சிறுவயதில் சின்னன் சின்னனாய் முளைக்கும் ஆசைகளை எல்லாம் தாயின் கையாலாகாத்தன்மையில் கைவிட்டு, வளர்ந்து பருவ வயதை எட்டியவளின் பின்னே லோட்டயம் பிடித்தவர்களையும் மோகவலை விரித்தவர்களையும் உதாசீனப்படுத்தியவளால் ஒன்றைமட்டும் கைகழுவிவிட முடியவில்லை.

""பிள்ளை! பத்திரம்... தேப்பனில்லாத பிள்ளையெண்டு கண்டவங்கள் வாலாட்டுவாங்கள்...""

""உனக்கென்னணை விசரே... எனக்குத் தெரியாதே எங்கடை நிலமை... நீ ஒண்டுக்கும் கவலைப்படாதையணை... நான் தப்பு வழியளுக்கெல்லாம் போகமாட்டன்...""

சேய் தாய்க்கு வார்த்தைகளால் பாலூட்டியது.

"குடும்ப நிலவரம் தெரிஞ்ச பொறுப்பான பிள்ளை..."

கமலத்தின் நெஞ்சம் பெருமையுடன் கணவனின் படத்தை நாடிக் கலங்கியது.

"ஐயா! நீங்கள் என்னைவிட்டு இடைநடுவில் மறைந்தாலும் உங்கள் மகள் என்னை வாழவைப்பாள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது..."

""பிள்ளை! காலம் கலியுகமாய்க் கிடக்கு... எந்தநேரத்திலை என்ன நடக்குமோ எண்டு

தெரியாமை வயித்திலை நெருப்பைக் கட்டிக் கொண்டிருக்க வேண்டிக் கிடக்கு...""

""கண்டதை நிண்டதை நினைச்சு ஏனணை கவலைப்படுறாய்... நான் என்ன சின்னப்பிள்ளையே... உங்கடை காலத்திலைதான் நீங்கள் பொழுதுபட்டால் தனிய வெளிக்கிடேலாமை வீட்டுக்குள்ளை அடைஞ்சு கிடந்தியளெண்டால்... இப்பவும் அப்பிடியே... இந்தக்காலம் புலியளின் காலம்... ஆரும் தன்னந்தனிய நடுச் சாமத்திலையும் திரியலாம்..."" என்று பெருமையுடன் கூறினாள் சுதா.

""அதுதானடி பிள்ளை என்ரை பயமெல்லாம்... இப்ப பொடி பெட்டையளெல்லாம் போராட்டம் விடுதலை எண்டு வெளிக்கிடுறமாதிரி நீயும் என்னைத் தனிய விட்டிட்டு வெளிக்கிட்டுடாதை...""

""அம்மா... நான் அதைப்பற்றி இன்னும் யோசிக்கேலை... அப்பிடி நான் போனாலும் பெத்த தாயை மறந்தவளாயே இருக்கப் போறன்... ஒரு குண்டோ ஷெல்லோ பட்டு அநியாயமாய்ச் சாகிறதைவிட எங்கடை இனத்துக்காக... எங்கடை மண்ணுக்காக... எங்கடை உரிமையளுக்காக உயிரை இழக்கிறது எவ்வளவு மேலான செயல்... எங்கடை வருங்கால சந்ததிகளின் உரிமைக்காக உயிரை விதைக்கிறது எண்டது எவ்வளவு தியாகமான நிகழ்வு... ஆனால் இந்தத் தியாகமும் துணிவும் எல்லாருக்கும் வராது... வந்தால் இவளவு அழிவுகளும் துயரங்களும் ஏற்படாது..."" என்று கூறியவளைப் பதைப்புடன் பார்த்தாள் கமலம்.

""அம்மா... இண்டைக்கு எத்தனையோ தாய் தேப்பனில்லாத பிள்ளையள்... பிள்ளையளைக் கண்முன்னாலை துண்டுதுண்டாய் சிதறக் கொடுத்துவிட்டும் விடியலுக்காகக் காத்துக்கிடக்கிற தாய் தேப்பன்கள்... இண்டைக்கு என்ன நடக்குமோ... நாளைக்கு என்ன கிடைக்குமோ... நாங்கள் இந்த இடத்திலை இன்னும் எத்தனை நாளைக்கு இருப்பமோ எண்டதே கேள்வியாய் இருக்கேக்கை... எண்டைக்குமே நாங்கள் நிம்மதியாய் நிரந்தரமாய் ஒரே இடத்திலை வாழவேணும் எண்டால்... இப்ப வாற துயரங்களையும் பிரிவுகளையும் தாங்கிக் கொள்ளத்தான் வேணும்...""

மனதிலிருந்து அனுபவபூர்வமாக வந்துவிழுந்த வார்த்தைகள் அவை.

கண்முன்னே நிகழும் கொடுமைகளைக் கண்டு, எதிர்காலத்தில் எதிர்நோக்கவுள்ள தீர்மானத்தக்கு முன்னோடியாக வந்த வார்த்தைகள் அவை என்பதை, சுதா அன்றொருநாள் வீடு திரும்பாதபோதுதான் கமலத்தால் உணர முடிந்தது.

தகப்பனுக்குத் தகப்பனாகவும், தாய்க்குத் தாயாகவும் தோளிலும் மடியிலும்போட்டு ஊட்டி வளர்த்த பஞ்சவர்ணக்கிளி உரிமைகீதம் பாடவெனப் புறப்பட்ட பிரிவைத் தாங்க முடியாதவளாய், துயிலாத இரவொன்றில் கண்கள் தாரையாகிப் பாயை நனைக்க.

ஆதவன் தனது அலகுகளைக் கீழ்வானத்தில் அகல நீட்டினான்.

அந்த அதிகாலைப் பொழுதில், உக்கி உதிர்ந்து கறையானுக்கும் உணவாகிக் கொண்டு, வெறும் ஈர்க்குகளால் படலையென்ற பெயரில் ஒழுங்கையருகே சோர்ந்திருந்த தென்னோலைத் தட்டி அருகே சைக்கிளின் மணி ஒலிச் சத்தம் கேட்டு, "என்னவோ, ஏதோ" என்ற பதைப்புடன் அழைத்த சத்தத்தை நாடி ஓடினாள் கமலாம்பிகை.

ஒரு காலைத் தரைதாங்க சைக்கிளில் அமர்ந்திருந்தான் இருபது வயது மதிக்கத்தக்க வாலிபன் ஒருவன்.

முன்பின் பார்த்தறியாதவன்.



""உங்கடை மகள்தானே சுதா...""

""ஓம் தம்பி... அவள் எங்கை தம்பி... அவளைக் கண்டனியேணை...""

தாய்மை தவிப்புடன் கேட்டது.

""அவவுக்கு ஒண்டுமில்லையணை... இந்தக் கடிதத்தை உங்களிட்டைக் குடுக்கச் சொல்லித் தந்துவிட்டவ..."" என்றவாறு கடிதத்தை நீட்டினான்.

""கடிதமோ...சுதா எங்கைதம்பி..."" என்று பதைப்புடன் உரத்துக்கேட்ட கமலாம்பிகையின் சத்தத்தால் பக்கத்து வீட்டில் வசிக்கும் கனகலிங்கம் அங்கே வந்தார்.

கனகலிங்கம் வயதானவர். கமலாம்பிகை குடும்பத்துக்குப் பக்கபலமே அவர்தானென்றாலும் மிகையில்லை. ஆபத்து அந்தரமென்றால் ஓடோடி உதவிக்கு வருவார்.

அவரைக் கண்டவுடன் கமலாம்பிகையின் பதைப்பு ஓலமானது. ஒப்பாரி வைக்க ஆரம்பித்தாள்.

""அண்ணை... நான் பொத்திப் பொத்தி வளர்த்த என்ரை குஞ்சு என்னைவிட்டுப் போவிட்டாளண்ணை... இந்தத் தம்பியிட்டை கடிதம் குடுத்துவிட்டிருக்கிறாள்... நான் இப்ப என்ன செய்வன்... ஐயோ கடவுளே... ஏன் இப்பிடி என்னை வருத்துறாய்...""

கனகலிங்கத்தாருக்கு நடந்தது புரிந்தது.

தினந்தினம் எவ்வளவோ தியாக உள்ளங்கள் விடுதலைக்கான வீரியத்துடன் எழுகையிலே, பக்கத்து வீட்டிலும் ஒரு உன்னத எழுகை நிகழ்ந்ததை அவரால் உணர முடிந்தது. ஒரு கணம் நெஞ்சு கனத்துக் கலங்கினாலும், மறுகணம் அப்படியொரு பிள்ளையைப் பெற்றெடுத்த அந்தத் தாயை, வயதில் சிறியவளானாலும் விழுந்து கும்பிடத் தோன்றியது.

""எல்லா விபரமும் உந்தக் காயிதத்திலை இருக்கணை... நான் போட்டுவாறன்...""

அந்த இளைஞன் விடைபெற அவசரப்பட்டான்.

""பொறு தம்பி... என்னையும் சுதாவிட்டைக் கூட்டிக்கொண்டு போ தம்பி... உன்னைக் கையெடுத்துக் கும்பிடுறன்... என்னை ஒருக்கா அவளிட்டைக் கூட்டிக்கொண்டு போ தம்பி..."" என்று கெஞ்சிக் கதறினாள் கமலாம்பிகை.

இளைஞன் சங்கடப்பட்டான்.

""இஞ்சை... பிள்ளை கமலம்... அந்தத் தம்பி போகவேணும்... சுதா எங்கை போய்விடப் போறாள்... ஆறுதலாய்ப் போய்ச் சந்திக்கலாம்..."" என்ற கனகலிங்கத்தார்,

""தம்பி... நீர் போவிட்டு வாரும்..."" என அவனுக்குக் கூறினார்.

""இதோ பாரணை... அவவை நீங்கள் எப்பவும் சந்திக்கலாம்... ஆனா இப்ப அவ எங்கை இருக்கிறா எண்டு எனக்குத் தெரியாது... நீங்கள் அவவைச் சந்திக்கிறதெண்டால், அதைப்பற்றியும் உங்கடை கடிதத்திலை இருக்குமெண்டு நினைக்கிறன்... நான் வாறன்...""

அந்த இளைஞன் போய்விட்டான்.

கூந்தல் சரிந்து விழத் தலையில் அடித்தவாறு மண்ணில் புரண்டு ஒப்பாரி வைக்கும் கமலாம்பிகையைத் தேற்றத் திராணியற்றவராய், பரிதாபப் பார்வையுடன் நின்றிருந்தார் கனகலிங்கம்.

""பிள்ளை கமலம்... அழாதை... அழுறதாலை என்ன வரப் போகுது... அழுறதாலை உன்ரை மனசு ஆறுமெண்டால்... நல்லாய் அழு... நான் தடுக்கேலை... இப்ப உன்ரை மேள் எங்கை போவிட்டாள்... உனக்காக... எனக்காக... இந்த ஊருக்காக... எங்கடை

மண்ணுக்காக... எங்கடை இனத்துக்காகவெண்டு போவிட்டாள்... காலங்காலமாக அடங்கிஅடங்கி முடங்கிக்கொண்டிருக்கிற எங்கடை தமிழ்ச்சனங்கள் உரிமையோடை... இது எங்கடை சொந்தமண்... எங்கடை சொந்த நாடு எண்டு வாழவேணும் எண்டு விருப்பத்தோடை போயிருக்கிறாள்... அதுக்காக ஏன் அழவேணும்... இப்பிடி ஒரு பிள்ளையைப் பெத்ததுக்காகச் சந்தோசப் படு...""

""அண்ணை... நான் ஒருக்கா அவளைப் பாக்கவேணும்... என்ரை பிள்ளையைப் பாக்கவேணும்...""

""பாக்கலாம்... அவள் எங்கை போவிடப் போறாள்... இந்த மக்களையும் மண்ணையும் நேசிக்கிறவள் பெத்த தாயை மறப்பாளே... நிச்சயம் ஒருநாளைக்கு உன்னைத் தேடி வருவாள்... கொஞ்ச நாளைக்கு மனதைத் தேற்றிக் கொண்டிரு... நிச்சயமா வருவாள்...""

இப்படி எத்தனை ஆயிரமாயிரம் பிள்ளைகள் அழிவுகளைக் கண்டு ஆக்ரோசத்துடன் இலட்சியத்தை வரித்தவர்களாக அடிமை விலங்கொடிக்கவென...?! இவர்களின் தியாகங்கள், அர்ப்பணிப்புகள் யாவும் என்றோ ஒருநாள் அடிமை விலங்கொடித்து உரிமையை உரத்து மீட்கும்...

ஆதவன் மெல்லமெல்ல மேல் வானத்துக்கு நகர்ந்து கொண்டிருந்தான். வெளிச்சம் சற்று உஷ்ணமாக வந்தது.

கனகலிங்கத்தார் போய்விட்டார்.

தாழ்வார மண் குந்தில் அமர்ந்து கப்பொன்றில் சாய்ந்தவாறு திக்பிரமை பிடித்த நிலையில் இருந்தாள் கமலாம்பிகை.

எதிர்காலம் என்னவென்று புரியாத புதிராகவிருந்தது.

வீடே வெறிச்சோடிப் போய், தனிமை கொடூரமாகத் தாக்கியது.

"இந்த முதிய வயதில் தனிமையை எவ்வாறு சமாளிக்கப் போகிறேன்...?!"

அப்போதுதான் சுதா கொடுத்துவிட்ட கடிதத்தின் நினைவு வந்தது.

விரித்தாள். அந்தக் குண்டு குண்டான எழுத்துக்களைக் கலங்கிய கண்கள் மேய ஆரம்பித்தன.

"ஐயிரு திங்கள் சுமந்து, உதிரத்தைப் பாலாக ஊட்டி, தன்னந்தனியனாய் என்னைக் கண் கலங்கவிடாமல், கண்ணுக்குள் மணியாக வைத்துக் காப்பாற்றிய அம்மா!

பிறந்ததிலிருந்து முதல்முறையாக உங்களுக்குக் கூறாமல், உங்களின் அனுமதி பெறாமல் உங்களைவிட்டுப் பிரிகிறேன்.

சொல்லியிருந்தால் நீங்கள் அனுமதித்திருக்கமாட்டீங்கள். அழுது அடம்பிடித்திருப்பீர்கள். உங்களின் கண்ணீர் எனது உறுதியைக் கலைத்துக் கரைத்திருக்கும்.

எனவேதான் இந்தக் கடிதம் மூலமாக, உங்களின் பிள்ளை நான் உங்களுடன் மனந்திறந்து பேசுகிறேன்.

"பெற்றமனம் பித்து. பிள்ளைமனம் கல்லு" என்பதுபோல, நான் உங்களைவிட்டுப் போகவில்லை. உங்களைச் சுற்றியே வளையவரும் எனது எண்ணங்கள். அன்புப் பிரவாகங்கள், பாச ஊற்றுக்கள், விருப்பு வெறுப்புக்கள் யாவற்றையுமே என் தாய்மண்ணின்மீது வலிந்து திசைதிருப்பியவாறு செல்கிறேன் என்பதை... என் ஒவ்வொரு வளர்ச்சியையுமே அவதானித்துச் சீராட்டிய எனது அம்மாவல்லவா... நீங்கள் நிச்சயமாகப் புரிந்துகொள்ளுவீங்கள்.



இந்த மண் எங்களின் சொந்த மண். எங்களது மூதாதையரின் ஒவ்வொரு பாதச்சுவடுகளையும் தாங்கித் தாங்கியே புடம்போட்ட தங்கமாக... கலைவளமும், பொருள்வளமும், அறிவுவளமும் கொழிக்க அடித்தளமாகி, அதனால் தானும் வளர்ந்து பெருமையுடன் ஜொலித்த மண்

மலைகளோ அல்லது நதிகளோ இல்லாத வறண்ட மண்ணானாலும், தமது உழைப்பின் மூலம் துலா மிதித்துப் பசுமையாக்கிய விடா முயற்சியாளர்கள் எமது மண்ணின் மக்கள்.

இவற்றையெல்லாம் பொறுக்க முடியாத ஏகாதிபத்திய இனவெறியாளர்கள் கல்வித்தடை என்றும், நில அபகரிப்பென்றும், பொருளாதார மருத்துவத் தடையென்றும் பல சுவர்களை எமது மண்ணைச்சுற்றி எழுப்பி, எறிகணைகளாலும் ஷெல் வீச்சுக்களாலும் எம் மக்களையும் எமது மண்ணையும் படிப்படியாக உருக்குலைத்துச் சீரழித்து எம்மை எல்லாம் ஏதிலிகளாக்கி நலிப்பதை... வெறும் சுயநலத்துடன் கூடிய பாச பந்தங்களுக்காக எவ்வளவு காலத்துக்குத்தான் பொறுப்பது?

இவ்வாறான வினாக்களுக்கு விடைகாணும் தீர்க்கமான செயற்பாடுகளில் எவ்வளவோ ஆயிரமாயிரம் இளைஞர்களும் யுவதிகளும் கிளர்ந்தெழுந்து களமாடி சாதனைகளையும் நினைத்துப் பார்க்க முடியாத தியாகக் கொடைகளையும் புரிந்து கொண்டிருக்கும் நிகழ்வுகள் எமது கண்முன்னே விரியும்போது... இவை எல்லாம் யாருடைய சுபீட்சத்துக்காக, எவருடைய இருப்பை உறுதிப்படுத்துவதற்காக, எத்தகைய விலங்குகளை உடைத்தெறிவதற்காக என்ற சிந்தனைகள் சிறிதுமின்றி, நான்... எனது வீடு... என்னுடைய வாழ்வு என்ற சுயநலத்துடன் வாழ என்னால் முடியவில்லை அம்மா.

அதனால் தங்களைவிட்டுச் செல்கிறேன்.

என்றோ ஒருநாள் உங்களைச் சந்திப்பேன். அதற்கிடையில் என்னுயிர் இந்த மண்ணுக்கு வித்தானால் தயவு செய்து அழாதீர்கள். எனது உடலைக் காண நேரிட்டால், "வீர களமாடி என்ரை நெஞ்சில் பால் வார்த்தாயடி" என்று என் நெற்றியில் ஒரு அன்பு முத்தமிட்டாலே... அது போதும் அம்மா...!

நமது வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும்.

அன்பு முத்தங்களுடன்,<br>
உங்கள் அன்பு மகள்,<br>
சுதா."

கடிதம் முடிந்து கண்ணீரில் கரைய ஆரம்பித்தது.

"ஐயோ... என் செல்வமே... என்ன கஸ்டப்படப் போகிறாயோ... என்ரை குஞ்சே... உன்னை நான் சந்திப்பேனா... தெய்வமே... என் கண்மணிக்கு எந்தக் கஸ்டத்தையும் விடாதே..."

தாயின் மனம் பலவாறாகச் சிந்தித்துப் பதறியது.

"அவளைப் பார்ப்பேனா... கனகலிங்கம் அண்ணைகூடச் சொன்னாரே... என்னைத் தேடி வருவாளெண்டு... வருவாளா... அவள் வருவாளா..."

நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் வேறேது?!

அவள் வந்தாள். அந்தத் தாயின் எதிர்பார்ப்பு, கனகலிங்கத்தாரின் ஆறுதல்மொழி எல்லாமே ஆறேழு மாதங்களுக்குள்ளாகவே நிறைவேறியது.

தொடர்ச்சி 87ம் பக்கம்



# மண்ணும் மக்களும்....

ஈழமண் எம்மண் – அங்கே
கோழைகள் இல்லை..!
காற்றைக் குடித்தும் எதிரியின்
கோட்டையை உடைப்பான் – ஈழவன்..!
குண்டைச் சுமந்தவன் சாவான் – தவறின்
நஞ்சைக் குடித்தவன் மாழ்வான் .

தமிழின் உணர்விலே வாழ்வான் – என்றும்
தன்மான வீரனாய் சாவான்
எதிரியைக் கண்டு அஞ்சான் அங்கே..!
எரியும் நெருப்பிலும் வீழ்வான்
பீரங்கி தாங்கிடும் நெஞ்சு – அதை
பின்னி அணைப்பதோ நஞ்சு.

அச்சமேயின்றி எத்திசையிலும்
அன்னைத்தமிழ் (ப்) புகழ் பாடுவான்
அன்னைமொழிக்கது கீழேதான்..!
அடுத்தவன் மொழியையும் பேணுவான்
ஆள்பவன் ஆண்டும் அவன்மண்ணையேயென்பான்
ஆண்டிட வேண்டும் நான் என்மண்ணையேயென்பான்.

தாய்பாலில் சுவையில்லை என்னும்
தரம்கெட்ட மனிதரைக்கண்டாலும்..! உன்னின
நாய்ப்பாலில் சுவையுண்டு ..! நீயும்
நக்கிப்பார் என்றவன் சொல்வான் – நாளை
உன்பிள்ளை உன்னையே கேட்பான்..! அப்போ..!
உனக்கது சுவைத்திடும் என்பான்.

வாழுமிடமெல்லாம் பள்ளி செய்வான் – அவன்
பாரினில் தமிழ் உயர்ந்திட பணிபுரிவான்
பாரதி போலவன் வீர புரட்சி செய்வான் – தமிழ்
பற்றில்லா தமிழரை உமிழ்ந்திடுவான்.
என்னாடுவாழ்ந்தாலும் எம் எதிர்காலசந்ததி
தன்தாய்நாடு மறப்பது இழிவென்றே துடிப்பவன்.

எதிரியை தனை எரித்திடும் தீயையே..!
என்றும்தன் இதயத்தில் வளர்ப்பான் – தன்
இனத்தை இழிவாக எண்ணிடும் கயவரின்
இரத்தத்தில் குளிக்கும் எண்ணம் சுமப்பான்
உலகத்தமிழற்கோர் தனிக்கொடி
உருவாக்கவே உயிர்கொடுப்பவன்.

தீயில் எரிந்திடும் போதிலும் – நெஞ்சில்
தன்னின சுதந்திர தீயையே சுமப்பான்
அங்கம் ஊனம் ஆயிடும் போதிலும்
எதிரிகை சங்கமமாகிட மறுப்பான்
எம்மண்ணின் விடிவுக்காய் உயிர்விடும்
எம்மைந்தர் இறந்தவரில்லையே..!
உலகத்தமிழனின் உயர்வுக்காய்...தன்
உடலை உரமாய் (ந்) கொடுத்திடும் –
தன்மான வித்துக்கள்......
தணலிலும் முளைவிடும் முத்துக்கள்.

வேலணையூர் பொன்னண்ணா
டென்மார்க்

# பயந்தவனும் வழிகாட்டும் குருடர்களும்.

**-எழிலன்.**



*மனிதமனம் தெளிவில்லாதபோது அது அச்சத்துக்காட்பட்டு விடுகின்ற நிலைமை அடிக்கடி ஏற்பட்டுவிடுவதைத் தவிர்க்க இயலாது போகலாம்.*

*மனித பயமானது தனக்குப் பாதுகாப்பு தேடும் முயற்சியிலேயே அவனைத் தெய்வத்தைத் தேட வைக்கின்றது.*

*அந்த முயற்சியால் அது தெய்வத்தைத் திருப்தி செய்து காரியத்தை —அதாவது நன்மையை— பாதுகாப்பை — சாதகப்படுத்திக்கொள்ள அவனைத் தூண்டுகின்றது.*

*அவனது சாதாரண வாழ்வியல் வழி அவனைக் கண்ணுள்ள குருடனாக்கி வைத்திருப்பதால் பொருள்கொடுத்து காரியம் சாதித்துக் கொள்ளும் அவனது வழிமுறையை அவனது தெய்வ நம்பிக்கை விவகாரத்திலும் அவன் புகுத்தி விடுகின்றான்.*

*அதாவது தெய்வம் என்ற சக்தியைப் புகழ்ந்து விட்டால் அது மயங்கி வழிக்குவந்துவிடும். பொருள் கொடுத்து வணங்கினால் அது சம்மதித்துவிடும். இவ்வாறு மனித பலவீனம் தப்புக்கணக்குப் போட்டுவிடுகின்றது.*

இந்த இடத்தில் அதன் முக்கிய தவறானது அதன் சுயபயம் என்ற பலவீனம் மட்டுமேதான்.

மனிதசக்திக்கு மீறிய ஒன்று நம்மையெல்லாம் தனது வழிமுறைக்குள்ளே சுழலவைத்துக் கொண்டிருப்பதை நம்புவது மூடத்தனமல்ல. அதுவே உண்மை. ஆனால் அந்த சக்தியை தான் படைத்த பணத்தாலும் தான் வகுக்கும் வழிமுறைகளாலும் தன்னிஷ்டப்படி ஆட்டிவைத்துவிடலாம் என்று கருதுவதைத்தான் பலவீனத்தின் பிரதிபலிப்பு என்கின்றேன்.

நமது மனம் பயந்தவுடன் நாம் என்ன செய்கின்றோம்?



பாதுகாப்பான வார்த்தைகளைத்தான் முதன்முதலில் தேடுகின்றோம்.

இந்த வார்த்தைகள் எவரிடமிருந்து வருகின்றன என்பதைப் பொறுத்தே நமது நடவடிக்கைகளும் பல சமயங்களில் அமைந்துவிடுகின்றன.

எனது இரவல் இதயங்கள் நூலில் எனது சொந்த அனுபவமொன்றை நான் குறிப்பிட்டிருந்தேன். உண்மையை நம்பினால் உண்மையில் நடக்கும் என்று அதில் குறிப்பிட்டிருந்தேன்.

எனது வாழ்க்கையை நானுணர்ந்த விதத்திலே நான் உண்மையாய் அனுபவித்ததையே அதில் எழுதியிருக்கிறேன்.

அதாவது அது எனது நேரடி அனுபவமாயிருந்தது.

அதை எதுவித அனுபவமுமில்லாமல் விமர்சிக்கமுற்படும் ஒருவர் கருத்துக்கு அது பொய்யாகவேகூடப் படலாம். நான் குறைசொல்ல மாட்டேன்.

ஆனால் நமது பயத்தை பணங்கொடுத்தும், பாரிய சடங்குகள் செய்தும் நீக்கிக்கொள்ள முடியும் என்றுமட்டும் நீங்கள் கருதினீர்களென்றால் மூடத் தனத்தைக் கையிலெடுத்துக்கொண்டு அலைகின்றீர்கள் என்று உங்களுக்கு நீங்களே அத்தாட்சிப்பத்திரம் வழங்கிக்கொள்ளுங்கள்.

ஆறுதல் தேடியலையும் உயிர்களெல்லாம் எதையாவது செய்து ஆறுதலைத் தேடிக்கொள்ள முடியாதா என்று ஏங்கும்போது பல வகைகளில் அவர்கள் பங்கெடுக்கும் சடங்குகள் அவர்களுக்கு ஒருவிதத்தில் ஆறுதலை — மன நிம்மதியை மனதத்துவரீதியாக வழங்குவது உண்மைதான்.

உதாரணமாக கல்வியறிவே இல்லாத மக்கள் கடவுளுக்குத் தமது உணவை ஒறுத்து படைத்துவிடுவதால் பெரிய நிம்மதியைப் பெற்றுவிடுகின்றதாக உணர்கின்றார்கள்.

ஆனால் அவர்களின் நிம்மதியைத் தேடும் வழியில் மறைந்திருக்கின்ற உண்மையை உணராமை என்ற பலகீனத்தால் யார் பயன்பெறுகின்றார்கள்?

அவர்களல்ல. அவர்களுக்கு அந்த வழியை உறுதியான வழிபோலக் காட்டி நம்பவைத்துக் கொண்டிருக்கும் வழிகாட்டிகளான மதவாதிகள்தாம். ஆத்திரப்படாமல் அவதானியுங்கள்.

மக்களின் பயத்தில் பணம்பண்ண மிக இலகுவான வழி மதநம்பிக்கையில் ஊறவைத்து மூழ்கவைப்பதுதான் என்ற உண்மை கசப்பானாலும் உண்மை அதுதானே!

*1983* இறுதியில் எனக்குத்தெரிந்த ஓர் அன்பர் இலங்கையைவிட்டு மூட்டை முடிச்சுக்களோடே தமிழகம் திரும்ப ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார். பலவருடங்கள் கொழும்பிலேயே வாழ்ந்துவிட்டவர் திடீரென இந்தியா சென்று என்ன செய்வாரோ... என்னவாவாரோ என்று எனக்கு மிகவும் கவலையாய் இருந்தது.

"ஆமா! நீங்க பெரிய தொகை பணமுமில்லாம அதிகமான தொடர்புமில்லாம

எப்படி சமாளிக்கப் போறீங்க?"
— அக்கறையுடன் கேட்ட எனக்கு அந்த அன்பரின் பதில் அதிர்ச்சியைத் தந்தது.
"நீங்க ஒண்ணு! முதல்ல கொஞ்சம் முயற்சிப்பேன். இல்லாட்டி எனக்குத் தேவை நாலு புரோக்கர் மட்டும்தான்...!"
"புரொக்கரா...எதுக்கு?"
"ஓலகம் வெளங்காத — அதுவும் இந்தியா தெரியாத ஆளாயிருக்கீங்களே!"
"அப்படீன்னா...?"
"அங்கே போனா டவுனை விட்டுட்டு ஒதுக்குப்புறமா போயிட்டு எங்கேயாவது ஒருமூலையில் ஒரு அஞ்சடி ஓயரத்திலே பெரிய காளி செலையை செய்தெடுத்து நிற்பாட்டிட்டு குடிசை போட்டுக்கிட்டு நாலுபேருக்குப் பணங் கொடுத்து வெளியூரிலே அங்கே புதுமை நடக்குதுன்னு பிரச்சாரம் பண்ணுவேன். இரண்டுமாதம் போதும். ஆளுக்கு நூறைக்கொடுத்து தங்களுக்குக் கெடைக்காத ஏதேதோ கெடைச்சதா சொல்ல வைப்பேன். பிறகென்ன? முட்டி நிறையும். இன்கம்டாக்ஸ் பிரச்சினகூட இல்லாம ஜாலியா இருப்பேன்.!"
எனக்கு நெஞ்செரிந்தது.
ஏழைமக்களின் பலவீனத்தை மூலதனமாக வைத்து எதிர்காலத்தை அமைக்கத் துணிந்த அந்த மனிதர் கழிவுக்குள்ளிருந்து வெளிவந்தோடும் பெருச்சாளியைப்போல எனக்கு அருவருப்பைத் தந்தார்.
பிச்சைக்காரப்பிழைப்பு என்று திட்டவும் மனம் வரவில்லை. ஏனெனில் இத்தகைய பிழைப்பைவிட அதுகூட சற்று மேல்போலவே எனக்குப் பட்டது.
அந்தமனிதர் போய்விட்டார். எப்படி பிழைப்பு நடக்கிறதோ தெரியாது.
ஆனாலும் என்மனம் இன்னும் கொதிக்கிறது.

சிந்திக்கவிடாத மதக்கொள்கைகளும் மூடக்கொள்கைகளும் ஆட்கொண்டு விட்ட சூழ்நிலையில், பக்தியின் நோக்கமும் அவசியமும் உண்மையிலேயே சகதிக்குள் புதைக்கப்படுகின்றனவே! இதை அனுமதிப்பதில் படித்த சமூகம் என்ன புண்ணியத்தை எதிர்பார்க்கின்றது என்று விளங்கவில்லையே!
எங்கும் நிறைந்த இறைவன் என்ற கருத்துக்குள் இறைவனே இயற்கையை இயக்கிவரும் இயந்திரம் என்ற பகுத்தறிவு வெளிப்படுகின்றது. அதைப் பகுத்துப் பிரித்துப் பங்கப்படுத்தி மதங்கள் பிரித்தாலும் அதனால் அந்த இறைவனின் கொள்கையை வரையறுக்க முடியுமா என்ன?

ஜெர்மனியில் சில மதப் பிரிவுகள் வீடு தேடிவந்து கழுத்தை அறுப்பது வழக்கம்.
நானும் அடிக்கடி மாட்டிக்கொள்வதுண்டு.
ஒருசமயம் ஒரு தமிழ்ப்பெருமகனும் அவர்களுடன் வந்தார். தான் பைபிளை



ஐயந்திரிபறக் கற்றவர் என்றும் அதைக்கற்றதனால் இந்துமதத்தின் பிழைகளைத் தான் உணாந்துகொண்டதாகவும் பெரிய லெக்சர் வைத்தார். ஆனால் தாம் சொன்ன ஐயந்திரிபற என்ற என்ற சொல்லின் ஆழத்தை அவர் உணர்ந்திருந்ததாகத் தெரியவில்லை.ஆகவே நான் கேட்டேன் —
"நான் கிறிஸ்தவன்தான். என்றாலும் பைபிளை முழுமையாக ஒருதடவை வாசித்ததில்லை. நீங்கள் எத்தனைதடவை வாசித்திருப்பீர்கள்?"
"அளவே இல்லை. அதை வாசித்து வாசித்துத்தான் உண்மையை உணர்ந்தேன்."
"இங்கே வந்தபின்புதான் இந்த இயக்கத்தில் சேர்ந்தீர்களா?"
"ஆமாம். இங்கே வந்தபின் தேவன் என்னை அழைத்தார்.!"
"அங்கே அதாவது இலங்கையில் நீங்கள் இந்து... இங்கே வந்தபின்தான்...!"
"ஆமாம்.அங்கே நான் இந்துவாகத்தான் இருந்தேன். இங்கே வந்து தேவனை அறிந்தேன்!"
"அதாவது ஊரில் இந்துமதத்தை ஐயந்திரிபறக் கற்று விளங்கித் தேறிய உங்களுக்கு இங்கே வந்தபிறகுதான் அதுவும் இவர்கள் மூலம் பைபிளை ஐயந்திரிபறக் கற்றபின்புதான்...!"
வந்த போதகரின் முகம் கொதி எண்ணெய்க்குள் வீழ்ந்த அப்பளம்போல மடமடவென்று உருமாறத்தொடங்கியது. எனது பின்புறத்திலிருந்த கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம் தொகுப்பை அவருக்குக் காட்டினேன்.
"அதை நான் மிக விரும்பிப் படிப்பதுண்டு. காரணம் இதில் அவர் தம் மதத்தின் உண்மைகளைத் தமது சொந்த அனுபவங்களோடு பகிர்ந்து அளிக்கிறார். அதாவது ஐயந்திரிபற அம்மதத்தைக் கற்காமலே தெய்வத்தின் தத்துவத்தை அம்மதம் உணர்த்தமுனையும் வழிகளை சொல்லுவதில் அவரது நேர்மையை உணர்கிறேன்.இந்த நாட்டுக்குள் வந்து புகுந்த நம்மில் பெரும்பாலார் தம் நாட்டில் பெரிய கொம்பர்களாக இருந்தவர்களென்றும் பெரியபெரிய பட்டம் பதவிகளை வகித்தவர்களென்றும்தான் அளக்கின்றார்கள். ஆனால் தங்கள் சொந்த சிந்தனையை விட்டுவிட்டு ஐரோப்பிய நாட்டுக் கிளிப்பிள்ளைகளாக மாறி ஏன் நிற்கிறார்கள்?"
என் குரலில் உறுதியை நான் இருத்தினேன்.
வந்த ஐரோப்பிய மதப்பிரதிநிதி எங்கள் வாதத்தைப்பற்றி விளக்கம் கேட்டார்.
"தமது சொந்தமதமாகத் தாம் கடைப்பிடித்துவந்த மதத்தையே விளங்கிக் கொள்ளாத மனிதர்கள் இங்கேவந்து உங்களைப் போன்றவர்களைத் தொற்றிக் கொண்டு தங்கள் நாட்டையும் மதங்களையும் கலாச்சாரத்தையும் தங்களவரிடமே மட்டந்தட்டித் தமது நலனுக்காக அலையும் இழிவு நிலைமையை எங்கள் நிலையிலிருந்து சிந்தித்துப் பாருங்கள். இவர்தம் மதத்தையே அறியாதவர் இவருக்கு என்ன தகுதியிருக்கும் அம்மதத்தை அவமதித்து இன்னொன்றை உயர்த்திப்பிடிக்க?" என்று அவருக்கு

விளக்கினேன்.

இவர் கொதித்தார். நான் பயப்படவில்லை.

"ஒரு நண்பராக எப்போதும் வந்து போங்கள். ஆனால் இந்தமாதிரி மதமாற்ற வேலைக்கு வரவேண்டாம்.!" என்று எச்சரித்து விரட்டிவிட்டேன்.

அவரோடே எனக்கு வாக்குவாதம் ஏற்பட்டபோதும் அவரை வெறுக்கவில்லை நான்.

அனுதாபப்பட்டேன். காரணம் இப்படியான ஒரு சூழ்நிலையில் தம்மை வைத்துக் கொள்வதன்மூலம் ஐரோப்பியர்களுடன் அதிகத் தொடர்பேற்படுத்திக் கொள்ளல் அதன்மூலம் தமது எதிர்காலநன்மைகளுக்கு அத்திவாரமமைத்துக் கொள்ளல் என்னும் முழுச் சுயநலமே கொண்ட புத்தம் புதுக் காளான் சாமிமார்கள் இங்கெல்லாம் பலுகி நிற்கின்றார்கள்.இவர்கள் கேட்டால் எதுவும் நடக்கும் கிடைக்கும் என்று நம்பவைக்கப் பார்க்கின்றார்கள்.

விசுவாசத்தின் அடிப்படையையே வியாபாரமாக்கி நாடகம் காட்டுகின்றார்கள். ஆனால் இவர்களிடம் சிக்கிக்கொள்ளும் பல அப்பாவிகளுக்கிடையில் சில படுபாவிகள் என்ன செய்கிறார்கள் தெரியுமா?

அவர்களை வைத்துத் தமது கபடங்களுக்கும் பாவவாழ்க்கைக்கும் வழிதவறிய செய்கைகளுக்கும் கவசம் அமைத்து வாழ்ந்து வருகின்றார்கள். பக்தர்களோடு பக்தர்களாக அவர்கள் நின்றுகொண்டு ஆடும் நாடகமானது இந்தச் சாமிகளுக்குத் தெரிந்தாலும் ஆள்சேர்ப்பின் அவசியம்காரணமாக அமைதியாக அனுமதித்துக்கொண்டு இருக்கின்றார்கள்.

உலகமெல்லாம் இத்தகைய போலி பக்தர்கள் நிறைந்திருந்தாலும் இடையில் இருக்கும் நற்சிந்தனையாளர்களின் பங்களிப்பு சரியாக இருந்தால் நிச்சயம் ஒரு மாற்றம் ஏற்பட்டே தீரும்.

அதை அவர்கள் தைரியமாகப் பொறுப்பேற்கவேண்டும்.

மதமல்ல மாறவேண்டும். — மனம்மாறவேண்டும்.

மோட்சம் தன் அயலவனுக்குக் கிடைக்குமோ இல்லையோ, தனக்குக் கிடைத்தால் போதும் என்றமாதிரி பக்திமான்களின் மனங்களுக்குள் சுயநலமூட்டுவதை புதுமதஞானிகள் இலக்கணமாக்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

அவர்களே சொர்க்கத்தின் ஏஜெண்டுகள்போல உத்தரவாதமளித்து நிற்பதைக் கவனிக்கையில் நம்மை நாமே உணர்ந்து தெளிந்து இருக்காவிட்டால் நமக்கு நாமே அனாதைகள் ஆகிவிடும் ஆபத்தையே இப்புண்ணியவான்கள் உண்டாக்கிவிடுவார்கள் என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது.

ஆகவே தைரியத்துடன் உங்களை நீங்களே தட்டி எழுப்பிக் கொண்டிருங்கள். மனிதமனம் பலவீனப்படக்காரணம் வெறுமனே கதைகளை நம்பும் பலவீனம்தான். கடவுளைக் கடமையில் காணுங்கள்.



கற்பனைக்கதைகளை நம்பாதவனைக் கடவுள் தண்டிப்பாரென்பது உண்மையாயின் அதை மறுத்து கடவுளுடனேயேகூட வாதிட்டு நிற்கவேண்டும்.

போதிப்பவனின் சுயபடம் தெரியாமல் பின்னே போகாதீர்கள்.

பாதைமாறி, சுயமையிழந்து அர்த்தமற்றுப் போய்விடுவீர்கள். தைரியமாக எதனையும் சிந்தியுங்கள்.

எங்கே ஏழ்மையும் எளிமையும் ஆடம்பரமின்மையும் அடக்கமும் பொறுமையின்மையும் உதவிடும் உயரெண்ணமும் மற்றவர் உயர்வினுக்கு ஊக்கிடும் உயர்குணமும் கடைப்பிடிக்கப்படுகின்றதோ அங்கே இறைவன் இருப்பதாக நம்பியிருங்கள்.

அப்போதுதான் பொய்யான புகழ்தேடி பிழையான வழிசெல்லும் மதங்கொண்ட நிலைமாற உலகுய்ய வழிபிறக்கும்.

வழிகாட்டுபவர்கள் குருடர்களாயின் வழிசெல்பவர்கள்? மூடர்களாகத்தானே இருக்கமுடியும்.

ஆகவே வழிகாட்டிகளின் மனக்கண்ணாடியை அவதானித்துவிட்டே உங்கள் பயணத்தைத் தீர்மானியுங்கள். ஏனெனில் ஆண்டவன் பெயரால் அட்டகாசங்களே இன்று எங்கணும் அதிகப்படியாக நடந்தேறி வருகின்றன.

□□□

காந்திக்கும் புரியாதது!

மனிதர்கள் தங்களுடைய சகோதர மனிதர்களை அவமானப்படுத்துவதன் மூலம் தாங்கள் கௌரவிக்கப்படுவதாக எப்படி நினைக்கிறார்கள் என்பது எனக்கு என்றுமே புரியாத மர்மமாக இருந்து வருகிறது

— மகாத்மா காந்தி.



இந்துமகேஷ்.

# ஒரே ஒரு கதை



எப்படி ஆரம்பிப்பது?
"ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு ராஜா!"
"வேண்டாம்....சரித்திரக்கதைகள் இப்போது சலிப்பைத்தரும்!"
"ஒரே ஒரு காட்டிலே ஒரே ஒரு சிங்கம்!"
"சிங்கமா?... அதுவும் ராஜா....மிருகங்களின் ராஜா!"
"விடுவோம். வேறு கதை?"
"ஒரேயொரு ஊரிலே ஒரேயொரு மந்திரவாதி!"
"மாயா ஜாலம்?...ம்...ம்....!"
"மந்திரவாதி அங்குள்ள அரசகுமாரிமீது மையல்கொண்டான்...அவளைக் கவர்ந்துவருவதற்காக ஒரு முனிவனைப்போல் வேடமிட்டு..."
"பிறகு? பிறகு?"
"பிறகு என்ன...அங்கு வேட்டைக்கு வந்த ஒரு அழகிய இராஜகுமாரன் வழியில் எதிர்ப்பட்டு அவளைக் காப்பாற்றிக்கொண்டு போக...சுபம்!"

"போரடிக்குது...!"
"என்ன?"
"கதை! உந்தக் கதை!"
"முந்தி எழுதினவங்கள் ஒருத்தனும் ஒண்டைக்கூட மிச்சம் விட்டு வைக்கேல்லை! எழுதிப்போட்டாங்கள்...எல்லாத்தையும் எழுதிப்போட்டாங்கள்!"
"எல்லாத்தையும்...?"
"ம்...எல்லாத்தையும்..."
"அப்ப விடு எழுதவேண்டாம்...!"
"சரி!"

"எனக்கு ஒரு சந்தேகம்!"
"என்ன?"
"நாங்க இப்ப வாழ்கிறம்"
"ஓம்வாழ்கிறம்."
"எங்களுக்கு முந்தியும் சனங்கள் வாழ்ந்துது!"





"ஓம்!"
"இப்ப அவையள் இல்லை"
"ஓம்...இல்லை!"
"ஆனால் நாங்கள் இருக்கிறம்!"
"இருக்கிறம்!"
"முந்தி இருந்தவையைப் போலத்தான் பிறந்து வளர்ந்து படிச்சு உழைச்சு கலியாணம் முடிச்சு பிள்ளையளைப் பெத்து...!"
"இது இயற்கைதானே?!"
"அப்ப நாங்கள் இருந்தமோ இல்லையோ...உலகம் இருக்கும் உயிர்கள் இருக்கும் வாழ்க்கை இருக்கும்..!"
"அதுக்கென்ன?"
"ஆரும் ஒரு முழுமையான வாழ்க்கை வாழமுடியாது...முழுக் கடமையை முடிச்சிட்டு நிம்மதியாய்க் கண்ணை மூடவும் முடியாது! இருக்கும்... எச்சங்கள் இருக்கும்...எப்பவோ ஆரும் அறியாத ஒரு மனிசன்ரை எச்சங்களாய் இண்டைக்கு எத்தனைகோடி மனிசர்...இனியும் பல கோடியாய் பல்கிப்பெருகி...!"
"இப்ப என்ன சொல்லவாறை?"

"எழுது...எத்தினையோ கதைகள்... ஒவ்வொருத்தரைச் சுற்றியும் எத்தனையோ கதைகள்.. எல்லாத்தையும் எல்லாரும் எழுதி முடிச்சிட்டாங்கள் என்கிறதிலை உண்மையில்லை...எழுதலாம் எழுது!"

பேனையைக் கையில் எடுத்தாயிற்று...
என்னை எழுதப்போகிறாயா? என்று எத்தனை முகங்கள்..
உண்மைக்கதை எழுதக்கூடாது...ஆனால் படிக்கிறபோது உண்மைமாதிரி இருக்கவேணும்...
இலங்கைவானொலியில் முந்தியொருக்கால் கேட்ட பகிடி நினைவுக்கு வருகிறது...
அப்புக்குட்டியும் உபாலியும்...
வீட்டிலை அப்புக்குட்டியின் மனைவி இல்லாத நேரம்...
உபாலியும் அப்புக்குட்டியும் கொஞ்சநேரம் தண்ணி அடிச்சு கோழிக்கறி சாப்பிடபினான் போடுகிற சமயம்...
அப்புக்குட்டியின் மகள் பள்ளிக்கூடத்திலிருந்து வாத்தியார் கேட்ட கேள்வியுடன் வீட்டுக் வருகிறாள்.
கேள்வி—
'கோழிக்கு ஏன் கோழியெண்டு பேர்வந்துது?'
அப்புக்குட்டி முளிசுகிறார்.
"உபாலி சொல்லனடா?"
உபாலி மாட்டிக்கொள்கிறார்...
"அதிங் வந்திங்... இந்தக் கோளிக்கு ஏன் கோளிண்டு பேர்வந்துது...அதானே?

அதிங் இந்த மொத மனிசன் கோளியைப் பாக்கேக்குள்ளை அதிங் கோளிமாதிரி இருந்துதிங்...அதான் கோளிஎண்டு பேர் வந்து...!"

கோழிமாதிரி இருந்தால் அது கோழி...
கதைமாதிரி இருந்தால் அது கதை...

யாரையும்பற்றி எழுதக்கூடாது...
சரியில்லை...அது மனிதாபிமானமும் இல்லை...ஆனால் எழுதித்தொலைத்தபிறகு இது யாரையோ சொன்னதுபோல் இருக்கிறதே என்றால்...பாவம் கதை...!
ஆகவே யாவும் கற்பனை என்று அடிக்குறிப்புப் போட்டுவிட்டால் பாதுகாப்பு...
இந்த அடிக்குறிப்புக்களுடன்தான் பலர் உண்மைக்கதைகளை எழுதிக் கொண்டிருக்கிறார்கள்...

'என்னை எழுது' என்று சொன்ன எல்லாமுகங்களையும் பின்னால் தள்ளிவிட்டு — ஒரு முகம்...
ஒருமுகம் என்றுதானே சொன்னேன்..
அது பெண்ணாகத்தான் இருக்கவேண்டும் என்று எப்படி ஊகித்துக் கொண்டீர்கள்?
அதிலும் கவர்ச்சியான முகம் என்று எப்படிக் கண்டுகொண்டீர்கள்?
பெண் என்றாலே கவர்ச்சி என்று மற்றொரு பொருள் உண்டு...
ஆணென்பதால் இப்படிச் சொல்கிறேனா?
இல்லை. பெண்ணுக்கும் பெண்தான் கவர்ச்சி!
நீங்கள் எங்கே வேண்டுமானாலும் போய்ப்பாருங்கள்...
பெண்ணை ஆண்மட்டும் கவனிப்பதில்லை...
பெண்ணைப் பெண்ணும்தான் கவனிக்கிறாள்...ஒரு பெண்ணின் நடை என்ன உடைஎன்ன பாவனைஎன்ன என்பதையெல்லாம் ஒரு ஆணைவிட இன்னொரு பெண்ணே அதிகமாய் அவதானிக்கிறாள்...
ஆக பெண்களைக் கவர்வதற்கும் பெண்ணால்தான் முடிகிறது...
ஆகவே பெண்ணுக்கு மறுபெயர் கவர்ச்சி...

உங்களுக்கு ஒருவேளை இந்தக் கதையின் நாயகி கவர்ச்சியில்லாதவளாக அழகில்லாதவளாகத் தோற்றலாம்... அதற்காக எனக்கும் அப்படித் தோற்ற வேண்டுமா என்ன?
என்ன கறுப்பி என்பீர்கள்...
நிறங்களில் கறுப்பும் ஒரு நிறம்தான்....
உங்கள் தலைமுடி,கண்விழி எல்லாம்கறுப்புத்தான்.பிடுங்கியா எறிந்துவிட்டீர்கள்?
உங்கள் கண்ணுக்கு முன்னாலேயே அப்பிள் நிறத்து ஐரோப்பியப்பெட்டை கானாக்காரனின் கையைப் பிடித்துக்கொண்டு போகும்போது அந்தக் கறுப்பன்மேல் உங்களுக்கு ஒரு பொறாமை தோன்றவில்லை?



கறுப்பு என்னய்யா கறுப்பு— — —
என்ன கொஞ்சம் கட்டை என்பீர்கள்...
ஜப்பான்காரன் கட்டைதான். அவன் சாதித்ததில் பாதியாவது உங்களால் சாதிக்க முடிந்ததா?
பிறகென்ன கட்டையும் குட்டையும்...
இப்பிடி ஒண்டொண்டுக்கும் குறைசொல்லிக் கொண்டிருந்தால்....
விடுங்கோ...!
இவள் அவ்வளவு வடிவில்லை.
ஆனால் இவளோடை பழகத் தொடங்கினவைக்கு சாகும்வரைக்கும் இவளோடையே கூட இருக்கவேணும்போலத் தோன்றும்.
அப்பிடி ஒரு எளிமை. இளகின சுபாவம்.
வெளிநாட்டிலை ஒரு நல்ல மாப்பிள்ளையாப் பார்த்துப் பேசி இவளைப் பெத்ததுகள் இங்கை அனுப்பிவைக்க இங்கை அவன் கொஞ்சக்காலம் இவளோடை ஒண்டாய்க் குடும்பம் நடத்திப்போட்டு வேறை ஒருத்தியைக் கூட்டிக்கொண்டு கனடாவுக்கு மாறிட்டான்.அங்கைபோய்த் தம்பி நிறையப் பிரச்சினையளிலை சிக்குப்பட்டுக் கடன்காரனாகி திரும்பியும் இவளிட்டையே வந்திட்டேர்...
என்ன செய்யிறது...எவ்வளவுதான் துரோகம் செய்தாலும் தமிழ்ப்பெட்டை தன்ரை பண்பை மறப்பாளே?புருசனை மன்னிச்சு ஏற்றுக்கொண்டாள்...ஆனால் கனகாலம் ஒண்டாய் இருக்க முடியேல்லை... பொலிஸ்வந்து ஆளைக் கொண்டுபோய் உள்ளுக்கை வைச்சிருக்குது...
'ஏனாம்?'
இவனிலை ஒரு பிழையுமில்லை... ஒருநாள் இவன் தனிய றோட்டிலை நிக்கேக்குள்ளை ஆரோ ஒருத்தன் ஒருசூட்கேசைக் கொண்டுவந்து இவன்ரை கையிலை குடுத்திருக்கிறான்...ஆர் எவர் எண்டு விசாரியாமல் இவனும் அதை வாங்கிட்டான்.... பொலிஸ்வந்து ஆளைப் பிடிச்சுப்பார்த்தால் 'மருந்து'. இப்ப மாப்பிள்ளை உள்ளுக்கை.
அப்ப பெட்டை?
என்ரை புருஷன் நல்லவர் ஒரு பாவமும் அறியாதவர் எப்பிடியும் அவரை நான் வெளியிலை கொண்டு வந்திருவன் இல்லாட்டில் இந்த நகரமே எரிஞ்சு சாம்பலாப் போகும்எண்டு ஆவேசப்பட்டுக்கொண்டு திரியிறாள்..

"அண்ணை...!"
"ஓம்..."
"நீங்கள் எவ்விடம்...?"
"நானோ ஏன்...?"
"சும்மா கேட்டன்... எவ்விடம்?"
"புங்குடுதீவு!"
"புங்குடுதீவிலை எந்தப்பக்கம்?"

"கிழக்கூர்!"
"கிழக்கூரிலை?"
"கண்ணகியம்மன் கோயிலுக்கு முன்னாலை...
"அதுதானை பார்த்தன்....இதுமாதிரிக் கதையெல்லாம் நீங்கள்தான் எழுதுவியள்... அண்ணை..சும்மா சும்மா கண்ணகி கதையை மாத்திமாத்தி எழுதாமல் புதுசாய் ஏதும் எழுதுங்கோ!"
"கண்ணகி கதையா?"
"பின்னை..? உங்கடை கதாநாயகி கண்ணகி...புருஷன் கோவலன்...கனடாவுக்குக் கூட்டிக்கொண்டு போனபெட்டை மாதவி...!"
"அப்ப நான் கொப்பியடிக்கிறனெண்டு சொல்லுறீர்?"
"இல்லை..மாத்தி எழுதுறியள் எண்டு சொல்லுறன்..."
"சரி விடும்...இனி நான் ஒண்டும் எழுதேல்லை..."
"இதுநல்லது...கையைக்காலைச் சும்மா வைச்சுக்கொண்டு வாயை மூடிக்கொண்டிருக்கிறதுதான் புத்திசாலியளுக்கு அழகு..."

நான் பேனாவை மூடி ஒருபுறம் வைத்தேன்....
'என்னை எழுது... என்னை எழுது' என்று அனுபவங்கள் அரிக்கின்றன.
ஏன் சோலி?
சும்மாயிருத்தலே சுகமாம்! — சொல்கிறார்கள்
ஓம்!

(யாவும் சத்தியமாய்க் கற்பனை)

(நன்றி— ஆதவகிருஷ்ணா கலைமன்ற 2வது ஆண்டுவிழாமலர் 1995)

நன்றாகப் பழுத்துத் தொங்கும் பழங்களைக் கொண்ட மரம்
நேராக நிற்காது. அதுபோல், ஆன்மீகத்தால் பழுத்த யோகிகளும்
ஞானிகளும் பணிவன்புடன் காணப்படுவார்கள்.
ஞானமடையாத அரைகுறையாகப் படித்தவர்கள் கர்வத்துடன்
தலை நிமிர்ந்து நிற்பார்கள், நடப்பார்கள்.

-புத்தபகவான்.



# கம்பியூட்டர் செயற்பாடு: சில அடிப்படைத்தகவல்கள்.

தேசா தெய்வேந்திரன். B.Eng.

ஒரு சமுதாயத்தின் பொருளாதார முன்னேற்றத்துக்கு, வளமான அடிப்படைக் காரணிகளாக நிலம், வேலை, முதலீடு ஆகியவை அமைகின்றன. இவற்றுடன் இன்றைய நவீன உலகில் தகவல் சாதனமும் சேர்ந்துள்ளது. தகவல்களைத் தரும் சாதனங்களின் பட்டியலில் முதலிடத்தைப் பெறுவது கம்பியூட்டர்களே! ஆதலால் கம்பியூட்டரைப் பற்றியும், அதன் செயற்பாடுகள் பற்றியும் அதனைப் பாவிக்கும் முறை பற்றியும் நாம் அறிந்திருப்பது இன்றியமையாததாகிவிட்டது.

இன்றைய நாட்களில் வர்த்தக நிலையம் தொடக்கம் ஆராய்ச்சித்துறை வரை, அலுவலகங்கள், பாடசாலைகள், வீடுகள், மருத்துவ மனைகள் என்ற பட்டியலில் எங்கு சென்றாலும் கம்பியூட்டர் ஆக்கிரமிப்புச் செய்துள்ளது.

வளர்ந்துவரும் சமுதாயத்தை இந்தக் கம்பியூட்டர்கள் இவ்வளவு தூரத்துக்கு ஆக்கிரமிப்பதற்குரிய காரணங்களாகக் கம்பியூட்டரின் அதிவேகம், அதன் மீதான நம்பிக்கை, கூடிய சேகரிப்புத் தன்மை, உற்பத்திப் பெருக்கம், சிக்கனம் ஆகியவற்றைக் கூறலாம். இதனால் உலகின் முன்னோடியாக விளங்கும் கம்பியூட்டரை முதன்முதலாகக் கண்டுபிடித்த, இங்கிலாந்து நாட்டவரான சாள்ஸ் பாபகே (1791) மதிப்புடன் போற்றப்படுகின்றார்.

**கம்பியூட்டர் தொகுதி:** கம்பியூட்டர் தொகுதியானது Hardware, Software, People என்னும் மூன்று பிரதான அம்சங்களைக் கொண்டது. Hardware எனப்படுவது, எம்மால் தொட்டு உணரக்கூடிய Hard disk, Monitor போன்றவற்றையும், Software என்பது எம்மால் தொட்டு உணர முடியாத Programs ஐயும் (வீடியோ கஸட் போன்றது. அதனைப் போட்டால் மட்டுமே அதிலுள்ளதைப் பார்க்கவும் கேட்கவும் முடியும்) குறிக்கும். கம்பியூட்டர் தொகுதியைப் பொறுத்தமட்டில் மூன்றாவது பகுதியாகிய மனிதன் மிக முக்கியமானவன்.

கம்பியூட்டரைப் பொறுத்தளவில் Central Processing Unit (CPU), memory, hard disk போன்றவை முக்கிய பாகங்களாகக் கணிக்கப்படுகின்றன. இவற்றில் 286, 386, 486 Pentium என்பன இந்த CPU வையே குறிக்கும். Hard disk என்பது நிரந்தர சேமிப்புக்கான பகுதியையும், memory என்பது தற்காலிக சேமிப்புக்கான பகுதியையும் குறிக்கின்றன. இந்தச் சேமிப்புகள் மெகாபைற் (MG), கிகாபைற் (GB) என்னும் அலகுகளில் அளக்கப்படுகின்றது. ஒரு MGஎன்பது 1,000,000 எழுத்துக்களையும், 1000 MB என்பது ஒரு GB ஐயும் குறிக்கும்

**Input, processing & Output:**
கம்பியூட்டருக்குத் தேவையான தரவுகளை input devices என்று அழைப்போம். Keyboard, Mouse என்பவற்றினாலோ அல்லது monitor இன் screen ஐத் தொடுவதன் மூலமாகவோ அல்லது கம்பியூட்டரின் முன்பாக இருந்து பேசுவதன் மூலமாகவோ கொடுக்க முடியும்.


**தேசா தேய்வேந்திரன் B. Eng**

**Internet:**
உலகளாவிய ரீதியில் ஏறக்குறைய 25,000 Network ஐ அடையக்கூடிய ஒரு முறையே Internet world எனப்படும். இந்த Internet எனப்படுவது ஒருவருக்கும் சொந்தமானதல்ல. இதற்கென ஒரு தலைமையகமும் இல்லை. இது ஆரம்பத்தில் அமெரிக்க அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து இயங்கி வருகின்றது. முக்கியமாக மாணவர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் உதவுவதோடு, உலகிலுள்ள பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள், வாசகசாலைகள், ஆராய்ச்சி நிலையங்கள் அனைத்தும் தகவல்களைப் பெறுவதற்காக சிறுதொகை பணத்தை மாதாந்தம் செலுத்தி Internet சேவையைப் பெறுகின்றனர்.

**Programming**: கம்பியூட்டர் program என்பது எங்களுக்குத் தேவையான முடிவுகளைப் பெறுவதற்குக் கம்பியூட்டரை இயங்கும்படி செய்வதற்கான Step-by-step instructions ஆகும். சில விதிமுறைகளைப் பாவித்தே கம்பியூட்டருக்குத் தேவையான உத்தரவுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு விதமான விதிமுறையும் programming language என்று அழைக்கப்படுகின்றன. இன்று எம்மத்தியில் CoBol, Pascal, C, C++, Visual Basic, Clippes, Java போன்ற பலவிதமான programming languages பாவிக்கப்படுகின்றன. இரண்டாயிரம் ஆண்டானது ஆரம்ப காலத்தில் உருவாக்கப்பட்ட கம்பியூட்டர்களுக்குச் சவால் விடும் ஆண்டாக அமையப்போவதை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஆரம்பத்தில் எழுதப்பட்ட கம்பியூட்டர் program யாவற்றிலும், திகதிகள் 2000 ஆண்டு வரையுமே குறிக்கப்பட்டுள்ளன.

ஜனவரி 1, 2000 ஆண்டிற்குப் பின்னர் தொடர்ந்து இவற்றைப் பாவிக்க வேண்டுமேயானால், பல வங்கிகளிலும் பாரிய நிறுவனங்களிலும் RPGLL, CoBol போன்ற மொழிகளில் எழுதப்பட்ட programs இல் மாறுதல்கள் செய்யப்பட வேண்டுமென்பதும், அப்படியான கம்பியூட்டர் பாவிக்கும் நிறுவனங்களுக்குப் பாரிய செலவுகள் ஏற்படுமென்பதும் தவிர்க்கமுடியாதவை. அமெரிக்காவில் இத்தகைய மாற்றங்களைச் செய்வதற்கு 600 பில்லியன் டாலர்கள் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

கம்பியூட்டரின் முன்னாலிருந்து பேசும்போது, அந்தப் பேச்சானது, முதலில் அலை வடிவில் மாற்றப்பட்டு, பின்னர் ஒலிபெருக்கியினால் உள்ளெடுக்கப்பட்டு, அதன் பின்னர் பேச்சை உணரக்கூடிய ஒரு மின்சுற்று அடங்கிய board இனால் கம்பியூட்டருக்கு விளங்கக்கூடிய முறையில் 0 அல்லது 1 ஆக மாற்றப்பட்டுக் கம்பியூட்டர் திரையில் விழுகின்றது.

கம்பியூட்டருக்கு இடப்படும் உத்தரவுகள், CPU வினால் process பண்ணப்பட்டு output device ஆகிய monitor, printer, plotter போன்றவற்றினால் பாவனையாளர்களுக்கு வழங்கப்படுகின்றது. அண்மைக் காலங்களில் கம்பியூட்டர் துறையில் multi media , networking, internet போன்ற பதங்கள் அடிக்கடி உபயோகிக்கப்படுவதை நீங்கள் அவதானிப்பீர்கள். அவற்றின் அர்த்தங்கள், உபயோகங்கள், பற்றிச் சற்று நோக்குவோம்:

**Multi media(பல்லூடகம்):** சாதாரணமாகக் கம்பியூட்டர் என்றதும், அதனை அலுவலகங்களில் பாவிக்கும் ஒரு கருவியாகவே பார்க்கின்றோம். இன்றைய நவீனமான உலகம் சுற்றலையை மாற்றி, கம்பியூட்டர்களை ஒரு பாட்டுக் கேட்கும் கருவியாக, ஒரு படம் பார்க்கும் கருவியாக, அல்லது ஒரு பொழுது போக்கும் சாதனமாக உருவமைத்துள்ளது. இவ்வாறு மாறுவதற்குத் தேவைப்படும் உபகரணங்களான CD-Rom, Sound Card, Speakers என்பவற்றையே Multi Media உபகரணங்கள் என்று அழைக்கின்றோம்.

**Networking:** கம்பியூட்டர் யுகம் தொடங்கிய காலத்திலிருந்து IBM என்ற கம்பியூட்டர் கம்பனியின் பெயரும் அடிபடுகின்றது. IBM அனது main frame கம்பியூட்டர்களுக்குப் பிரபல்யமாக விளங்கியது. வங்கிகள் போன்ற பெரிய நிறுவனங்கள் இவற்றைப் பாவித்தன. கேபிள்களைப் பாவிப்பதன் மூலம் பல கம்பியூட்டர்களைத் தொகுத்து, அவைகளுக்கிடையே தொடர்பையும், அதே தொடரில் இணைக்கப்பட்டிருக்கும் ஒரு பிறின்டர் போன்றவற்றை அத்தொடரில் இணைக்கப்பட்டிருக்கும் ஏனைய பாவனையாளர்களும் பாவிக்கும் முறையே Networking எனப்படும். இம்முறை சிக்கனமாக இருப்பதாலும், இலகுவாக இணைக்கப் படக்கூடியதாக இருப்பதாலும் பல நிறுவனங்கள் இம்முறையைப் பின்பற்றுகின்றன. இதனால், IBM கம்பனியின் main frame பாவனையில் கணிசமான அளவு குறைந்திருப்பதும், Network துறையில் முன்னோடிகளான Novell, Microsoft என்பவற்றின் பாவனை படிப்படியாக அதிகரித்து வருவதும், அத்துறையில் வேலைவாய்ப்புகள் அதிகரித்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நன்றி: தமிழர் தகவல்
- கனடா -

---

இந்துமகேஷ்
எழுதும்
## இரட்டைவேடம்
நெடுங்கதை

இணுவையூர்
க.விக்கினேஸ்வரன்
எழுதும்
## தியாகத்தின்பாதையில்...
தொடர்கதை

எழிலன்
எழுதிவரும்
## சத்தியத்தின் சுவடுகள்

எம்மெஸ்ஸார்
எழுதிவரும்
## சமரசத்தில் ஒரு சமாச்சாரம்

ஆகிய தொடர்கள்

## அடுத்த இதழில்....


83.பூவரசு ஆண்டுமலர் 1999

# இலக்கியம்


இலக்கியம்..
மக்கள் பார்வையில் இலகுவாக்கப்பட்ட படைப்பு!
மக்களுக்காக,அவர்களின் நாளாந்த படப்பிடிப்பு.
அவர்களின் தேவைகளோடும், அதன் ஜீரணிப்போடும்
வாழ்க்கையோடு மையப்படுத்தப்பட்ட கண்டுபிடிப்பு எழுத்து...
ஆதலினால்...
தமிழீழ விடுதலைப்பாதையினையும்
அதன் வடிவங்களையும்
குத்திட்டு, கண்வில்லைகளில் நிழலாக்கி
நெஞ்சங்களில் நிறைந்திருக்கச் செய்யும்
உன்னத ஆசான்...
நின்றுவிடாமல்
தமிழன் பங்களிப்பினையும் பகிர்ந்து கொள்ளலுக்குமான
தூரமான சரியான புரிந்துணர்வை புரியவைத்து
அதில் நியம் புரியவைக்கும் நிதர்சனம்தான் இலக்கியம்.

ஆனால்...
படைப்புக்கள் என்று மஞ்சளையும் மானத்தையும் பூசி
கிளப்பு வெளிச்சத்திற்கும், சீழ்வடியும் கற்பனைக்கும்
சிந்தனையை அழிவில் அமுக்கி சீரழிக்கும்
சாக்கடை வழியல்ல இலக்கியம்...
ஜீரணிக்க முடியாத காமத்தின்பால்
மூன் அட்டைகளில் ஒட்டிய அட்டையாக
தீயின் நாக்குகளுக்கு தீனியாக வேண்டிய
தீய பொழுதுபோக்கும் தாள்களல்ல இலக்கியம்.
பழமை வாதங்களையும் கண்மூடித்தனங்களையும்
கட்டுக்கட்டாய் பரப்பி மூட நம்பிக்கை முழுதுமாய்ப் புகுத்தி
மதவெறி, நிறவெறி, ஜாதிவெறிபோன்ற
மனித நாசங்களை நடுநிலை என்ற பம்மாத்துள் அடக்கி
படைக்கிறோம் என்ற பிரிவினையை வளர்த்தல் அல்ல இலக்கியம்.
மேற்குலக நாட்டு மொழியினையும் கலாச்சாரங்களையும் போற்றி
பொற்கேடயம் வழங்கி வக்காலத்து வாங்கிபெரிதாக்கி
பெற்ற நாட்டுக்கும் தேமதுரத் தமிழுக்கும்
வசைபாடலல்ல இலக்கியம். பூவரசாக நல்லதிழலாகி
தலை உரமாகி உடல் விறகாகி
தன்னையே தமிழனுக்கு படைக்கும் செயல்...
அதுதான் இலக்கியம்..

-வைத்தி பரா.



# மனிதன் மாறுகிறான்.



மனிதன்
அவன் ஒரு விந்தை
எப்படி அறிவது
அவனது நெஞ்சை
நேர் எதிரில் சந்தித்தால்
சிரித்து சமாளிப்பார்
சற்று விலகியதும்
சேற்றை வாரி இறைக்கின்றார்.

மனதில் என்னவென்று
கணணியும் அறியாது
விடை இல்லா வினா அவன்
ஆண்டவனுக்கு ஆறுமுகம்
மனிதனுக்கு ஆயிரம் முகம்
நீருக்குள் சென்றாலே
குதறிடுமாம் முதலைகள்
தொட்டாலே சீறுமாம்
விடம்கொண்ட நாகமது

மிருகத்தின் குணங்களை
மனிதன் கற்றதினால்
மனச்சாட்சி இல்லாமல்
வினை நூறு செய்கின்றான்
சற்றுக் கண் அயர்ந்தால்
இடுப்புத் துணியை
உருவி எடுத்திடுவான்

இராப்பகலாய் பாடுபட்டு
தனைவருத்தி உழைப்பவனை
படுகுழிக்குள் தள்ளவே
திட்டங்கள் போட்டிடுவான்


பொய்கூறிப் பகைவளர்க்க
நெய்யாக உடன் உழைப்பார்
நல்லவரை உபார்த்தி
ஏணியாய் இல்லாவிடினும்
அவன் உயர்வை புதைத்தி
மண்வெட்டியாய் மாறுகிறான்

பாதையிலே ஒளியூட்ட
மின்விளக்காய் இல்லை எனின்
மின்மினியாய் மாறானோ
அதுவும் தான் இல்லை எனின்
தடைகளைப் போடாமல்
உன்வழியே நடையைக்கட்டு

மானிடனாய்ப் பிறப்பது
மிகவும் அரிதாகும்
மானிடனாய் பிறந்துவிட்டால்
மனிதனை இடர்படுத்தாமல்
மனச்சாட்சியை மதித்து
மனிதநேயத்தை வளர்த்திடுவாய்
என்றும் நன்றே செய்
நன்றை இன்றே செய்
அன்றுதான் உனை
அனைவரும் போற்றுவார்.

-கு. ஞானக்குமாரன்

# பூவரசு



## எட்டாவது ஆண்டு நிறைவு

### சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகளில் பரிசுபெறும் படைப்புக்கள், படைப்பாளர்கள்பற்றிய விபரங்கள்!

## அடுத்த இதழில்!

*போட்டிகளில்பங்குபற்றிச் சிறப்பித்த அனைவர்க்கும் எங்கள் மனப்பூர்வமான நன்றிகள்.!*

-பூவரசு கலை இலக்கியப் பேரவை-ஜேர்மனி



67ம்பக்கத் தொடர்ச்சி

சுதா வந்தாள்.
அவளது நோக்கத்திற்கு எதிரியாக மலேரியா நோய் அவளைத் தாக்க, அதனால் அவளது உடல்நிலை பாதிப்படைய, அவளால் களத்தில் நின்றுபிடிக்க முடியாது எனத் தீர்மானிக்கப்பட்ட நிலையில்.... எதிர்பார்ப்பு ஈடேறாத விரக்தியில்... மேலும் சமூகப்பணி என்ற பெயரில் அங்கிருப்பதிலும் பார்க்க தாயுடன் இருக்கலாம் என்ற முடிவில் அவள் வந்தாள்.
தாயுள்ளம் மலர்ந்தது.
இனியும் சுதாவை அவளது போக்கில்விட்டால், மறுபடியும் ஏதாவது செய்துவிடுவாள் என்ற நிலையில் சுதாவுக்கு மாப்பிள்ளை தேட ஆரம்பித்தாள்.
வெளிநாட்டு மாப்பிள்ளை.
பெயர் வரதன்.
தனது நோக்கங்கள் யாவும் தடைப்பட்ட நிலையில், தாயின் விருப்பமாவது நிறைவேறட்டும் என்ற எண்ணத்தில் சம்மதித்தாள் சுதா.
கூடிய விரைவில் சுதா ஜேர்மனியை அடைந்தாள்.

சுவர்களில் ஆங்காங்கே விடுதலைவீரர்களின் படங்கள் மாட்டப்பட்டிருந்தன.
வானொலியில் எழுச்சிப் பாடல்கள் இசைபாடிக் கொண்டிருந்தன. அலுமாரி நிறைய வீரமறவர்களின் நிகழ்வுகளை ஆதாரத்துடன் பறைசாற்றும் வீடியோக் கசற்றுகள்.
அது வரதனின் வாசஸ்தலம்.
புகலிட நாட்டில் விடுதலைவீரர்களில் அளவற்ற பாசம்வைத்து, அவர்களின் புகழ்பாடும் வரதன் தனக்குத் துணையாகக் கிடைத்ததை எண்ணி அகமகிழ்ந்தாள் சுதா.
"போராட்டத்தில் கலந்துகொள்ளாது போனால் என்ன?! இவருடன் இணைந்து விடுதலைக்காகப் பாடுபடலாமே" என்ற எண்ணம் மனதுக்கு நிம்மதியைத் தந்தது.
"சுதா! அடுத்தகிழமை ஒரு விழாவிலை விடுதலையைப்பற்றிப் பேசப்போறன்... உமக்கேதாவது விசயம் தெரிஞ்சால் எழுதி வையும்..."
மேடைகளில்கூட எனது நாட்டு விடுதலைக்காகப் பேசுகிறான்.
மனம் பெருமைப்பட்டது.
ஆனால்... அந்தப் பெருமை விரைவில் சிறுமையானது.
ஒருநாள் அவன் நிறைவெறியில் வந்தான்.
ஜேர்மனிக்கு வந்த மூன்று மாதங்களில் அவனை அந்தக் கோலத்தில் காண்பாள் என்று சுதா எண்ணிப் பார்த்ததே இல்லை.
எண்ணக் கோட்டையிலே எங்கோ ஒரு சரிவு ஏற்பட்டதாக உணர்ந்தாள்.
"சுதா! நீ இயக்கத்திலை இருந்தனியாம்... இதை ஏன் என்னட்டைச் சொல்லேலை..." என்று கத்தினான் வரதன்.
"நீங்கள் கேக்கேலை..."
"ஓ... நான் என்னவோ நீ குடும்பப் பெண்ணாய் இருப்பியெண்டு நினைச்சன்..." என்று ஆத்திரத்துடன் கத்தினான் வரதன்.
"போராட்டத்தில் இணைந்தால் அவள் குடும்பப்பெண் இல்லையா...?!"
அவளது மனமேடையில் இருந்து அவன் அதளபாதாளத்தில் வீழ்ந்தான்.
போலி... மற்றவரின் நிழலில் அற்பப்பெருமை தேடும் விசயமில்லாத வெற்றுத்தான் இவன்... விடுதலையை வேசமாக்கிப் புகழ்தேடும் புழுவாக அவன் நெளிந்தான்...

வேசதாரி... தாயக மக்களின் அவலங்களையும் விடுதலை வேட்கைகளையும் தியாகங்களையும் தான் பெயர்பெறவும்... மேடை காணவும் மூலதனமாக்கும் சர்ப்பமாக அவன் தெரிந்தபோது— சுதாவின் உள்ளத்தில் தீ பற்றிக் கொண்டது.

பிராங்பேர்ட் விமானநிலையம்.

எல்லாமே முடிந்துபோய்விட்டது. முடிச்சுக்களுக்காக முழுவியளம் பார்த்து உற்றம் சுற்றம் வாழ்த்த.பெற்றவள் பாசமழையெனக் கண்ணீர்சிந்தி விழிசிறுத்து உச்சிமோர்ந்து வழியனுப்பவந்தவள், முடிச்சுகளுக்குப் பதில் சுருக்குகள் தந்த அதிர்ச்சிகளுடன் எல்லாமே முடிந்துவிட்டதாக... அந்த முடிவில் புதிய வழி திறந்துவிட்டதான தீர்மானத்துடன் மூன்று மாதங்களில் மீண்டும் பிராங்பேர்ட் விமானநிலையத்தில் சுதா!

□□□

## கவிதாஞான வாரிதி

திருமதி கோசல்யா சொர்ணலிங்கம்

தமிழக, தமிழீழ கலாச்சாரப்பேணலில் 31.10.98 அன்று நிகழ்ந்த பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்ச்சிக்காக மேற்கு அவுஸ்திரேலியாவுக்கு சிறப்பு வருகைதந்த ஜேர்மனி முல்கைம் 'தமிழர் விடுதலை எழுச்சிக்கலைச்செல்வி' திருமதி கோசல்யா சொர்ணலிங்கம் அவர்களுக்கு அனைத்துலக இந்துமத குருபீடத்தின் சார்பிலும் அவுஸ்திரேலிய இந்துக்குருமார் சபையினரின் சார்பிலும் 11.11.98 அன்று மேற்படி சபைகளின் மேற்கு அவுஸ்திரேலிய மாநிலப் பொறுப்பாளராகிய, சைவ மஹாசபை ஸ்ரீபாலமுருகன் தேவஸ்தான தலைமைச் சிவாச்சாரியார் டாக்டர்.நா.சோமாஸ்கந்தகுருக்கள் ஊடாக 'கவிதாஞானவாரிதி' என்னும் சிறப்பு விருது வழங்கப்பட்டது.
எழுத்துலகில் இன்னும்பல விருதுகளை அவர்பெற பூவரசு வாழ்த்துகிறது.




## நூல்கள். . . .
## சொற்பொழிவுகள். .

தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களான
அகிலன், நா.பார்த்தசாரதி,இந்திரா பார்த்தசாரதி,
கண்ணதாசன்,பாலகுமாரன்,ஜெயகாந்தன்,சுஜாதா,
மற்றும் லஷ்மி,சிவசங்கரி,இந்துமதி ஆகியோரின்
நாவல்கள்,சிறுகதைகள்-
கவிஞர் கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம்,மனவாசம், வனவாசம்
உட்பட 50க்கு மேற்பட்ட நூல்கள்-
பாரதியார் கவிதை,கதை,கட்டுரைகள்
பாரதிதாசன் கவிதை,கதைகள்,கட்டுரைகள்

கவிஞர் கண்ணதாசனின் திரைப்படப்பாடல்கள்
கவிஞர் வைரமுத்துவின் திரைப்படப்பாடல்கள்
கவிஞர் பட்டுக்கோட்டைகல்யாணசுந்தரத்தின் திரைப்படப்பாடல்கள்
கண்ணதாசன்,வைரமுத்து, மேத்தா, நா.காமராசன் ஆகியோரின்
கவிதைத்தொகுதிகள் மகாபாரதம், இராமாயணம், பகவத்கீதை,
திருக்குறள் உட்பட உங்களுக்குத்தேவையான அனைத்து நூல்களுக்கும்
எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.
அத்துடன் தமிழகத்திலிருந்து வெளியாகும் வார,மாத சஞ்சிகைகளும்
(தாமரை,கணையாழி,இலக்கியபீடம் உட்பட)
தரமான இலக்கிய சஞ்சிகைகளும்

தேவைப்படுவோர் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
**S.Kandasamy,**
**Langlütjensand 2,**
**28259 Bremen,Germany.**
தொலைபேசி—0421—585042

□ கிருபானந்தவாரியாரின் சொற்பொழிவுகள்,
கவிஞர் கண்ணதாசனின் சொற்பொழிவுகள்
ஆடியோக் கசற்றுகளிலும் பெற்றுக்கொள்ளலாம்
□ பகவான் ரஜனீஷ்(ஓஷோ)எழுதிய 30க்கும் மேற்பட்ட நூல்கள்.

# பிறேமன் தமிழர் விளையாட்டுக்கழகம்

தலைவர்:
திரு. ஜி. கொல்வின்

செயலாளர்:
திரு. நவரட்ணராஜா
பொருளாளர்:
திரு.அன்ரன் ராஜதுரை
உபதலைவர்:
திரு.எம். ஜெசிறீதரன்
உபசெயலாளர்:
திரு. எம் .ஜெயபாலன்
நிர்வாகசபை உறுப்பினர்கள்:
திரு. தயாளசேகர்
திரு. ஜோர்ஜ் ராஜகோபால்

கிரிக்கட் பொறுப்பாளர்:
திரு.சு.மகேந்திரமூர்த்தி
உதைபந்தாட்டப்பொறுப்பாளர்:
திரு. இரா. சுவெந்திரராஜா
கிரிக்கெட் குழுத்தலைவர்:
திரு. கே. மொஹமட் ஹமீட்
உதைபந்தாட்டக் குழுத்தலைவர்:
திரு. எஸ். ரமேஷ்.


காப்பாளர்கள்:
திரு.இரா. சுவெந்திரராஜா
திரு.எஸ். சீவரட்ணம்.

(புதிய நிர்வாகசபைக்கான தேர்தல் 06.12.98 அன்று நடைபெற்றது)


தொடர்பு முகவரி
Mr.P.Navaratnarajah,
Tamilen Sports Clup,
Kirchhuchtinger Str-173, 28259 Bremen, Germany.
Tel 0421-5669335




## ஹிந்து சங்கரர் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலயம். (ஐரோப்பா)



Sketch of the Proposed Hindu Shankarar Sri Kamadchi Ampal Tempel e.V. (Europa)
ஹம் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் புதிய ஆலய மாதிரி வரைபடம்


ஹிந்து சங்கரர் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலயம். (ஐரோப்பா)
Siva Sri V.A.S. Paskarakurukkal. Siegenbeck Straße. 04, 59071 Hamm - Uentrop.
Tel:. 02388 / 302223. Fax:.02388 / 302224.


**அன்பார்ந்த ஆன்மீகப் பெருமக்களுக்கு பணிவான வேண்டுகோள்.**

பக்தப் பெருமக்களே!

ஜேர்மனி, ஹம் ஸ்ரீ காமாஷி அம்பாள் ஆலயம், சைவத்தையும் தமிழையும் பக்தியையும் மிகச்சிறப்பாக குழந்தைகளும் பெரியவர்களும் ஏற்றுக் கொள்ளும்முறையில் மதபோதனைகளும் ஹிந்துமதத்தின் தத்துவங்களையும் போதித்துவருவது அனைத்துநாட்டுமக்களும் அறிந்ததொரு உண்மையே.
இவ்வாலயம் தொடர் திருப்பணியாக இராஜகோபுரத்துடன்கூடிய பெரியதொரு ஆலயத்தை ஜேர்மன் நாட்டில் ஹம் என்ற நகரில் அமைக்கவுள்ளது.
இது நாம் எல்லோரும் முன்பு செய்த பாக்கியமே என்று நினைக்கின்றோம்.
இவ்வாலயம் 27மீற்றர் நீளமும் 27 மீற்றர் அகலமும் கொண்டதாகும்.இதற்குள் வினாயகர் உட்பட பரிவார தெய்வங்களும் யாகசாலை,வசந்தமண்டபம்,பாகசாலை அனைத்தும் அடங்கும். இவ்வாலயம் ஸ்ரீ காமாஷிஅம்பாளையே முழுமுதற் தெய்வமாக அமைந்ததாகும்.இவ்வாலயத்திற்குரிய மொத்தக் காணியின்அளவு 4,500 சதுரமீட்டர்அளவாகும். இதனுடைய திருப்பணி வேலைகள் மிகத்துரிதமாக ஆரம்பிக்கவுள்ளது.இவ்வேளையில் பக்தர்களாகிய உங்களது எல்லாருடைய பணஉதவியையும் எதிர்பார்க்கின்றோம். சிறுதுளி பெருவெள்ளம். இவ்வாலய கட்டிடவேலைகள் அனைத்தையும் இந்தியாவிலுள்ள Geeth Export and Import கம்பனி பொறுப்பெடுத்து 15 சிற்பக்கலைஞர்கள் இந்தியாவிலிருந்து ஜேர்மன் வருகைதந்து ஆலயவேலைகள் செய்துதர ஒப்பந்தம் எடுத்துக் கொண்டுள்ளார்கள்.

மிகுதி வேலைகளை ஜேர்மன் நாட்டிலுள்ள Arch-und-ing Büro-Heinz R.Eich hordst (Architeht B.D.B) என்ற கம்பனி பொறுப்பெடுத்துச்செய்ய உள்ளது.
இதனுடைய செலவுத்தொகை 30லட்சம் மார்க்(DM) ஆகும். இதைவிட இந்தியாவிலிருந்து வருகைதரும் சிற்பக்கலைஞர்களின் விமானச்செலவு ஆள் ஒன்றிற்கு 30 ஆயிரம் ரூபாமட்டில் வரும்.(1500DM)
ஆகவே அன்பர்களே!
மதங்களும் பண்புகளும் தானதருமங்களும் மறைந்துகொண்டு போகும் இவ்வேளையில் பெரியவர்களாகிய நாம் இளைய சமுதாயத்திற்கு ஒரு வழிகாட்டியாக இருத்தல் வேண்டும்.
பகவான் கீதை 3வது அத்தியாயத்தில் கூறுகிறார்.
"உனக்காக எதையும்செய்யாவிடினும் உலகம் நல்வழியில் செல்வதற்காகவாவது நீ செயல்படவேண்டும். அர்ச்சுனா உலகில் எனக்கென்றுசெய்யவேண்டிய காரியம் எதுவும் கிடையாது. நான் அடையவேண்டிய பொருளும் கிடையாது.ஆயினும் நான் சதா கருமம்புரிகின்றேன். ஏன்தெரியுமா? உலகம் நல்வழியில் நடப்பதற்காக. நான்மட்டும் சும்மா இருந்துவிட்டால் எல்லோரும் என்னைப்பார்த்து சும்மா இருந்து விடுவார்கள். அவர்களை நான் பாவியாக்கிவிடுவேன்" என்கிறார்.
(பகவத்கீதை 3அ.கீ.)
ஆகவே அன்பர்களே!
தங்களுடைய நிதியுதவியை எதிர்பார்க்கிறோம்.
1999ல் ஆங்கிலம் வைகாசிமாதம் கடைக்கால் நாட்டுவிழாவை நடத்தலாம் என்று எதிர்பபார்க்கிறோம். எல்லாம் தேவிதுணையுடன் பக்தர்களின் அன்புக் காணிக்கையுமே இதன் வளர்ச்சியாகும்.
ஆகவே பக்தர்களாகிய நீங்கள்அனைவரும் ஆலயத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலப்பரப்பில் உங்களால் முடிந்தளவு சதுரமீற்றரை வாங்கித் தானம்செய்யுமாறு மிகவும்தாழ்மையாக வேண்டுகிறோம்.
ஒரு சதுர மீற்றரின் விலை 200DM ஆகும்.இப்பணத்தை முடிந்தால் உடனடியாவும் செலுத்தலாம். சிரமம் ஏற்படின் ஒருமாத அவகாசத்தின் பின்பாவும் செலுத்தலாம் என்பதை அறியத்தருகின்றோம்.
உங்கள் ஒவ்வொரு சதுரமீற்றர் நிலத்திற்கும் ஒவ்வொரு ஸ்ரீசக்கர யந்திரம் வழங்கப்படும்.அதில் உங்கள் பெயர்கள்,விலாசங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கும். இவ்வியந்திரம் அத்திவாரம்போடுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாகவே உங்களுக்கு வழங்கப்படும்.இந்த ஸ்ரீசக்கர யந்திரத்தை பக்தர்களாகிய நீங்களே உங்களுடைய கையினால் அத்திவாரம்போடும் நாளன்று ஆலயத்தில் சமர்ப்பிக்குமாறும் வேண்டுகிறோம்.

இவ்வண்ணம்
ஆலய குரு,
சிவஸ்ரீ இரேவணசித்த பாஸ்கரக்குருக்கள்.
ஸ்ரீவித்யா உபாசகர், ஹம். ஜேர்மனி.

913/09

http :\\www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
பொள்ளாச்சி நசன்

பிறேமன் Offener Kanal
முதலாவது தமிழ்த் தொலைக்காட்சி

# கலை மாலை

எதிர்வரும் 27.01.1999 புதன்கிழமை மாலை அதன் 100வது நிகழ்ச்சியை ஒளிபரப்புகிறது.

பிரதிமாதமும் 2வது 4வது புதன்கிழமைகளில் மாலை
18.30 முதல் 19.00 மணிவரை
கலைமாலை
தமிழ்த்தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பிறேமன் மாநிலத்தில் நீங்கள் பார்த்து இரசிக்கலாம்.

தொடர்புகளுக்கு
P.Pathmaharan,
Neuwieder Str.1
28325 Bremen,
Germany.

விரைவில் வெளிவருகிறது!

# அவர்களும் இவர்களும்!

## இந்துமகேஷ்

எழுதி

பூவரசு கலை இலக்கிய மாலைப்பொழுதுகளில்
அரங்கேறிய
கவிதை நாடகங்களின் தொகுப்பு

நூல்வடிவில்!

வெளியீடு:

பூவரசு கலை இலக்கியப்பேரவை -ஜெர்மனி.